T
2097

T. 2097

MALAI UNIVERSITY TAMIL SERIES No. 6.

SILASRI KASIVASI
SWAMINATHA THAMBIRAN SWAMIGAL AVERGAL
OF TIRUPPANANDAL MUTT ENDOWMENT PUBLICATIONS III.

கவிச்சக்கிரவர்த்தி

கம்பர் நினைவுப் பரிசுத் தொகுதி

பதிப்பாசிரியர்:
வித்துவான் A. பூவராகம் பிள்ளை
(Senior Tamil Pandit)

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு
1944

கவிச்சக்கிரவர்த்தி

கம்பர் நினைவுப் பரிசுத் தொகுதி

பதிப்பாசிரியர் :

வித்துவான் A. பூவராகம் பிள்ளை

(Senior Tamil Pandit)

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

1944

THE
TRICHINOPOLY UNITED PRINTERS, LIMITED,
TRICHINOPOLY

முகவுரை

திருப்பனந்தாள் மடத்துத் தலைவர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி, சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள், மக்கள் தமிழ் நூல்களிலும், சைவ சமய நூல்களிலும் சிறந்த புலமை படையவேண்டுமென்று கருதி, அதற்குப் பல வழிகள் அமைத்துள்ளார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஆண்டுதோறும் நடத்தும் தனித்தமிழ் வித்துவான் தேர்வில் முதன்மை பெறுவோர்க்கு ஆயிரம் ரூபாய் பரிசு வழங்குமாறு அப்பல்கலைக் கழகத்தாரிடம் அதற்குரிய முதற்பொருள் அளித்துள்ளார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக வாயிலாகப் பல பரிசுகள் வழங்க வழி செய்துள்ளார்கள். தமிழ்ப் பயிற்சியோடு, அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியிற் சேர்ந்து, தேவாரத்தை இசையோடு பாடுவதிற் பயிற்சிபெற்று அத்தேர்வில் முதன்மை பெறுவோர்க்கு ஐந்நூறு ரூபாய் பரிசு வழங்க வழிசெய்துள்ளார்கள்.

மற்றும், அண்ணாமலைப் பல்கலைக் கழகவாயிலாகச் சேக்கிழார் நினைவுத் தமிழ்ப் பரிசு முதலிய பல நினைவுப் பரிசுகள் வழங்க வழி செய்துள்ளார்கள். அவற்றுள் ஒன்று, கவிச் சக்கிரவர்த்தி கம்பர் நினைவுத் தமிழ்ப் பரிசு என்பது. இதற்கென்று மூவாயிரம் ரூபாய் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரிடம் ஒப்புவித்துள்ளார்கள். இதற்கு வட்டியாகக் கிடைக்கும் தொகையிலிருந்து ஆண்டுதோறும் நூறு ரூபாய் பரிசளிக்குமாறு செய்துள்ளார்கள்.

இதற்காகக் கவிச் சக்கிரவர்த்தி கம்பர் நினைவுப் பரிசுத் தொகுதி என்ற இத்தொகை நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்குரிய விதிப்படி சீவகசிந்தாமணியில் 400 வரிகளும், (100 பாடல்கள்) கம்பராமாயணத்தில் 400 வரிகளும் (100 பாடல்கள்) சிலப்பதிகாரத்தில் 200 வரிகளும், ஏனைய 32 நூல்களிலிருந்து 2000 வரிகளும் (500 பாடல்கள்) ஆக 3000 வரிகள் (750 பாடல்கள்) தொகுக்கப் பட்டுள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் ஆண்டுதோறும் இத் தொகை நூலில் தேர்வு நடத்தப்பெறும். இத் தேர்விற் கலந்து கொள்ள விரும்புவோர், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர்

முதற் பகுதித் தேர்விலாயினும், சென்னைப் பல்கலைக் கழகத் தனித் தமிழ் வித்துவான் முதற் பகுதித் தேர்விலாயினும் தேர்ச்சிபெற் றிருத்தல்வேண்டும். பிற பல்கலைக்கழகங்கள் நடத்தும் தேர்வுகளில் மேற்கண்ட தேர்வுக்கொத்த தகுதியுடைய தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கம், பாலபண்டிதத் தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களும் இத் தேர்விற் கலந்துகொள்ளலாம்.

கவிச் சக்கிரவர்த்தி கம்பர் நினைவுத் தமிழ்ப் பரிசுக்குரிய இத் தொகை நூல் தேர்வு, வாய் மொழி மூலமாகவும், எழுத்து மூலமாக வும் நடைபெறும். இத் தேர்விற் கலந்துகொள்வோர் இத் தொகை நூலில் உள்ள 3000 வரிகளையும் (750 பாடல்கள்) மனப் பாடம் செய் திருத்தல் வேண்டும். அவை எல்லாவற்றிற்கும் கருத்து, பதவுரை, சொற் பொருள், விளக்க வுரை, முதலியன அறிந்திருத்தல் வேண்டும். கம்ப ராமாயணப் பகுதியாக உள்ள 400 வரிக்கட்கும் (100 பாடல்கள்) இடத்தோடு பொருந்த விரிவான விளக்க வுரை அறிந்திருத்தல் வேண்டும். வாய் மொழித் தேர்வில் செய்யுட் பகுதிகளை நன்கு இசையோடு பாடுபவர்கட்குத் தனியாக 10 மதிப்பெண் உண்டு. தேர்வில் 100-க்கு 60 மதிப்பெண்ணுக்குக் குறையாமற் பெற்று, அங்ஙனம் பெறுவோருள் முதன்மை பெறுவோரே இப்பரிசுக்குரியவ ராவர்.

நம்மனோர் மிகப்பலர் இத்தேர்விற் கலந்துகொண்டு இதனை நிறுவிய சான்றோர் நினைவு நன்கு நிறைவெய்துமாறு செய்வார்களாக.

பதிப்பாசிரியர்.

APPENDIX

APPENDIX C—1

Kavichakravarti Kambar Memorial Tamil Prize.

BY

HIS HOLINESS SILASRI KASIVASI
SVAMINATHA TAMBIRAN SVAMIGAL AVL.
OF TIRUPPANANDAL.

1. This Endowment was founded by His Holiness Silasri Kasivasi Svaminatha Tambiran Svamigal Avergal of Tiruppanandal to encourage the study of Kamba Ramayanam and 34 other selected books in Tamil Literature.

2. The endowment for the prize consists of 3½% non-terminable Government Promissory Notes of the face value of Rs. 3,000/- (Rupees Three Thousand only). The interest on this investment shall be utilized for the award of a prize annually of the value of Rs. 100/-. The balance of the interest after the award of the prize will be added to the corpus of the fund.

3. The following are the terms of award of the prize :—

(i) The Prize shall be awarded irrespective of sex, caste, religion and nationality.

(ii) To be eligible for the award, the following shall be the conditions :—

(*a*) A pass in the Preliminary Examination of the Vidvan course, Tamil alone, of the Annamalai or the Madras University or any other examination (of any University which has already been or may be established hereafter) which may be considered equivalent to the Preliminary Vidvan Examination of the two Universities above-named or the Bala Pandita Examination of the Madura Tamil Sangam, as a condition precedent to appearance for the test.

(*b*) First rank at the first appearance with not less than 60% of the marks in a competitive test to be conducted annually for the purpose by the Annamalai University. A selection of 3,000 (Three Thousand) lines of which 400 lines or 100 stanzas from Kamba Ramayanam, 400 lines or 100 stanzas from Jeevaka

Chintamani, 200 lines from Silappathiharam and the remaining 2,000 lines or 500 stanzas from the other 32 books in the list appended hereto, will be made once in every four years by the Annamalai University —the selections for one period of 4 years being different from those for the next period or periods of four years. At the competition (i) The first part will consist of a memory test of selections made by the examiners out of the 3,000 lines. In this oral memory test special credit will be awarded for singing the verses in correct music; for this singing the marks will be 10; (ii) The second part will consist of a test of meaning and the purport of the 3,000 lines above referred to, wherein a knowledge of the meaning of words, paraphrase, purport of the verses and the special extant notes will be tested; and (iii) The third part of the competition will consist in giving explanations with reference to the context to portions of the whole of Kamba Ramayanam including Uttara Kandam, chosen by the examiners.

(iii) If two or more competitors should be considered equally eligible for the award, lots shall be cast to decide who will have the prize or prizes of the year.

4. The Prize shall be awarded at a meeting of the Syndicate of the Annamalai University. If in any year the prize-winner is unable to be present to receive the prize, the Syndicate shall arrange to send him the prize amount. If the prize-winner dies before the prize is presented to him, the prize amount shall be paid to his legal heir or heirs.

5. The prize amount shall be paid either in cash or by cheque and shall not under any circumstances be either divided or reduced.

6. If in any year, or a series of years the prize be not awarded, from out of the annual interest of the endowment, Rs. 50/- in each year of no award shall be set apart. The entire amount so set apart shall be awarded in the subsequent year to the candidate eligible for the award along with the prize amount of that year. After setting apart Rs. 50/- as above, the balance of the annual interest shall be added to the corpus of the fund at the end of each year.

It shall be competent for the Syndicate of the Annamalai University to invest in any Government or other securities

amounts available for investment from the interest in excess over the prize amount and the capital amount of the endowment in case the Government Securities in which the amount is now invested are tendered for payment by Government."

7. If in the process of investments, the face value of the paper increases and an endowment of income results either by addition of unspent amounts under clause (6) above, or by reinvestments, such additional income shall be allowed to form distinct funds so that the interest thereon may at the discretion of the Syndicate of the Annamalai University be utilised to institute second and third prizes and, thereafter, to increase the value of each one of the three prizes.

8. The Syndicate shall at the end of each year communicate to the donor or to his successors-in-interest the name and address of the prize-winner and the amount of the prize and if in any year the prize be not awarded the amount at credit at the end of the year and shall also publish the same in an important Tamil Daily Newspaper. This deed shall be published along with the deeds relating to the Rs. 1,000/- Tamil Prize Endowment perpetuating the memory of King George V in the Madras University, the Promotion of Tamil Learning in the Province of Madras. Endowment Fund at Tanjore for Rs. 1,00,000/-, the Raja Raja Abhaya Kulasekhara Chola Maharaja Memorial Endowment, the Tiruvalluvar Niti Nul Prize Endowment, tke Sekkilar Nayanar Memorial Tamil Prize Endowment and the Silasri Kasivasi Adi Kumaragurupara Svamigal Memorial Tamil Prize Endowment in the Annamalai University made by the same Donor in every one of the editions of the publications made under the 3rd Endowment mentioned above.

9. The income from the Endowment and the accumulations thereto shall not be diverted to any other purpose.

தொடர்ந்த நம்பர்.	நூல்களின் பெயர்கள்.	நூலாசிரியர்களின் பெயர்கள்.
1.	திருமுருகாற்றுப்படை.	
2.	பொருநராற்றுப்படை.	
3.	சிறுபாணாற்றுப்படை.	
4.	பெரும்பாணாற்றுப்படை.	
5.	முல்லைப்பாட்டு.	
6.	மதுரைக்காஞ்சி.	

தொடர்ந்த நம்பர்.	நூல்களின் பெயர்கள்.	நூலாசிரியர்களின் பெயர்கள்.
7.	நெடுநல்வாடை.	
8.	குறிஞ்சிப்பாட்டு.	
9.	பட்டினப்பாலை.	
10.	மலைபடுகடாம்.	
11.	நற்றிணை.	
12.	குறுந்தொகை.	
13.	ஐங்குறுநூறு.	
14.	பதிற்றுப்பத்து.	
15.	பரிபாடல்.	
16.	கலித்தொகை.	
17.	அகநானூறு.	
18.	புறநானூறு.	
19.	யசோதரகாவியம்.	
20.	சூளாமணி.	தோலாமொழித் தேவர்.
21.	மணிமேகலை.	
22.	சிலப்பதிகாரம்.	
23.	சீவகசிந்தாமணி.	
24.	பெருங்கதை	கொங்குவேளிர்.
25.	மேருமந்தர புராணம்.	வாமன முனிவர்.
26.	வசவ புராணம்.	
27.	தணிகைப் புராணம்.	கச்சியப்ப சுவாமிகள்.
28.	கல்லாடம்.	கல்லாடனார்.
29.	தேம்பாவணி.	வீரமாமுனிவர்.
30.	சீறாப்புராணம்.	உமறுப்புலவர்.
31.	திருவிடைமருதூர்த் தல புராணம்,	சிவக்கொழுந்து தேசிகர்.
32.	இரகுவமிசம்.	அரசகேசரி.
33.	பாகவதம்.	செவ்வைச் சூடுவார்.
34.	பாரதம்.	வில்லிபுத்தூரார்.
35.	கம்ப ராமாயணம்— உத்தரகாண்டத்துடன்.	

பத்துப் பாட்டு

(1) திருமுருகாற்றுப்படை

[1] வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன [2]மாற்றரு மொய்ம்பிற்
[3]கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய [4]முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் [5]தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக

---

1 கூரிய முனையையுடைய தோட்டி

2 பிறராற்றடுத்தற்கரிய வலி

3 காற்று எழுந்தாலொத்த வேகத்தையுடைய

4 ஒன்றுக்கொன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி (ஒன்றுக் கொன்று வேறுபட்ட நிறமும் அழகுமுடைய மணி என்றபடி.)

5 தம் தொழிலாகிய தவத்தை முடிப்பவருடைய. ("தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்" திருக்குறள்) தவம்புரிவார் உள்ளத்தில் ஆறுமுகங்களும் விளங்கித் தோன்றுமெனக்கூறி மேல் ஒவ்வொரு முகக் தின் தொழிலும் கூறுகின்றார்.

மந்திர [1]விதியின் மரபுளி வழாஅ
[2]வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
[3]மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் [4]செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே
யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
[5]மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே
யாங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை

---

1 வேதம். வேதம், மக்கள் செய்யவேண்டுவனவற்றை அரசன் ஆணை போல் விதிப்பதாகலின் அதனை விதி என்றார்.

2 அந்தணர்=வேதாந்தத்தையே நோக்குவார் என்பர் நச். அழகிய அருளுடையார் என்பர் பரிமேலழகர்.

3 வேதம் அளவற்றன என்று கூறப்படுதலின், ஈண்டு வழங்கும் நான்கு வேதங்களொழிந்த ஈண்டு வழங்காத வேதங்களினும் நூல்களினுமுள்ள பொருள்களை என்றார்.

4 திருவுள்ளத்து நிகழ்கின்ற நடுநிலைமையை மாற்றி. இறைவனுக்குத் தேவரும் அசுரரும் ஒப்பாராயினும், தேவரைத் துன்புறுத்தும் அசுரரை, அத்தேவரைக் காத்தற்பொருட்டு, இறைவன் அழித்தலின், அந்நிலையில் அவனுள்ளத்து நடுநிலைமை நீங்குவதாயிற்று.

5 மடவரல் நகை எனக்கூட்டி அறியாமை தோன்றும் நகையெனக் கொள்க. வள்ளியொடு நிகழும் நகையாதலின், அந்நிலையில் தனக்குள்ள ஆற்றல் அறிவு முதலியன தோன்றாது அடங்கியிருக்குமாதலின், அறியாமை தோன்றும் நகையென்றார். மேல்தவம் புரிவாருள்ளத்து ஆறுமுகமுந்தோன்று மெனக்கூறி, பின் ஒவ்வொரு முகத்தின் தொழிலுங்கூறினாற்போல் "ஆரந்தாழ்ந்த.........நிமிர் தோள்" என்ற பகுதியால் அசுரரொடு போர்புரியுங்கால் பன்னிரு கையும் படைக்கலமேந்து மெனக்கூறி, பின் ஒவ்வொரு முகத்திற்குரிய இவ்விருகையின் தொழில் கூறுகின்றார்.

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய
தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
வாங்கப், பன்னிரு கையும் பாற்பட வியற்றி
யந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
[1]வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
வுரந்தலைக் கொண்ட [2]வுருமிடி முரசமொடு
பல் [3]பொறி மஞ்ஞை [4]வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
[5]யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே.

---

1 கொம்பு.

2 உருமேறு; பேரிடி என்றபடி.

3 பொறியையுடையபீலி.

4 "வெல் கொடி அகவ" என்றதனால் கொடிக்கண் எழுதப்பட்ட மயில் அகவுதல் இயலாதாதலின், அவன் மயில் அவன் ஆணையாலே கொடிக்கண் இருந்து அகவ எனக்கொள்க.

5 புகழ்ந்த என்னும் தொழிலுக்கேற்ப உலகம் = உயர்ந்தோர், எனக் கொள்க.

(2) பொருநராற்றுப்படை.

உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசி
[1]றாய்வயிற் றிருந்து தாய மெய்தி
[2]யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பௌவ மீமிசைப் [3]பகற்கதிர் பரப்பி
[4]வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
[5]வாளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
[6]முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
[7]யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு
மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
றாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுது [8]முன் னிற்குவி ராயிற் பழுதின்

---

1 பிறக்கும்போதே அரசவுரிமையோடு பிறந்து.

2 முன்பு தன் வலியறியாத பகைவர்.
(எய்யாமை = அறியாமை. உரிச்சொல்)

3 பகலை உண்டாக்கும் கிரணங்களைப் பரப்பி.

4 வெப்பத்தையுடைய எல்லாராலும் விரும்பப்படும் இளஞாயிறு.
(வெம்மை = வேண்டல். உரி.)

5 ஆளியாகிய நல்ல விலங்கு.

6 பாலுண்டலைக் கைவிடாத இளம் பருவத்திலே.

7 அரவாய் அங்குழை = அரத்தின்வாய் போன்ற விளிம்பினையுடைய அழகிய தளிர்.

8 நும்முடைய வறுமை தோன்ற அவன் முன்னே நிற்பீராயின், நும் வறுமையை நும் வாயினாற் கூறும் துன்பமுறுதல் வேண்டா; அவன் காண அவன் முன்னே நிற்றல் அமையும் என்றபடி "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்றிரப்புமோரேஎ ருடைத்து" என்ற குறளின் விளக்கவுரை காண்க.

[1]ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்கி [2]நுங்
கையது கேளா வளவை யொய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
[3]கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
[4]பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
யெரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
[5]நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தே
[6]ரூட்டுளை துயல்வர [7]வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று [8]கோலின்
றாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழந்
தரவிடைத் தங்கலோ விலனே.

---

1 ஈன்றஆ தன் கன்றினிடத்துக்கொள்ளும் விருப்பம் போலும் விருப்பத்தை உடையனாய்.

2 நும்......அளவை = நும்மிடத்துள்ள கலையைத் தான் கேட்பதற்கு முன்னே. (நும் கையின்கண் உள்ள யாழோசையைக் கேட்பதற்கு முன்னே எனலுமாம்.)

3 முடிகளைக் கரையிலுடைய.

4 பூக்கமழ் கைகவிதேறல் எனக் கூட்டி சிறிது உண்டவுடன் போது மென்று கைகவித்தற்குக் காரணமான தேறல் எனக் கொள்க.

5 நூலால் கட்டப்படாத. (வெள்ளி நாராற் றொடுக்கப்பட்ட என்றபடி.)

6 சாதிலிங்கமூட்டிய தலையாட்டம். (தலையாட்டம் = குதிரையின் தலையில் அலங்காரமாக அணியப்படுவது.)

7 பிடரி மயிர்.

8 'கோலின் தாறுகளைந்து' என்பதை இன் தாறு கோல் களைந்து எனக்கூட்டுக. கோலினிடத்துள்ள தாற்றினை அகற்றி என்றும் கொள்ளலாம்,

(3) சிறுபாணாற்றுப்படை.

எரிமறிந்தன்ன நாவி னிலங் கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவி துகளவிப்ப
நீரடங்கு தெருவினவன் [1]சாறயர் மூதூர்
[2]சேய்த்து மன்று சிறிது நணியதுவே
பொருநகர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத்தன்ன
[3]அடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய னாதலுஞ்
செறிந்து விளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
வஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு மோடிய துணர்தலு
மரியே ருண்க [4]ணரிவைய ரேத்த
வறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பாள்மதி போல

---

1 "சாறயர்மூதூர்" என்றதனல் விழா மிகுதியாக நடைபெறும் மூதூர் என்பது பெறப்படும்; மகிழ்ச்சிமிக்க மூதூர் என்றபடி.

2 "சேய்த்து மன்று" என்றதனல் அணித்து மன்று என்பது பெறப்படும்; அதனல் "சிறிது நணியதுவே" என்றூர்.

3 "அடையா" என்றதைப் பொருநர் முதலிய மூன்றனேடுங் கூட்டுக; பொருநர்க்கடையாவாயினும் எனக்கொள்க. இங்ஙன் கூட்டா விட்டால் "ஆயினும்" என்பது பொருநர் முதலியோர்க்கு இழிபு குறிக்கும்.

4 "அரிவையர் எத்த அறிவுமடம் படுதலும்" என்றதனல் காதன் மகளிரிடத்து அறிவுமடம்பட்டிருத்தலும் என்றபடி. பின்னர் "அறிவு நன்குடைமையும்" என்றது அமைச்சர் முதலியோர் திரளில் அவரினும் மேம்பட்ட அறிவுடையனுக விளங்குதல் என்றபடி.

வின்னகை யாயமோ டிருந்தோற்குறுகி
[1]முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
[2]மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு
மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோக் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்
[3]காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
[4]பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
[5]பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பிற் றானின் றூட்டி
ஊர்ந்து பெயர்பெற்ற வெழினடைப் [6]பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் [7]பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசில் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப [8]மஞ்சிடைப் பரப்பித்
[9]துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
[10]செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே,

---

1 அரசன் உபாத்தியாயன் தாய் தந்தை தம் முன் முதலியோர்.
2 வீரர், மகளிருமாம்.
3 மூங்கிலினின்றும் உரித்த ஆடைபோன்ற ஆடை.
4 பாம்பின் விடம் ஏறினாற்போல மயக்கந்தரும் கள்.
5 பூத்தொழில் பரந்தகச்சையையுடைய புகழ்பொருந்திய அருச்சுனன்.
6 தேரொடு.
7 நரை எருது. (நாரை = சிறிது பழுப்பான வெண்ணிறம்)
8 நீருண்ட மேகம்.
9 நீரின்றித் தெளிந்த மேகம்.
10 பிறரிடத்து நில்லாமற் போகின்ற புகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணம்;

(4) பெரும் பாணாற்றுப்படை

நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
[1]காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ [2]னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
[3]பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
விழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழல்சூழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிலுறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரிஇச் [4]சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
[5]பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி
[6]னருந்திறற் [7]கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்

---

1 காந்தள் பாம்பணைக்கும் களிறு திருமாலுக்கும் உவமை.

2 திருவெஃகா வென்னுமிடத்து. திருவெஃகா, காஞ்சியிலுள்ள சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள் கோயில்.

3 "பாசிலை............உறைப்ப" மணற்குழிகளிலுள்ள நீரில் குருக்கத்திப்பூ வீழ்ந்து கிடப்பது பாலில் இடப்பட்ட அப்பம்போல் தோன்றும் என்றபடி.

4 "சிறுகோட்டு............நேர்தாங்கு" முழுமதியைப் பாம்பு தீண்டுதலல்லது பிறை மதியைப் பாம்பு தீண்டுதலின்மையின் இவ் பொருளுவமை. மதியைத் தீண்டுவது செம்பாம்பன்மையானும் இல்பொருளுவமையாம்.

5 அரிய முயற்சியாற் பெறுதற்குரிய துறக்கம் என்றபடி.

6 பிற தெய்வங்களிடத்தில்லாத திறல் (அருமை = இன்மை)

7 திருவெஃகாவிலுள்ள திருமால்.

காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை [1]நெய்ம்மிதி கவளங்
[2]கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்திற்
றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் [3]வழங்குநர்த் தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீணிற வுருவி னெடியோன் [4]கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரந் தோன்றிச்
சுடுமண் ணோங்கிய நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய [5]கோளி யுள்ளும்

---

1 நெய்யை ஊற்றிப் பிறபொருள்களுமிட்டுத் திரட்டிய உண்டை.

2 முதற் சூலையுடைய மந்தி.

3 தொண்டைமானிளந்திரையன் கொடையைக் கேட்டோரும் அவனிடத்துப் பரிசில் பெற்றோரும் பிறர்பால் பரிசில் விரும்பிச் செல்லாமையின் "வழங்குநர்த்தடுத்த" என்றார்.

4 "கொப்பூழ் பல்லிதழ்த் தாமரை" எனக் கூட்டிக் கொப்பூழினிடத்துத் தோன்றிய பல இதழ்களையுடைய தாமரை எனக்கொள்க. ("நின்னிற்றோன்றிய நிரையிதழ்த் தாமரை". பரி. 4-60)

5 கோளி = பூவாது காய்க்கும் மரம். பூவாது காய்க்கும் மரங்களுட் சிறந்த பலாப்போல, உலகத்து நகரங்களுட் சிறந்த பழவிறன் மூதூர் எனக்கொள்க.

பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதா
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
[1]வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
[2]வடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னுத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
[3]கச்சி யோனே கைவண் டோன்றல்.

1 வெண்கோட்டுக்குப் பிறையும், யானைப் பிணத்துக்கு மேகமும், குருதிக்குச் செவ்வானமும் உவமை.

2 பாண்டவர் விருப்பத்திற் கிணங்காமல், பாண்டவர் படையினும் மிக்க படையுடன் வந்த நூற்றுவர்போல "அடங்காத்தானையோடுடன்று மேல்வந்த ஒன்னுத் தெவ்வர் எனக்கோடல் பொருத்தம்.

3 கை வண்மையையுடைய தோன்றல் கச்சியின் கண் உள்ளான்.

(5) முல்லைப் பாட்டு

[1] நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த [2] சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட [3] நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த [4] பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
[5] கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
[6] ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத் றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப

---

1 நனந்தலையுலகம் வளைஇ எழுந்த எழிலி என்றும், வளைஇ நிமிர்ந்தமால் போல என்றும் கூட்டி இருவகையாகவும் பொருள் கொள்க.

2 சிறிது நேரம் இருப்பதும் பிரிந்தார்க்கு வருத்தஞ் செய்வதுமான மாலை.

3 நறுவீ என்பது முல்லைக்கு அடை.

4 பசலை ஈண்டு விருத்தம் உணர்த்தி நின்றது, மிக இளங்கன்றைப் பசலைக்கன்று என்னும் வழக்கும் உண்டு.

5 கொடுங்கோல்=வளைந்த கோல்; பசுக்களை அடித்துச் செலுத்துதலாலே கொடிய கோல் எனலுமாம்.

6 நன்னர்வாய்ப்புள் எனக்கூட்டி நன்றாகிய நற்சொல் என்றார். நச். வாய்ப்புள் என்பதே நற்சொல் எனப் பொருள்படுதலின், இருந்தபடியே 'மிக்க நன்றாகிய வார்த்தை' என்னலாம்.

விடஞ்சிறந் துயரிய [1]வெழுநிலை மாடத்து
[2]முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப விமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய [3]வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் [4]வெல்கொடி யுயரி[5]வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோட்டார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் [6]பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
[7]துனைபரி துரக்குஞ் செலவினர்
[8]வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே

---

1 எழு அடுக்கு உள்ள அரசன் மாளிகை.

2 முடங்கிறை—கூடல்வாய் என்று வழங்கப்படுவது.

3 தேர் பூண்டமா (103) ஆலின எனக் கொள்க. குதிரைவிரைந்து வருதலால் உண்டாகும் ஒலி தலைவியின் காதுகளில் ஆரவாரித்தன என்றபடி.

4 எப்பொழுதும் வெற்றியால் உயர்த்தப்படும் கொடி.

5 வெற்றிக்குறி குறியாக எழுந்து.

6 இரலை = ஆண்மான், மடமான் = மடப்பம் பொருந்திய பெண்மான்.

7 இயல்பாக விரைந்து செல்லுந் தன்மையுள்ள குதிரைகளை மேலும் விரைந்து செல்லுமாறு செலுத்தும் செலவினையுடையராய் வந்த வருடைய.

8 எடுத்துக்கொண்ட வினை முடிதற் கேற்ப விரைவும் திண்மையுமுடையதாக விளங்கும் நெடிய தேர்.

(6) மதுரைக்காஞ்சி

[1]சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
[2]நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ்[3] சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
[4]யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன [5]விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி

---

1 அதர்வவேதம் பிறர்க்குத் தீங்கு செய்தற்குரிய உபாயம் சொல்வதா தலின் அஃதொழிந்த மூன்றும் சிறந்த வேதம்.

2 'நிலமமர் வையத்து' என்பதில் வையம் என்று பின் வந்ததனால், முன் நிலம் என்றது அதன் உட்பகுதியாகிய முல்லை குறிஞ்சிமருதம் நெய்தல் என்பவற்றை.

3 சாவகர்—சமணரில் இல்லறத்தார் என்பர்.

4 கல்வி நிறைந்து செருக்கின்றியடங்கிய அறிஞர்.

5 சிறியவாய்.

யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
[1] வச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
[2] செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன [3] செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ர்கலத்
[4] தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
[5] மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
[6] நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
[7] யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
[8] செம்மை சான்ற காவிதி [9] மாக்களும்

---

1 அச்சமும் அவலமும் ஆர்வமும் தம்மிடத்து நீதி வேண்டி வருவார்க்குப் போக்கி.

2 செற்றமும் உவகையும் செய்யாது (அறங் கூறுவையத்தார்) தம்மைக் காத்து.

3 அறங் கூறும் அவையம் என அஃறிணை வாய்பாட்டாற் கூறியதற் கேற்பச் "செம்மைத்தாகி என்றார்.

4 ஆவுதி செய்தல்—யாகஞ் செய்தல்.

5 சுவர்க்கம் அடைதற்குரிய பெரியோர்; வழங்குதல்—செல்லுதல் மாவிசும்பு என்றதனால் வீட்டுலகம் என்றும் கொள்ளலாம். (மூன் உயர்நிலை உலகம் என்றதனையும் வீட்டுலகம் என்னலாம்.)

6 நன்றும் தீதும் ஆய்ந்து கண்டு அடக்கி எனமாற்றி—அரசனிடத்து நிகழும் நன்மை தீமைகளை ஆராய்ந்து கண்டு, தீமைகளில் அரசன் செல்லாமல் அடக்கி என்க.

7 அன்பும் அறனும் (காவிதிமாக்கள்) தம்மிடத்து நீங்காமல் காத்து.

8 செம்மை—ஈண்டுத் தலைமை.

9. மாக்கள்—ஈண்டு மக்கள் என்னும் பொருளில் வந்தது.

(7) நெடுநல்வாடை

[1]மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
[2]செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்
[3]தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
[4]திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் [5]கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் [6]பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டந்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
[7]பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் [8]தகர முளரி நெருப்பமைத்

---

1 மேன்மை பொருந்திய மகளிர்.

2 பைங்காற் பித்திகத்துச் செவ்வியரும்பு என மாற்றுக. பித்திகம்—பித்திகை. பிச்சிப்பூ என வழங்குகின்றது. செவ்வியரும்பு—மலரும் நிலையிலுள்ள பேரரும்பு (போது.)

3 அவ்விதழ்—அம் இதழ்—அழகிய இதழ்.

4 பொது மக்களிடமாதலின் இரும்பாற் செய்த விளக்கு என்றார்; அரசன் அரண்மனை கூறுமிடத்து, யவனர் இயற்றிய வினைமாண் பாவை விளக்குக் கூறினர். விளக்கு—தானியாகுபெயராக அகலை உணர்த்தியது

5 இரை தேடியுண்ணும் செயலற்று; இன்பம் நுகரும் செயலற்று என்றும் ஆம்.

6 கத்தூரி முதலியவை கலந்த கலவை; கத்தூரி வெப்பந் தரும் பொருளாதலின் அதனையுரையாசிரியர் கூறினர் போலும்.

7 கூதிர்க்காலக் குளிரால் மிக்க மலர்புனையாது மங்கலமாகச் சில மலரணிவாராயினர்.

8 மயிர்ச் சந்தனமாகிய விறகு.

திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கைம்மியன் கவின்பெறப் புனைந்த
[1]செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
[2]சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
[3]போர்வாய்க் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
[4]தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
[5]காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர் நின் றன்றாற் போதே

---

1 செம்மை நிறமுடைய விசிறி. (முன் "வான் கேழ்வட்டம்" என்றது வெண்மை நிறத்தையுடைய சந்தனம் அரைக்குங்கல்.)

2 கூதிர்க் காலத்தில் விசிறியைப் பயன்படுத்தாமையால், அது தொங்க விடப்பட்ட விடத்தில் அதன்மேல் சிலந்தி வலை அமைத்தது.

3 இரண்டுந் தம்மில் வந்து சேரும்படி அமைக்கபபட்ட இரட்டைக் கதவு; போர்—பொருதல்—சேருதல்.

4 வேனிற் காலத்திற் குளிர்ச்சியுண்டாகும் பொருட்டுக் குவிந்த வாயை யுடைய மட்பாண்டத்திலிட்டு வைத்த தண்ணீரையுண்டவர்கள் இப்பொழுது அதனை யுண்ணுமல்.

5 கூதிர்க்காலத்துப் பாசறையிலிருந்து போர் செய்தல் உண்டாதலின் அதன் பொருட்டும் பொருள் முதலிய பிறகாரணத்தாலும் தலைவர் பிரிய, அங்ஙனம் பிரியப் பெற்ற மகளிர் வருந்த.

(8) குறிஞ்சிப் பாட்டு

குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
[1]லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன [2]மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
[3]விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு [4]வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த [5]களிறுதரு புணர்ச்சி

---

1 தலைவியுள்ளத்து நிகழுந் தன்மையை (வரைந்து இல்லற நிகழ்த்து தலை) தலைவன் நினைந்து அதனைச் செய்யக் கருதி.

2 மிடாஅ............வளநகர் என்றது தலைமகனது இல்லத்தின் முன் நிலைமை கூறியபடி; தலைவியோடு விருந்தோம்புதல் மேற்கூறப் படுதலின். மிடா = வாயகன்ற பாத்திரம்.

3 விருந்தினராக வந்து உண்டதனால் எஞ்சியமிச்சிலை. "மிச்சில் பெருந்தகை நின்னோடுண்டலும் புரைவது" என்னுமிடத்து "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்ற திருக்குறள் கருதத் தக்கது.

4 வஞ்சினம்—நின்னைப் பிரியின் இன்ன பாவம் செய்தேனாகுக; இன்ன தீமையையானுறுக என்று கூறுவது.

5 களிற்றினால் வந்த ஏதத்தைப் போக்கியதால் உண்டான புணர்ச்சி.

வாணூரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் [1] றிரட்டப் புள்ளின மொலிப்பச்
[2] சினை இய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனை இய மாலை துன்னுதல் காணூஉ
[3] நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
[4] கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி [5] தீரக் கூறித்
துணைபுணை ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
[6] லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன்.

---

1. ஒன்றற்கொன்று மாறிமாறி யொலித்தல்.
2. தன்பகைமேல் வெகுண்ட வேந்தன் போருக்குச் செல்லுதலையொப்ப விரைந்த மாலைப்பொழுது வந்து நெருங்குதலைக்கண்டு.
3. 'நேரிறை' என்றது தலைவியை.
4. "கலங்கல் ஓம்புமின்" என்றது தலைவி தோழியிருவரையும் நோக்கிக் கூறியது.
5. தலைவியின் உள்ளத்தில் களவு நீட்டிக்குமோ என்றுண்டாகிய வருத்தந் தீரக்கூறி.
6. 'உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன்' என்றது அதன்மேல்தான் ஊருக்குள் சென்றால் களவு வெளிப்பட்டு அலரும் இற்செறிப்பும் முதலியன நிகழுமாதலின்.

(9) பட்டினப்பாலை.

[1] முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
[2] வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
[3] துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான்,
காடு [4] கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் [5] துறந்தை போக்கிக்
[6] கோயிலொடு குடிநிறீஇ

---

1. குறைவுபடாத தலைமையினையுடைய பட்டினம்; இனி, எவ்வகைநுகர் பொருள்களாலும் முட்டுப்பாடில்லாததும் சிறப்பினையுடையதுமான பட்டினம் என்றுமாம்.
2. வாரேன் என்றது தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்குக்கூறியதாகும்.
3. பிறர் அஞ்சுதற்குக் காரணமான தன் அரசுரிமை.
4. அழித்து.
5. உறந்தை என்னும் நகரத்தைப் பெரிதாக்கி.
6. கோயில்களையும் புதுப்பித்துப் பழைய குடிகளையும் நன்குநிலைபெறச் செய்து.

வாயிலொடு [1] புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
[2] தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்
[3] மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத [4] பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
[5] முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரி மா வன்ன [6] வணங்குடைத் துப்பிற்
றிரு மா வளவன் [7] றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

---

1. சிறியவாயில்கள். (நுழைவழிகள்)
2. நாம் தனியேயிருக்கின்றோம் என்று அஞ்சிப் பின்னிட்டோடாமல்; (போருக்காற்றாது) நீங்குவேமெனப் பின்னிட்டோடாது என்றுமாம்
3. பிறவேந்தர் கரிகாலனை வணங்காதபோது, "தம்மொளி மழுங்கி" என்றும், அவ்விளக்கம் மீண்டும் தோன்றும்படி அவர் வந்து வணங்கும்படியான கால்களையுடைய கரிகாலன் என்றும் கொள்க.
4. பரு ஏர் எறுழ்=பருமையும் அழகும் வலிமையும் பொருந்திய.
5. மெய்ம்முழுதுமணிந்த அணிகளையுடைய மகளிர்; முற்றிய வேலைப்பாட்டினையுடைய அணிகளையணிந்த மகளிர என்றுமாம்.
6. பகைவர்க்கு வருத்தம் செய்யும்படியான வலியினையுடைய.
7. பகைவரைக் கொல்லுதற்கு அறுதியிட்டுவைத்த; பகைவர்மேல் எறிதற்கு ஓங்கிய என்றுமாம்.

(10) மலைபடுகடாம்.

[1]நன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
யலங்குகழை நரலு [2]மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் [3]வயிரிய மெனினே
நும்மில் போல [4]நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
[5]சேட்புலம் பகல வினிய கூறிப்
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
[6]குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவி
ரேறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு
வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் [7]டேறல்
குறைவின்று பருகி [8]நறவு மகிழ்ந்து வைகறைப்
[9]பழஞ்செருக் குற்றநு மனந்த றீர
வருவி தந்த பழஞ்சிதை [11]வெண்காழ்
[12]வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

---

1. நன்றாக எரியும் நெருப்பு.
2. அருமை + இ = ஆரி. அருமையையுடையது.
3. வயிரியம் = கூத்தரேம் எனக் குறிப்பு முற்றாகக்கொள்க.
4. வாயிலினின்று உள்ளிருப்பார் வருக என்றபின் உள்நுழைதலின்றி, நேரே உள்நுழைந்து.
5. நெடுந்தூரம் நடந்ததனாலுண்டான வருத்தம்.
6. நல்ல நிறம்பொருந்திய வடிவினையுடைய தினைச்சோறு.
7. தேனாற் செய்த கட்டெளிவு.
8. நெல்லாற் செய்த கள்.
9. கள்ளுண்பதனால் உண்டாகும் மகிழ்ச்சி.
10. அனந்தல் — மயக்கம்; ஈண்டு — மதம்.
11. வெண்காழ் = பலாப்பழத்தின் விதை.
12. ஓடிவருகின்ற வேகம்.

[1] முளவுமாத் தொலைச்சிய [2] பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட [3] துய்த்தலைப் பழனி
னின்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி [4] னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
[5] யகமலி யுவகை யார்வமொ டளைஇ
[6] மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய
[7] பரிசின் மறப்ப நீடலு முரியி
ரனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் [8] கடிவீ தொடினும்
வரையர மகளி ரிருக்கை காணினும்
முயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநாள் நில்லாது நிலநாடு படர்மின்.

---

1. முள்ளம்பன்றி.
2. பசுமையாகிய நிணத்தையுடைய தசைத்துண்டம். (பிளக்கப்பட்டது பிளவை)
3. துய்-ஈண்டு வரி.
4. அரி = அரிசி.
5. நெஞ்சின்கண்நிறைந்த மிக்க மகிழ்ச்சியையுடையராய் என்பது கருத்து.
6. மக்களைக்கொண்டு முறைசொல்லித் தடுக்க. (அண்ணன் அம்மான் என்றாற்போல்வன முறை என்றார் நச்சினார்க்கினியர். அம்மகளிர் தங்களுக்கு அண்ணன் என்றும், தம்பிள்ளைகளுக்கு அம்மான் என்றும் முறைகூறுவர் என்றபடி)
7. அவர்கள் விருந்து உபசரிப்பதைக்கண்டு மகிழ்ந்து, அதனால் நன்னனிடத்துப் பரிசில் பெறக் கருதிய கருத்தையும் மறந்து ஆண்டே தங்குதலும் செய்வீர்என்றபடி.
8. (தெய்வம்விரும்பும் பூவாதலால்) பிறர்க்கு அச்சந்தரும்பூ.

(11) நற்றிணை.

பாலை

இஃது உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்கு உரைத்தது.

[1] அழிவிலமுயலு மார்வமாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
[2] கலமரல் வருத்தந் தீர [3] யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
[4] பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு [5] நெடிய வைகி
மணல்காண் டோறும் [6] வண்ட றைஇ
வருந்தா தேகுமதி [7] வாலெயிற் றோயே
[8] மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்ப லூரயாஞ் செல்லுமாறே.

பாலை பாடிய பெருங்கடுங்கோப் பாடியது

---

1. அழிவில்லாத செயல்கள்.
2. மனஞ்சுழலுகின்ற துன்பம்.
3. யாழ—முன்னிலையசை.
4. பொரிபோன்ற பூவையுடைய புன்கமரம்.
5. நெடும் போது.
6. சிற்றில் புனைந்து.
7. அவள் முறுவல் தன்வழி வருத்தம் தீர்த்து மகிழ்வு பிறப்பித்தலின் "வாலெயிற்றோயே" என விளித்தனன்.
8. மாமரத்தின் அரும்பு.

குறிஞ்சி

இஃது வரைவுமலிந்ததோழி தலைமகட்குச் சொல்லியது.

கொடிச்சி காக்கு. [1] மடுக்கற் பைந்தினை
[2] முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
யங்கை நிறைய [3] ஞெமிடிக் கொண்டுதன்
றிரையணற் கொடுங்கவு ணிறைய முக்கி
வான்பெய னனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையிற் றோன்று நாடன்
வந்தனன் வாழி தோழியுலகங்
[4] கயங் கணற்ற பைதறு காலைப்
[5] பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே.

---

1. மலைப்பக்கம்.
2. முதலிற்றோன்றி முற்றிய பெருங்கதிர்.
3. ஞெமிடுதல் —நிமிட்டுதல் நிமிண்டுதல் என வழங்கும்.
4. குளங்கள் நீர்வற்றிய ஈரமில்லாத காலம்.
5. பீள் — சூல். தினையைத் தின்றுகொண்டு மழையில் நனைந்து தோன்றும் குரங்கு தைத் திங்கள் முதல் நாளில் நீராடி ஈரவுடையொடு நோன்பு முடித்து உண்பாரைப்போல் தோன்றும்.

மருதம்

இது காமமிக்க கழிபடர்கிளவி

3 சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
[1] துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் மொண்டுறைத்[2] துழைஇச்
[3] சினைக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
வாங்கட் டீம்புன லீங்கட் பரக்குங்
கழனி நல்லூர் மகிழ்நர்க் கென்
னிழைநெகிழ் பருவரல் செப்பா தோயே.

வெள்ளிவீதியார் பாடியது.

முல்லை

இது பருவங்கண்டாற்றாளாய தலைவியைத் தோழி பருவமன் றென்று வற்புறுத்தியது.

4 நீரற வறந்த நிரம்பா நீளிடைத்
துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பி
னஞ்சுவரப் பணிக்கும் வெஞ்சுரமிறந்தோர்
தாம் வரத்[4] தெளித்த பருவங் காண்வர
விதுவோ வென்றிசின் மடந்தை[5] மதியின்று

1. நீர்த்துறையில் தூய்மை செய்து மடிக்கப் பெற்ற வெள்ளிய ஆடை போன்ற நிறம் விளங்குகின்ற சிறகினையுடைய சிறிய வெள்ளிய குருகே.
2. துழாவி.
3. சினையையுடைய கெளிறு என்னும் மீன். இது மருத்திற் குரியது. "அனைய அன்பினையோ" என்றது குறிப்பு மொழியாக அன்பின்மையை யுணர்த்தும். தலைவற் கென் பருவரல் செப்பாமைக்குக் காரணம் அன்பின்மையோ மறவியோ என்றபடி. தலைவன் ஊர் அணித்தாதலின் மறத்தல் இயலாமையும் குறித்தனள். இனியேனும் நன்றி மறவாமல் கூறல் வேண்டும் என்பது தலைவியின் கருத்து.
4. நாம் தெளியுமாறு கூறிய.
5. அறிவில்லாமல்.

[1] மறந்துகடன் முகந்த கமஞ்சூன் மாமழை
பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல்
காரென் [2] றயர்ந்த வுள்ளமொடு தேர்வில
பிடவுங் கொன்றையுங் கோடலு
[3] மடவ வாகலின் மலர்ந்தன பலவே.

இளந்திரையனார் பாடியது.

நெய்தல்

இது தோழி தலைவியை உடன்போக்குவலித்தது. சிறைப்புறமாகச் சொல்லியதூஉமாம்.

5 சிலரும் பலருங் [4] கடைக்கணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் [5] வலந்தன ளன்னை [6] யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு [7] குரூஉச் சுவற்
[8] கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
[9] செலவயர்ந் திசினால் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்கலூரே

உலோச்சனார் பாடியது.

---

1. தனக்குரிய பருவகாலத்தை மறந்து.
2. மறந்த உள்ளத் தோடு.
3. ஆராய்ந்துணரும் அறிவில்லாதனவாதலின்.
4. கடைக் கண்ணால் தலைவியைக் குறித்து நோக்கி. அன்றி, சிலரும் பலரும் தங்களுள் கடைக்கண்ணால் நோக்கித் தூற்றுகின்றனர் என்றுமாம்.
5. சுழற்றிக்கொண்டு.
6. வருத்த.
7. நல்ல நிறம் பொருந்திய பிடரி மயிர்.
8. விரைந்து செல்லுங் குதிரை.
9. செல்ல உடன்பட்டேன்.

(12) குறுந்தொகை

1 அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புறவிளைகனி
குண்டுநீரிலஞ்சிக் கெண்டைகதூஉம்
தண்டுறையூரன் பெண்டினையாயிற்
பலவாகுக நின்னெஞ்சிற்படரே
[1] ஓவாதீயுமாரிவண்கைக்
கடும்பகட்டியானை நெடுந்தேரஞ்சி
[2] கொன்முனையிரவூர்போலச்
சிலவாகுகநீதுஞ்சு நாளே.

(1) பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன், வாயில் வேண்டிப் புக்கவழித் தன்வரைத்தன்றி அவன்வரைத்தாகித்தன் நெஞ்சு நெகிழ்ந்துழித்தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.

(2) பரத்தையிற்பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழிகூறியதூஉமாம்.

ஔவையார் பாடியது.

2 யானே யீண்டையேனே யென்னலனே
ஆனாநோயொடுகானலஃதே
துறைவன்றம் மூரானே
மறையலராகி மன்றத்தஃதே.

வரைவு நீட்டித்தவழித்தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

வெண்பூதி பாடியது.

3 [3] இல்லோ னின்பங் காமுற் றாஅங்
[4] கரிது வேட்டனையா னெஞ்சே காதலி

1வது செய்யுளில் முதற்கருத்துக்கு நெஞ்சே என்னும் விளி வருவிக்க.

1. காலமிடம் நோக்காமல், பெறுவார் தகுதியும் நோக்காமல் இடைவிடாதீயும்.

2. அஞ்சியினுடைய போர் முனைக்கண் உள்ள ஊரிலுள்ளார் அச்சத்தால் இரவில் தூங்காதவாறுபோல. ஈண்டு இரவிற் றுயிலாமை மட்டும் உவமை.

2வது செய்யுளில் நலன்கானலஃது என்றது தலைவிதான் நலனிழந்து வருந்துதல் குறித்தபடி. துறைவன் தம்மூரான் என்றது அவன் வரையு முயற்சியின்றித் தம்மை மறந்துறைகின்றமை குறித்தபடி. மறை = களவுப்புணர்ச்சி.

3. பொருளில்லோன்.

4. கிடைத்தற்கரிய தொன்றனை விரும்பினை.

நல்லளாகுத லறிந்தாங்
கரியளாகுத லறியாதோயே

(1) அல்ல குறிப்பட்டு மீளுந்தலைமகன் தன் நெஞ்சிற்குச்சொல்லியது.

(2) இஃது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிந்தவழிக் கலங்கியதுமாம்

பரணர்பாடியது

4 வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறைமகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோருந்தாமே
அழாஅ றோழியழுங்குவர் செலவே

தலைமகன்பிரியுமென வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது

பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.

5 [1] முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளையுண்கண் [2] குய்ப்புகை கமழத்
தான் துழந்தட்ட [3] தீம்புளிப்பாகர்
[4] இனிதெனக் கணவனுண்டலின்
நுண்ணிதின்மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

கடிநகர்ச்சென்ற செவிலித்தாய் நற்றாய்க் குரைத்தது.

கூடலூர்கிழார் பாடிய்து.

4-வது செய்யுளில் வினையே என்பதன் ஏகாரத்தை 2ம் வரியில் ஆடவர் என்பதனோடும் கூட்டுக. மகளிர்க்கு ஆடவரே உயிர் என்று கூறியதனால் அவ்வுயிரைப் பிரிந்து மகளிராகிய உடல் வாழ்தல் இயலாமை அவருணர்வர் ஆதலின் செலவழுங்குவர் என்பது கருத்து.

1 முற்றிய தயிர்

2 தாளித்தலாலுண்டாகும் புகை

3 இனிய புளிக் குழம்பு

4 தலைவி தானே செய்ததாதலின் கணவன் ‘ இனிது ’ என உண்டனன்; அவன் ‘ இனிது ’ என உண்டதனால் காதலி மகிழ்ந்தனள்; மகிழ்ச்சி பெரிதாயினும், நாணத்தால் அதனை அடக்குதலின் ‘ நுண்ணிதின் மகிழ்ந்தன்று ’ என்றனர்.

6 வேம்பின்பைங்காயென் றோழி தரினே
தேம்பூங்கட்டி யென்றனி ரினியே
பாரிபறம்பிற்பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇ திங்கட் டண்ணியதரினும்
வெய்யவுவர்க்கு மென்றனிர்
ஐயவற்றா லன்பின் பாலே

வாயில்வேண்டிப்புக்க கிழவற்குத் தோழி கூறியது
மிளைக்கந்தன் பாடியது.

7 சுடர் செல்வானஞ் சேப்பப்படர்கூர்ந்
தெல்லறு பொழுதின்[1] முல்லை மலரும்
மாலை யென்மனார் மயங்கியோரே
குடுமிக்கோழி நெடுநகரியம்பும்
பெரும்புலர் விடியலுமாலை
பகலுமாலை துணையிலோர்க்கே.

பருவவரவின்கண் தோழிக்குக் கிழத்தியுரைத்தது.
மிளைப்பெருங்கந்தன் பாடியது.

8 மடவவாழி மஞ்ஞை மாயினம்
காலமாரி பெய்தென வதனெதிர்
[2] ஆலலுமாலின பிடவும் பூத்தன
காரன்றிகுளை தீர்கநின்படரே
கழிந்தமாரிக் கொழிந்தபழநீர்

---

1 முல்லைமலரும் காலத்தை மாலை என்பார்.

8-வது செய்யுள்—பிரிவாற்றாத தலைவிக்கு இஃது உண்மையான கார்ப் பருவம் அன்று என்று கூறி ஆற்றுவிக்கும் முறைகளில் இஃதொன்று. வருகிற கார்ப்பருவத்தில் மழைபெய்யும் பொருட்டுக் கடலில் நீர்முகக்கச் செல்லும் மேகம், சென்ற பருவத்தில் முகந்ததில் பெய்ததுபோக எஞ்சிநின்ற நீரைக் கொட்டிச் செல்கின்றது என்றனள். இல்லங்களில் நீர்முகக்கச் செல்லும் மகளிர், அதற்குமுன் முகந்துவந்த நீரில் செலவானது போக எஞ்சியுள்ள நீரைக் கொட்டிவிட்டுச் செல்லுதல் இயல்பு. அதனை மேகத்தின் மேலேற்றிக் கூறினள்.

2 ஆடுதலும் செய்தன

புதுநீர் கொளீஇ யுயவுகுத்தரும்
[1]நொதுமல்வானத்து முழங்கு குரல்கேட்டே.

பிரிவிடைத்தோழி "பருவமன்று; பட்டதுவம்பு" என்று வற்புறுத்தியது.

இடைக்காடன் பாடியது.

9 ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆனுதலைக்கு[2] மறனிலன்னே
தானேயிருக்க தன்மனையானே
நெல்லிதின்ற முள்ளெயிறுதயங்க
[3]உணலாய்ந்தி சினலவரொடுசேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக்கவாஅற்
கரும்புநடுபாத்தியன்ன
பெருங்களிற்றடிவழி நிலைஇயநீரே.

உடன்போக்கு நேர்ந்த தோழி, கிழத்திக்கு உடன் போக்கு உணர்த்தியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோபாடியது.

10 ஊருண்கேணி யுண்டுறைத் தொக்க
பாசியற்றே பசலை காதலர்
தொடுவுழித்தொடுவுழிநீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே.

வரைவுநீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச்சொல்லியது.

பரணர் பாடியது.

---

1 வானம் இப்போது தலைவிக்குப் பகைமையுடையதாக இருப்பினும் ஆற்றுவித்தற்பொருட்டு 'நொதுமல்வானம்' என்றனள். நொதுமல்=பகையும் நட்புமில்லாத நிலை.

2 தான் தலைவனைக் காணும்வாறு காவற்படுத்தி வருத்தினமையானும், தன்நினைவறிந்து வரைவு மேற்கொள்ளாமையானும் 'அறனிலன்னே' என்றாள்.

3 உண்ணுதலை ஆராய்ந்துணர்ந்தேன்.

10-வது செய்யுள் திருவாய்மொழி 1—4—4 'என்னீர்மைகண்டிரங்கி' என்ற பாசுர வியாக்கியானத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

(13) ஐங்குறுநூறு - மருதம்.

1 வாழி யாதன் வாழியவினி
பசியில்லாகுக பிணிசே ணீங்குக
வெனவேட் டோளேயாயேயாமே
[1] முதலைப்போத்து முழுமீனாருந்
தண்டுறையூரன்றேரெம்
முன்கடை நிற்கவென வேட் டேமே.

புறத்தொழுக்கத்திலே நெடுநாளொழுகி, 'இது தகாது' எனத் தெளிந்தமனத்தனாய், மீண்டு தலைவியோடுகூடி ஒழுகாநின்ற தலைமகன், தோழியோடு சொல்லாடி, யான் அவ்வாறொழுகநீயிர் நினைத்த திறம்யாது' என்றாற்கு அவள் சொல்லியது.

2 அம்ம வாழி தோழி யூரன்
நம்மறந் தமைகுவ னாயி னாமறந்
துள்ளா தமைதலுமமைகுவமன்னே
கயலெனக் கருதியவுண்கண்
[2] பயலைக்கொல்கா வாகுதல் பெறினே.

தான்வாயில் நேருங்குறிப்பினளானமையறியாது தோழிவாயில் மறுத்துழி, அவள் நேரும் வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது.

ஓரம்போகியார் பாடியவை.

நெய்தல்

3 அம்மவாழி தோழி [3] நென்னல்
ஓங்குதிரைவெண்மணலுடைக்குந்துறைவற்
கூரார் பெண்டென மொழியவென்னை
அதுகேட் டன்னா யென்றன ளன்னை
[4] பைபய வெம்மை யென்றனனன்யானே.

வரையாது வந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இதுவெனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

---

1 ஆண்முதலை
2-வது செய்யுள்—தலைவன் நம்மை மறப்பினும் நாம் அவனை மறத்தல் இயலாது என்பது தலைவியின் கருத்து.
2 பசலை பயலை எனவரும்
3 நெருநல் நென்னல் எனத்திரிந்தது : நேற்று என்பது பொருள்
4 மெதுவாகக் கொடுமை என்றனன்
4-வது செய்யுள்—" கணங்கொள்ருவி............சேர்ப்பன் " என்றது தலைவன் கானிலமுமுடையன் என்றபடி.

4 கணங்கொளருவிக் கான்கெழுநாடன்
குறும் பொறைநாடன் நல்வயலூரன்
தண்கடற் சேர்ப்பன்பிரிந்தெனப் பண்டையிற்
[1] கடும்பகல்வருதிங்கையறுமாலை
கொடுங்கழி நெய்தலுங் கூம்பக்
காலைவரினுங்களைஞரோ விலரே.

வரைவிடைவைத்துப் பிரிந்துழி ஆற்ருளாய தலைமகள் மாலைக்குச் சொல்லியது.

அம்மூவனுர் பாடியவை.

குறிஞ்சி

5 அன்னுய் வாழிவேண்டன்னை நம் படப்பைத்
[2] தேன்மயங்குபாலினுமினியவவர்நாட்
[3] டுவலைக்கூவற்கீழ
மானுண்டெஞ்சிய [4] கலிழிநீரே.

உடன்போய் மீண்ட தலைமகள் 'நீசென்றநாட்டுநீர் இனிய வல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய்' எனக்கேட்ட தோழிக்குக் கூறியது

6 [5] சிலம்புகமழ் காந்தள் நறுங்குலையன்ன
நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே
பாய லின்றுணை யாகிய பணைத்தோட்
டோகை மாட்சிய மடந்தை
நீயல துளரோவென் னெஞ்சமர்ந் தோரே.

பகற்குறியிடம்புக்க தலைமகன், தலைவிபின்ஞக மறைய வந்து கண்புதைத்துழிச் சொல்லியது.

கபிலர் பாடியவை

---

1 நண்பகல். பிரிந்தார்க்கு மாலைக்காலமே யன்றி மற்றைய பகற்பொழுதும் மாலைக்காலம்போல் தோன்றுதல் இயல்பு. "சுடர்செல் வானம்" என்ற குறுந்தொகைச் செய்யுளும் காண்க.

2 தேனொடுகலந்த பாலினும்

3 தழைமூடிய கிணறு

4 கலங்கல் நீர்

5 மலைமுழுதும் மணம் வீசுகின்ற காந்தள்

6-வது செய்யுள்—என்நெஞ்சில் நீயன்றிப்பிறரில்லாமையால், என்கண் புதைத்து என் நினைவறிதல் வேண்டா எனத் தலைவியின் பேதைமையுணர்த்திய வாறு.

பாலை

7 வேனிற்றிங்கள் வெஞ்சுரமிறந்து
செலவயர்ந்தனையா னீயே [1]நன்று
[2]நின்னயந்துறைவி [3]கடுஞ் சூற்சிறுவன்
முறுவல் காண்டலினினிதோ
விறுவரை நாடநீ யிறந்து செய் பொருளே.

'பொருள்வயிற்பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழிசொல்லியது.

8 நெடுங்கழை [4]முளிய வேனி னீடிக்
கடுங்கதிர் ஞாயிறு [5]கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயினமுன்னே யினியே
ஒண் ணுத லரிவையை யுள்ளு தொறுந்
தண் ணிய வாயின சுரத்திடை யாறே.

இடைச் சுரத்துக்கண் தலைமகன் தலைமகள் குணம் நினைத்தலின் தனக்குற்ற வெம்மை நீங்கியதுகண்டுசொல்லியது.

ஓதலாந்தையார் பாடியவை

முல்லை

9 [6]மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிதுமன் றவர் கிடக்கை முனிவின்றி
[7]நீனிற வியலகங் [8]கவைஇய
[9]ஈனுமும்பரும் பெறலருங் குரைத்தே.

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

---

1 பெரிதும்
2 நின்னைவிரும்பியுறையும் தலைவி
3 முதற்புதல்வன்
4 காய
5 மலைபிளக்குமாறு

8-வது செய்யுள் — தலைவியை நினைந்து நெஞ்சம் மகிழ்ந்தமையால் வெம்மைமிக்க பாலைவழியும் தண்ணியதாகத் தோன்றியது,

6 மான்கன்று
7 நீல நிறத்தையுடைய அகன்ற இடம்-என்றது கடல்
8 சூழ்ந்த
9 இவ்வுலகத்தும் மேலுலகத்தும் பெறுதற்கரிது

[1] தழங்குரன் முரசங் காலை யியம்பக்
கடுஞ்சினவேந்தன் றொழிலெதிர்ந்தனனே
[2] மெல்லவன் மருங்கின் முல்லைபூப்பப்
[3] பொங்குபெயற் கனைதுளி காரெதிர்ந்தன்றே
யஞ்சி லோதியை யுள்ளுதொறுந்
[4] துஞ்சாதலமர ஞமெதிர்ந்தனமே.

வேந்தற் குற்றுழிப்பிரிந்த தலைமகன் பருவம் வந்தவிடத்தினும் மீளப்பெறாது, அரசன் செய்தியும், பருவத்தின் செய்தியும், தன்செய்தியும் கூறி ஆற்றானயது.

பேயனார் பாடியவை

(14) கலித்தொகை

1. பாலைக்கலி

எறித் தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்
[5] உறித்தாழ்ந்த கரகமு [6] முரைசான்ற முக்கோலும்
நெறிபடச் [7] சுவலசைஇ [8] வேறோரா நெஞ்சத்துக்
[9] குறிப் பேவல் செயன்மாலைக் கொளைநடைய
ந்தணீர்

---

1 தழங்கு குரல்—தழங்குரல் என விகாரமாயிற்று
2 மென்னிலமாகிய பள்ளம்
3 மிகுதியாகப் பெய்கின்ற செறிந்த நீர்த்துளி
4 தூங்காமல் மனஞ் சுழலுதல்
5 உறியில் தங்கியுள்ள கமண்டலம்.
6 புகழமைந்த முக்கோல். அரி அயன் அரன் என்னும் மூவரும் ஒருவர் என்று காட்டக் கொண்டது முக்கோல் என்பது நச். கருத்து. இறைவன் உயிர் உடல் எனத்தத்துவம் மூன்று எனக் காட்டக் கொண்டது முக்கோல் என்று கூறுதல் சிறக்கும்.
7 தோளிலே வைத்து.
8 அரி அயன் அரன் மூவரையும் வேறு வேறாகக் கருதாத நெஞ்சம் என்பது நச். கருத்து. அறமல்லதனை நினையாத நெஞ்சம் என்பது சிறக்கும்.
9 ஐம் பொறிகளும் நமக்கேவல் செய்தலை யியல்பாகவுடைய கோட்பாட்டையும் ஒழுக்கத்தையுமுடைய அந்தணீர்.

வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மகனொருவனுந்
[1]தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னாரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை

யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவா ருயிர்நீர் போறிர் ;
[2]பலவுறு நறுஞ் சாந்தம்[3]படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;
ஏழ்புணரின்னிசை[4]முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்
செய்யுஞ்

சூழுங்கா னும்மக ளுமக்கு மாங்கனையளே ;
எனவாங்கு,
இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

இஃது, உடன்போய தலைவிபின் சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற்பகவரைக்கண்டு, இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ என வினாவியாட்கு, அவரைக்கண்டு அஃதறமெனவே கருதிப் போந்தேம் நீரும் அவர் திறத்து எவ்வம் படவேண்டாவென எடுத்துக்காட்டி அவர் தெருட்டியது.

---

1 பிறரறியாமற்றம்முளே கூடின தாங்கள் இப்பொழுது பிறரறிந்த புணர்ச்சியராயினர்.

2 நறியன பலவுங்கூடும் நறுஞ்சந்தனம்.

3 உடலிற் பூசிக்கொள்வார்க்கல்லது.

4 பாடுவார்க்கல்லது.

2. குறிஞ்சிக்கலி

[1] இமையவில் வாங்கிய [2] வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்தனனாக
வையிருதலையி னரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
யெடுக்கல் செல்லா துழப்பவன் போல
[3] வுறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
[4] கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
[5] கோடுபுய்க் கல்லா துழக்கு நாட கேள் ;

[6] ஆரிடை யென்னாய் நீ யரவஞ்சாய் வந்தக்கா
னீரற்ற புலமே போற் புல்லென்றாள் வைகறை
கார் பெற்ற புலமே போற் கவின்பெறு மக்கவின்
றீராமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக் காண் ;
[7] இருளிடை யென்னாய்நீ யிரவஞ்சாய் வந்தக்கால்
பொருளில்லா னிளமைபோற் புல் லென்றாள் வைகறை
அருள்வல்லா னாக்கம்போ லணிபெறு மவ்வணி
தெருளாமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண் ;

---

1 இமைய்மலையிற் பிறந்த மூங்கிலாகிய வில் என்பது நச். கருத்து. இமையமலையாகிய வில் என்பது சிறக்கும்.
2 கங்கையைத் தரித்தலால் குளிர்ந்துள்ள சடை.
3 மிக்க வலிமையையுடைய புலி.
4 மிக்க செற்றங்கொண்டு.
5 கோட்டினை வெளியே யிழுக்கமாட்டாது.
6 செல்லுதற்கரிய வழி.
7 இருளிடம்.

[1] மறந்திருந்தா ரென்னாய்நீ மலையிடை வந்தக்கா
லறஞ்சாரான் மூப்பேபோ லழிதக்காள் வைகறை
திறஞ்சேர்ந்தா னாக்கம்போற் றிருத்தகு மத்திருப்
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருளுண்டே
லுரைத்தைக்காண் ;

எனவாங்கு,

நின்னுறு விழுமங் கூறக்கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்
வேங்கை [2] விரிவிட நோக்கி
வீங்கிறைப் பணைத் தோள் வரைந்தனன் கொளற்கே.

இஃது, இரவுக்குறி வந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி தலைவியது நிலைமைகூறி அவனை வரைவுகடாவ, அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு வரைவு மலிந்து கூறியது.

3 மருதக்கலி

[3] மைபடு சென்னி மழகளிற் றோடைபோற்
கைபுனை முக்காழ் [4] கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்பூ ணனைத்தரு மவ்வாய்
கலந்துகண் ணோக்காரக் [5] காண்பின் [6] துகிர்மேற்
பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
[7] கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கியடியார்ந்த
[8] தேரைவாய்க் கிண்கிணியார்ப்ப வியலுமென்

---

1 கொலைத்தொழிலில் திருத்தம்பெறாத கானவர்.
2 விரியும் காலம்.
3 ஓடை மழகளிற்றுமைபடு சென்னிபோல் எனக் கூட்டுக.
4 மென்மையையுடைய தலை.
5 காட்சிக்கினிய.
6 பவளப் பலகைமேல்.
7 காவலையுடைய அரண்களைக் குத்தாத கையாற் புனையப்பட்ட யானை,
8 தேரையின் வாய்போன்ற வாயையுடைய சதங்கை.

[1]போர்யானை வந்தீக வீங்கு;
செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
[2]நிலைப்பாலு[3]ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தை போன்
மென்றோள் நெகிழ விடல்;
[4]பால்கொள லின்றிப் பகல்போன் முறைக்கொல்கா
கோல்செம்மை யொத்தி பெருமமற் றெவ்வாதி
கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோற்
சால்பாய்ந்தார் சாயவிடல்;
[5]வீதலறியா விழுப்பொருள் நச்சியார்க்
கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
[6]மாதர்மென் னோக்கின் மகளிரை நுந்தைபோ
னோய்கூர நோக்காய் விடல்;
ஆங்க,
[7]திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்றமகன்;

---

1 தலைவி தன் மகனைக் காதலால் 'போர் யானை' என்றாள்.
2 நிற்கின்ற நிலைகளுள்—அவனுடைய தன்மைகளுள் என்றபடி.
3 உனக்கொத்த குறிக்கப்படுங் குணங்களை—நீ மேற்கொள்ளத்தக்க குணங்கள் என்றபடி.
4 ஒரு பக்கம் சார்தலின்றி நுகத்துப் பகலாணிபோல் நடுநின்று முறைமை செய்வதற்குத் தளராத.
5 தன்னையுடையார் கெடுதலன்றித் தான் கெடுதல் அறியாத சீரிய பொருள்.
6 காதல் பொருந்திய மெல்லிய நோக்கினையுடைய.
7 நற்குணங்களல்லாதவற்றை நீ மேற்கொள்ளாதே யென்று யாம் இடித்துக்கூற.

மறைநின்று, தாமன்ற வந்தீத்தனர் ;
ஆயிழாய், [1] தாவாத வெற்குத் தவறுண்டோ
காவாதீங்
சீத்தை யிவனையாங் கோடற்குச் [2] சீத்தையாங்
[3] கன்றி [4] யதனைக் கடியவுங் கைநீவிக்
குன்றவிறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வன்பிலி பெற்றமகன்.

“தந்தைய ரொப்பர் மக்க ளென்பதனால், லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்” என்பதனான் மகனைத் தலைவனை ஒக்கலாங்குணனும் ஒக்கலாகாக்குணனுந் தலைவி கூறுகின்றுழி மறைந்து புக்கதலைவன் அவள் ஊடலுணர்வன சொல்ல மகன் வாயிலாக ஊடறீர்வாள் தன்னுள்ளே கூறியது.

4. முல்லைக்கலி

தீம்பால் கறந்த [5] கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
[6] பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் [7] பாங்கரு
முல்லையுந் தாய [8] பாட்டங்காற் றோழிநம்
[9] புல்லினத் தாயர் மகளிரோ [10] டெல்லா
மொருங்கு விளையாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன் மற்றென்னை
முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் [11] புனைகோ சிறிதென்றா னெல்லாநீ

---

1 நினக்குத் துன்பம் செய்யாத எனக்கு.
2 கைவிடப்பட்டவன்.
3 மனங்கன்றி.
4 தலைவன்மேல் வீழ்தலை விலக்கவும்.
5 கலங்களை, கறந்த இடத்தைவிட்டு வேறிடத்து எடுத்துவைத்து.
6 பூத்தொழிலையும் கரையையுமுடைய நீல ஆடை.
7 பாங்கர்க் கொடி.
8 தோட்டம் ; முற்றாட்டாய தோட்டம் என்பர் நச்.
9 ஆட்டினம்.
10 எனைய பசுவினத்தாயர் மகளிர் எருமை யினத்தாயர் மகளிர்.
11 புனைவேனே.

பெற்றேம்யா மென்று பிறர் செய்த வில்லிருப்பாய்
[1]கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழையாய்
தாதுசூழ் கூந்தற் றகைபெறத் [2]தைஇய
கோதை புனைகோ நினக் கென்றா னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதரா
யைய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேற்
றொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
[3]செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ [4]விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான் பெயர்ப்ப
[5]வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனைநீ
[6]யாயர் மகளி ரியல்புரைத் [7]தெந்தையும்
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்.

இது தலைவி ஆயத்திடைத் தலைமகனைக் கண்டவாறும் அவனைக் கூறியனவுங்கூறித் தோழியைத் தலைவனை வரைவுகடாவி, யாய்க்கு அறத்தொடு நிற்கவேண்டுமென்றது.

5. நெய்தற்கலி

மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
[8]சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்

---

1 நீ உலகியலிற் கற்ற தொன்றுமில்லை.
2 கட்டிய.
3 கோலம் செய்து எழுதுங்காலம்.
4 அன்புள்ளார்போலக் கூறுகின்றவற்றைத் தவிர்க என்றேன்.
5 மனஞ்சுழன்று வருந்தியவன்போல.
6 ஆயர் மகளிரை மணந்து கோடற்குரிய இலக்கணத்தைக் கூறி— எறு தழுவுதலைக் கூறி என்றபடி.
7 எந்தையும் யாயும் அறியும்படி அறத்தொடு நின்று உரைப்பாயாயின்.
8 சீர்மிகு............கரகம்போல் = புகழ்மிக்க தலைமையினையுடைய தக்கணாமூர்த்திதேவர் தாமிருந்த ஆலமரத்தில் தொங்கவிட்டு வைத்த நீர் நிறைந்த கமண்டலம்போல்.

பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள் ;
[1] ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
[2] பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
[3] செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது [4] கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது [5] போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
[6] தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைத
னின்றலை வருந்தியா டுயரஞ்
[7] சென்றனை களைமோ பூண்க நின்றேரே.

இது "வரைவுடம்பட்டோர்க் கடாவல் வேண்டினும்" என்பதனால் தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

---

1 இல்வாழ்க்கை நடத்துதல்.
2 மக்கட் பண்பு.
3 ஒருவரோடு ஒருவர்க்குள்ள உறவு.
4 நம்மவர் என்று கண்ணோட்டஞ் செய்யாது.
5 பகைவரைக் காலம் வரும் அளவும் பொறுத்திருத்தல். (பிறர் செய்த குற்றம் பொறுத்தல் அறிவு என்பதில் அடங்கும்.)
6 இனிதாகிய பாலை யுண்பவர்கள் பாலையுண்டு அதனைக் கொண்டிருந்த கலத்தைக் கவிழ்த்துவிடுதல் போல்வதொன்று.
7 வரைந்து சென்றனையாய்.

(15) அகநானூறு

1. குறிஞ்சி

[1] இரும்பிழி மகாரிவ் [2] வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
[3] மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
[4] பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ்
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
[5] வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழு
மரவவாய் ஞமலி மகிழாது மடியிற்
பகலுரு வுறழ்நிலாக் கான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு [6] கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் [7] தழிதகக் குழறும்
[8] வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலை யொருநா

---

1 மிக்ககள்.
2 ஆரவாரத்தையுடைய பழைய ஊர்.
3 வளமிக்க கடைவீதியும் பிற தெருக்களும் தூங்கினால்.
4 பிணித்துக்கொள்ளும் கூற்றினைப்போல.
5 வலமாக வளைந்த வாலினையுடைய நாய் குரைக்கும்.
6 மிக்க இருள் வந்து தங்குமானால்.
7 கேட்போருள்ளம் அழியுமாறு குழறும்.
8 மரப்பொந்தின்கண் உள்ள கூகைச்சேவல்.

ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, யதனு
[1]லரிபெய் புட்டி லார்ப்பப் [2]பரிசிறந்
[3]தாதி போகிய பாய்பரி நன்மா
[4]னொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட்டன்ன
[5]பன்முட்டின்றாற் றோழிநங் களவே.

என்பது: தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொற்றது. தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியதூஉமாம். பரணர் பாடியது.

2. பாலை

[6]உண்ணாமையி னுறங்கிய மருங்கி
னாடாப் படிவத் தான்றோர் போல
[7]வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லுங்
கானயானை கவினழி குன்ற
மிறந்து பொரு டருதலு மாற்றாய் சிறந்த
சில்லைங் கூந்த னல்லகம் பொருந்தி
[8]யொழியின் வறுமை யஞ்சுதி யழிதக
வுடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவே லெஃகி னிமைக்கு
[9]மழைமருள் பஃறோன் மாவண் சோழர்
[10]கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை

---

1 பருக்கைக் கற்கள் பெய்யப்பட்டுள்ள சதங்கைகள் ஒலிக்க.
2 விரைந்த ஓட்டத்தாற் சிறப்புற்று.
3 ஆதி—குதிரை செல்லுங் கதிகளுள் ஒன்று.
4 காவலாகிய வேலி.
5 பல இடையூறுகளையுமுடையதாயிருந்தது. இஃது இரவுக் குறிக்குரிய இடையூறுகளெல்லாம் வந்த செய்யுள்.
6 "உண்ணாமையின்......போல"=உண்ணாமையினால் உடல் மெலிந்து நீராடாத விரதத்தினையுடைய ஆன்றோர்போல்.
7 மலையிற் செறிந்த சிறிய வழிகளில் கூட்டமாகச் செல்லுங் காட்டியானைகள்.
8 பொருளீட்டச் செல்லாது மனைக்கண் தங்கின்,
9 மேகம்போன்ற கரிய தோலாற் செய்த பல கிடுகுகள்.
10 ஓடக்கோல் நீருள் மூழ்கும்படி மிக்க வெள்ளத்தையுடைய காவிரி.

[1]யிறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

3. மருதம்

[2]மைப்புறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
[3]புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் [4]திங்கட்
சகட மண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
[5]வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்க ணிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த [6]பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்

---

1 இரு மீனோடு கரைக்கு வந்து.
2 குற்றமற நெய்யிடத்து வெந்த இறைச்சியோடு கலந்த வெண்சோறு.
3 புள் நிமித்தம் கூடி நன்றாக.
4 திங்கள்.........கூட்டத்து = திங்கள் உரோகிணியோடு கூடிய குற்றமற்ற நன்னாளில்.
5 மணத்திற்குரிய மங்கல நீராட்டம் செய்வித்த.
6 குழியிலே நெருங்கி வளர்ந்த அறுகை.

தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
[1] மழைபட் டன்ன மணன்மலி பந்த
ரிழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநா ளிரவி
[2] னுவர்நீங்கு கற்பினெம் முயிருடம் படுவி
[3] முருங்காக் கலிங்க முழுவதும் வளைஇப்
பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவிய
ருறுவளி யாற்றச் சிறுவரை திறவென
வார்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலி
னுறைகழி வாளி னுருவுபெயர்ந் திமைப்ப
மறைதிற னறியா ளாகி யொய்யென
நாணின ளிறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை யாம்பற் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமி ராய்மலர் வேய்ந்த
விரும்பல் கூந்த லிருண்மறை யொளித்தே.

என்பது: உணர்ப்பு வயின் வாரா வூடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

விற்றூற்று மூதெயினனார் பாடியது.

4. நெய்தல்

[4] பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவ
ரிருங்கழிச் செறுவி [5] னுழாது செய்த
வெண்க லுப்பின் கொள்ளை சாற்றி
[6] யென்றூழ் விடர குன்றம் போகுங்
கதழ் கோ லுமணர் காதன் மடமகள்

---

1 மழை பெய்த ஒலிபோல மண ஒலிமிக்க பந்தலில்.

2 முனிவில்லாத கற்பினையுடைய எம் உயிருக்கு உடம்பாக அடுப்பவன்.

3 (புதிய தன்மை) கெடாத புடைவை. தமர் நமக்கீத்த தலைநாளிரவில் அவ்வாறிருந்த தலைவி இன்று ஊடல் நீங்கிற்றிலள்; அதனால் இவள் வேறொருத்திபோலும் எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினானாகக் கொள்க.

4 பெரிய கடலில் மீன் பிடித்தலாகிய வேட்டைத் தொழிலையுடைய சிறு குடியில் வாழும் பரதவர்.

5 உழுதற்றொழில் இல்லாமல் விளைவித்த.

6 சூரியனாலே பிளந்த கன்முழைகளையுடைய குன்ற வழியிற் போகும்.

சில் கோ லெல்வளை [1]தெளிர்ப்ப வீசி
[2]நெல்லி னேரே வெண்க லுப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
[3]விளியறி ஞமலி குரைப்ப வெரீஇய
மதர்கயன் மலைப்பி னன்ன கண்ணெமக்
[4]கிதைமுயல் புனவன் புகைநிழற் கடுக்கு
[5]மாமூ தள்ள லழுந்திய சாகாட்
டெவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய வுயிர்க்கு நோயா கின்றே.

என்பது: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற் குரைத்தது. அம்மூவனார் பாடியது.

5. முல்லை.

வருது மென்ற நாளும் பொய்த்தன
வரியே ருண்க ணீரு நில்லா
தண்கார்க் கீன்ற பைங்கொடி முல்லை
[6]வைவாய் வான்முகை யவிழ்ந்த கோதை
பெய்வனப் பிழந்த கதுப்புமுள்ளா
[7]ரருள்கண் மாறலோ மாறுக வந்தி
லறனஞ் சலரே யாயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு

---

1 ஒலிக்கும்படி கையை வீசி.

2 நெல்லுக்கு ஒத்த அளவே வெண்மையான கல்லுப்பு என்று சொல்லி.

3 குரல் வேறு பாடறியும் நாய் வேறு பாடறிந்து குரைக்க.

4 புதிதாகத் தினைப்புனம் ஆக்க முயலும் குறவன்.

5 கரிய பழஞ்சேற்றிலழுந்திய.

6 கூரிய நுனியையுடைய வெள்ளிய அரும்பு.

7 "அருள்கண்............புலம்பினும்"—நம்மிடத்துச் செய்யும் அருள் நீங்கினாராயினும் நீங்குக; அறத்துக்கு அஞ்சாதவராயினரோ என்று, (துன்ப மிகுதியால்) சில சொற்களே கூறிப் பெரிதாக வெறுத்துப் புலம்பினும். தலைவி, தான் தலைவனுலடையும் இன்ப மிழப்பினு மிழக்க; அறனஞ்சாதவன் என உலகம் கூறும் பழி அவனுக்கு வாராதொழியவேண்டும் என நினைக்கின்றனள் என்பது கருத்து.

துனிதீர் முயக்கம் பெற்றோள் போல
வுவக்குவள் வாழிய நெஞ்சே விசும்பி
[1]னேறெழுந்து முழங்கினு மாறெழுந்து சிலைக்குங்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்
போர்வேட் டெழுந்த மள்ளர் கையதை
கூர்வாட் குவிமுகஞ் சிதைய நூறி
மானடி மருங்கிற் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயி னிமைப்ப
[2]வமரோர்த் தட்ட செல்வந்
தமர்விரைந் துரைப்பக் கேட்கு ஞான்றே.

என்பது : வினைமுற்றிய தலைமகன் தன்னெஞ்சிற் குரைப்பானாய்ப் பாகற்குச் சொல்லியது.

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் பாடியது.

(16) பரிபாடல்

திருமால்

அணி[3] நிழல் வயங்கொளி யீரெண் டீங்கதிர்ப்
பிறைவளர் நிறை[4]மதி யுண்டி
யணிமணிப் பைம்பூணமரர்க்கு முதல்வனீ
[5] திணிநிலங் கடந்தக்காற் றிரிந்தயர்ந் தகன்றோடி
நின்னஞ்சிக் கடற்பாய்ந்த பிணிநெகிழ்
பவிழ்தண்டா

---

1 இடியோசை கேட்பினும் அதனைப் பகை யானையின் முழக்கமெனக் கருதி அதற்கு மாறாக ஒலிக்கும்.

2 போரைப்பற்றி நன்கு ஆராய்ந்து பகைவரை யழித்த வெற்றியாகிய செல்வம்.

3 குளிர்ச்சி.

4 மதியை உணவாக உடைய.

5 "திணிநிலம்............முதல்வனீ." — மயங்கித் திருமாலினிடத்துப் பிழை செய்து, அவர் உலக மளந்தருளியபோது, அப்பெருமையைக் கண்டு அஞ்சி ஓடிக் கடலில் வீழ்ந்த அவுணர்க்கும், அங்ஙனம் பிழை செய்யாத அவுணர்க்கும் திருமாலே முதல்வன் என்பது கருத்து.

ரன்னவர் படவல்லா வவுணர்க்கு முதல்வனீ
அதனால், பகைவ ரிவரிவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே
ஆயிர [1]வணர்தலை யரவுவாய்க் கொண்ட
சேவ லூர்தியுஞ் செங்கண் மாஅ
லோவெனக் கிளக்குங் [2]கால முதல்வனை
[3]யேஎ யினகிளத்தலி னினைமைநற் கறிந்தனந்
தீயினுட் [4]டெறனீ பூவினு ணாற்றநீ
கல்லினுண் மணியுநீ சொல்லினுண் வாய்மைநீ
யறத்தினு [5]ளன்புநீ மறத்தினுண் [6]மைந்துநீ
வேதத்து [7]மறைநீ [8]பூதத்துமுதலுநீ
வெஞ்சுட ரொளியுநீ திங்களு ளளியுநீ
யனைத்துநீ யனைத்தினுட் பொருளுநீ யாதலின்
உறைவு முறைவது மிலையே யுண்மையு
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை
[9]முதன்முறை யிடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே
பறவாப் பூவைப் பூவி னோயே
அருள்குடை யாக வறங்கோ லாக

---

1 பிளர்ந்ததலை.

2 கால தத்துவத்திற்கு முதல்வன்.

3 சாம வேதம் ஏஎ என்னும் இசையோடு சொல்லப்படுதலின் அதனை ஏஎ என்றார்.

4 அழித்தற்குக் காரணமான வெம்மை.

5 அறஞ்செய்வார் நெஞ்சத்துள்ள மென்மை.

6 வீரத்தைச் செலுத்துவார் நெஞ்சத்துள்ள வன்மை.

7 உபநிடதம். (தத்துவ ஆராய்ச்சியைக் கூறும் பகுதி.)

8 பூதங்களுள் முதன்மையான ஆகாயம்.

9 "முதன் முறை............இலையே"—படைத்தல் காத்தல் அழித்தலின் பொருட்டுப் பிறவாத பிறப்பில்லை; ஆனால் அப்பிறப்புக்கள் இருவினை வயப்பட்டன அல்ல; நின் விருப்பினால் மேற்கொள்ளப் படுபவை என்பது கருத்து.

விருநிழல் படாமை மூவே ழுலகமு
மொருநிழ லாக்கிய வேமத்தை மாதோ.

செவ்வேள்

மண்மிசை யவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
[1]புண்மிசைக் கொடியோனும்[2]புங்கவ மூர்வோனு
மலர்மிசை முதல்வனு மற்றவ னிடைத் தோன்றி
யுலகிரு ளகற்றிய[3]பதின்மரு மிருவரு
[4]மருந்துரை யிருவருந்[5]திருந்துநூ லெண்மரு
மாதிரை முதல்வனிற் கிளந்த
[6]நாதர்பன் னொருவரு நன்றிசை காப்போரும்
யாவரும் பிறரு மமரரு மவுணரு
[7]மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
[8]பற்று கின்றுநின் காரண மாகப்
பரங்குன் றிமையக் குன்ற நிகர்க்கு
மிமையக் குன்றினிற் சிறந்து
நின்னீன்ற நிரையிதழ்த் தாமரை
மின்னீன்ற விளங்கிண ரூழா
[9]வொருநிலைப் பொய்கையோ டொக்குநின் குன்றி
[10]னருவிதாழ் மாலைச் சுனை
முதல்வநின் யானை முழக்கங் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ
மதநனி வாரண மாறுமா றதிர்ப்ப

---

1 கருடனை மேலே எழுதப்பட்ட கொடியையுடைய திருமால்.
2 காளை.
3 ஆதித்தர் பன்னிருவரும்.
4 அச்சுவினி தேவரிருவரும்.
5 வசுக்களெண்மரும்.
6 உருத்திரர் பதினொருவரும்.
7 ஓதியுணர்தற்கரிய வேதத்தை உணர்ந்த சிறந்த தவத்தினையுடைய தெய்வ முனிவர்கள்.
8 உறையுமிடமாகின்றது.
9 வற்றாப் பொய்கை.
10 அருவி தங்கும் ஒழுங்குபட்ட சுனை.

வெதிர்குதி ராகின் [1]றதிர்ப்பு மலை முழை
[2]யேழ்புழை யைம்புழை யாழிசை [3]கேழ்த்[4] தன்ன
வினம்
[5]வீழ்[6] தும்பி வண்டொடு மிஞிறார்ப்பச் சுனைமலரக்
கொன்றை கொடியிணை ரூழ்ப்பக் கொடிமலர்
மன்றல மலர மலர்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பன்மலர் நாற நறைபணிப்பத்
தென்ற லசைவரூஉஞ்[7] செம்மற்றே யம்மநின்
[8]குன்றத்தாற் கூடல் வரவு.

வையை

திரையிரும் பனிப்பௌவஞ் செவ்விதா வறமுகந்
துரவுரு முடன்றார்ப்ப [9]வூர்பொறை கொள்ளாது
கரையுடை குளமெனக்[10]கழன் றுவான்[11]வயிறழிபு
[12]வரைவரை தொடுத்த வயங்குவெள் ளருவி
யிரவிருள் பகலாக விடமரிது செலவென்னாது
வலனிரங்கு முரசிற் றென்னவ ருள்ளிய
நிலனுற நிமிர்தானை நெடுநிரை நிவப்பன்ன
பெயலாற் பொலிந்து[13]பெரும்புனல் பலநந்த
நலனந்த [14]நாடணி நந்தப் [15]புலனந்த

---

1 அதிர்ப்பு மலை முழை என்பதனை மலை முழை அதிர்ப்பு என மாற்றி, மலை முழையில் எழுகின்ற எதிரொலி எனக் கொள்க.
2 எழு துளையுடைய வங்கியம் ஐந்து துளையுடைய வங்கியம்.
3 வங்கியம் யாழ் இவற்றிற் பிறந்த இசைச் சுருதி யொத்து.
4 நிறத்தாலொத்த வண்டின் இனம்.
5 விரும்பும் தன்மையுள்ள.
6 தும்பி, வண்டு, மிஞிறு என்பன வண்டின் சாதிகள்; சுரும்பு என்பது சேர்த்து வண்டின் சாதி நான்கு என்பர் சிந்தாமணியில்.
7 தலைமையையுடைத்து.
8 திருப்பரங்குன்றிற்கும் மதுரைக்கும் இடையிலுள்ள வழி.
9 மேகம் தன்மேலேறின நீராகிய பாரத்தைப் பொறுக்கமாட்டாது.
10 அப்பாரம் கழல.
11 வயிறழிதலால்.
12 சிகரங்கள்தோறும் தொடுத்த.
13 மற்றை யிடங்களிற் சேரும் புனல் பலவற்றோடுங்கூடிப் பெருகுதலால்.
14 மென்புலம் (நன்செய் நிலமுள்ள மருதம்).
15 வன்புலம் (புன்செய் நிலமுள்ள முல்லை முதலியவை).

வந்தன்று வையைப் புனல்
நளியிருஞ் சோலை நரந்தந் தாஅ
யொளிர்சினை வேங்கை விரிந்தவிண [1]ருதிரலொடு
துளியி னுழந்த தோய்வருஞ் சிமைதொறும்
வளிவாங்கு சினைய மாமரம் வேர்கீண்
டுயர்ந்துழி யுள்ளன [2]பயம்பிடைப் பரப்பி
யுழவர் களிதூங்க முழவு பணைமுரல
வாடலறியா வரிவை போலவு
மூடலறியா வுவகையள் போலவும்
[3]வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது
விதியாற்று ணுக்கிய மெய்க்கலவை போலப்
[4]பொதுநாற்ற முள்ளுட் கரந்து புதுநாற்றஞ்
செய்கின்றே செம்பூம் புனல்.

(17) பதிற்றுப் பத்து

(1) நான்காம்-பத்து

குன்றுதலை மணந்து குழூஉக்கட லுடுத்த
மண்கெழு ஞாலத்து மாந்த ரோராங்குக்
[5]கைசுமந் தலறும் பூசன் மாதிரத்து
நால்வேறு நனந்தலை யொருங்கெழுந் தொலிப்பத்
தெள்ளுயர் வடிமணி யெறியுநர் கல்லென
[6]வுண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டூது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅ
யலங்கற் செல்வன் சேவடி பரவி

---

1 உதிர்ந்த பூவோடு கூடி.
2 பள்ளங்களில்.
3 ஆடலறியா அரிவைபோல வேண்டு வழி நடந்து; ஊடலறியா உவகையள்போலத் தாங்குதடைபொருது எனக் கூட்டுக.
4 நறும் பொருள் பல கூடிய நாற்றம்.
5 கையைத் தலைமேற் குவித்துத் துதிக்கும் ஆரவாரம்.
6 திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலில் வரம் வேண்டி உண்ணாது கிடந்த மக்கட் கூட்டம்,

நெஞ்சுமலி யுவகையர் துஞ்சுபதிப் பெயர
மணிநிற மையிரு ளகல நிலாவிரிபு
[1]கோடுகூடு மதிய மியலுற்றுருங்குத்
துளங்குகுடி விழுத்திணை திருத்தி [2]முரசுகொண்
[3]டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு
கருவி வானந் தண்டளி தலைஇய
வடதெற்கு விலங்கி விலகுதலைத் தெழிலிய
பனிவார் விண்டு விறல்வரை யற்றே
கடவு ளஞ்சி வானத் திழைத்த
தூங்கெயிற் கதவங் காவல் கொண்ட
வெழுஉ நிவந் தன்ன [4]பரேரெறுழ் முழவுத்தோள்
வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்ட னனையைம னீயே வண்டுபட
[5]வொலிந்த கூந்த லறஞ்சால் கற்பிற்
குழைக்கு விளக்காகிய வொண்ணுதற் பொன்னி
னிழைக்குவிளக் காகிய [6]வவ்வாங் குந்தி
விசும்புவழங்கு மகளி ருள்ளுஞ் சிறந்த
[7]செம்மீ னனையணின் றொன்னகர்ச் செல்வி
நிலனதிர் பிரங்கல வாகி வலனேர்பு

---

1 முழுத்திங்கள்.

2 முரசுகொண்டு என்றது, இதற்குமுன் சிலகாலம் பயன் கொள்வாரின்மையின் பயனின்றிக் கிடந்த முரசினைப் பயன்படும்படி செய்து என்றவாறு.

3 ஆண்மக்களாயுள்ளார் தங்கீழ் வாழ்வாரைக் காத்தற்குச் செய்யும் கடன்களெல்லாம் செய்து முடித்த.

4 பருத்த அழகிய வலிமைபொருந்திய முழவுபோன்ற தோள்.

5 தழைத்த.

6 அழகிய வளைந்த உந்தி.

7 அருந்ததி.

வியன்பணை முழங்கும் [1]வேன்மூ சழுவத்
தடங்கிய [2]புடையற் பொலங்கழ றொன்று
ளொடுங்காத் தெவ்வ [3]ருக்கறக் கடைஇப்
புறக்கொடை யெறியார் நின் [4]மறப்படை
கொள்ளுநர்
[5]நகைவர்க் கரண மாகிப் பகைவர்க்குச்
சூர் நிகழ்ந் தற்று நின் றானை
போர்மிகு குருசினீ மாண்டனை பலவே.

துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்—ஒழுகுவண்ணம்.
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—கமழ் குரற் றுழாய்.

(2)

[6]மாண்டனை பலவே போர்மிகு குருசினீ
மாதிரம் விளக்குஞ் சால்புஞ் செம்மையு
முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற
மிக்கெழு [7]கடுந்தார் துய்த்தலைச் சென்று
[8]துப்புத்துவர் போகப் [9]பெருங்கிளை யுவப்ப
வீத்தான் றுறு விடனுடை வளனுந்
[10]துளங்குகுடி திருத்திய [11]வலம்படு வென்றியு

---

1 வேற்படை செறிந்த வீரர் பரப்பு.
2 பனந்தார்.
3 மேற்கோள் அழிய.
4 வீரம்பொருந்திய சேனைத் தலைவர்.
5 நட்பினர்.
6 நீ பல குணங்களாலும் மாட்சியுற்றனை.
7 கொடிய தூசிப்படையின் (முற்படையின்) முன்னிடத்தே சென்று.
8 பகைவலிமை முழுவதும் ஒழிய.
9 நின்னுடைய வீரர் முதலியோர் உவப்ப.
10 தளர்ந்த குடிகளுக்கு உதவிபுரிந்து நன்னிலையில் நிறுத்திய.
11 மேன்மேலும் பல போர் வென்றிகளும் உண்டாதற்குக் காரணமாகிய வென்றி.

மெல்லா மெண்ணி [1]னிடுகழங்கு தபுந
[2]கொன்னென்று மருண்டனெ னடுபோர்க் கொற்றவ
நெடுமிடல் சாயக் கொடுமிட றுமியப்
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்துத்
தடந்தா ளாரை படிந்திரை கவரு
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையு ணாடகப் படுத்து
[3]வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேளத் தாயினுஞ்
சினவா யாகுத லிறும்பூதாற் பெரிதே.

இதுவுமது.

பெயர்—கழையமல் கழனி.

(18) புறநானூறு

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
[4]யாரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க [5]ணிவளினும் பிரிக
வறனிலை திரியா வன்பி னவையத்துத்

---

1 பொருள்களை எண்ணும்போது ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கழற்சிக்காயை அறிகுறியாக இட்டு, இறுதியில் எத்துணைக் கழற்சிக்காய் உள்ளனவோ, எண்ணப்பட்ட பொருள்களும் அத்துணையன என்றறிதல் மரபு. ஈண்டுக்களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலுடைய குணங்களை எண்ணுதற்கு இடப்படும் கழற்சிக்காய்கள், அவன் குணங்களின் அளவுக்கு இல்லாமல் குறையும் என்றபடி.

2 அக்குணங்களுள் ஒரு குணங் கண்டு யான் மயங்கினேன். அக்குணமாவது—பகைவரோடு போர் புரியுமிடத்தும் வெகுளாத பொறுமையாம்.

3 ஒரு வகையிலும் சேர்த்தற்கியலாத இயல்பினையுடையவர் (உறுதியான ஒரு கொள்கையில்லாதார்) என்றபடி.

4 பொறுத்தற்கரிய போர்.

5 இவள் என்றது அரசன் தன் தேவியைச் சுட்டிச் கூறியது.

திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
[1]மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
[2]வின்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு [3]நீள் குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

திணை—காஞ்சி ; துறை—வஞ்சினக் காஞ்சி.
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாட்டு.

2 மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு [4]தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
[5]தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
[6]றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்

---

1 கொடுங்கோல்.
2 இனிய செருக்கையுடைய மகிழ் நகையைத் தப்பியவனாகி.
3 அரசர் குடிகளுட் சிறந்த.
4 பழையதாய் வருகின்ற உரிமையையுடைய எனது அரசாட்சி கொடுத்தலோ எளிது.
5 ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாது என்றது தன்னுடைய அமைச்சர் படைத்தலைவர் முதலாகிய வலியுடையோரது வலிமையைப் பகையரசர் நன்கு மதியாது இகழ்ந்து என்றபடி.
6 தூங்குகின்ற புலியைக் காலால் இடறிய குருடன் அப்புலியால் கொல்லப்படுதல் ஒருதலையாதல்போல.

கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் [1]சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

திணை—காஞ்சி; துறை—வஞ்சினக்காஞ்சி.
சோழன் நலங்கிள்ளி பாட்டு.

3 குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
[2]மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
[3]கேளல் கேளிர் வேளாண் சிறுபத
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே.

திணை—பொதுவியல்; துறை—முதுமொழிக் காஞ்சி.

சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா வென்று பெறுது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணுன் சொல்லித் துஞ்சிய பாட்டு.

4 இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
[4]கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை [5]வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று

---

1 பகைவர் தன்னிடம் வருந்துணையுங் காத்திராது தான் அவரிருக்கு மிடம் சென்று.

2 வீரர் அல்லவென்று கருதி வாளாற் பிளத்தலிற்றவறார்.

3 சிறைக்கோட்டங் காவலருடைய உபகாரத்தான் வந்த தண்ணீர்.

4 உடற் பகுதி திரண்ட வலிய காம்பு.

5 வியனகர என்பது ஏகாரமும் விரித்தல் விகாரமும் பெற்று வியன கரவ்வே என்றாயிற்று.

முண்டாயிற் [1] பதங் கொடுத்
தில்லாயி னுடனுண் ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலங் கோமான் வைந்நுதி வேலே.

திணை—பாடாண்டிணை ; துறை—வாண்மங்கலம்.

அதிகமான் நெடுமானஞ்சி தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது.

5 அளிதோ தானே பாரியது பறம்பே
[2] நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழ [3] மூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு [4] வீழ்க் கும்மே
நான்கே, அணி நிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
[5] வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
[6] தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
[7] சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி

---

1 உணவு.
2 பெருமை.
3 முதிரும்.
4 பூமியினுள்ளே விளையும்.
5 வான்கண் அற்று என்றது மலையின் உயரமும் பரப்பும் கருதி.
6 முயற்சியாற் கொள்ளமாட்டீர்.
7 வடித்து முறுக்கப்பட்ட நரம்பினையுடைய.

[1]விரையொலி கூந்தனும் [2]விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங்குன்று மொருங்கீ யும்மே.

திணை—நொச்சி ; துறை—மகண்மறுத்தல்.
வேள்பாரியைக் கபிலர் பாடியது.

6 கடல்கொளப் படாஅ[3] துடலுந ருக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
யழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத்திருவின் விறல்கெழு தானை
[4]மூவரு ளொருவன் றுப்பா கியரென
[5]வேத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
[6]யரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ[7] பெருமிதத் தையே.

திணை—பாடாண்டிணை ; துறை—இயன்மொழி
மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

7 விளங்கு[8]மணிக் கொடும்பூணாஅய் நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ

---

1 மணம் பொருந்திய தழைத்த கூந்தல்.
2 அரசர்களை "ஆடினிர் பாடினிர் செலின்" என்று கூறுதலின், அவர் மனைவியரை விறலியர் என்றார்.
3 பகைவர் கைக்கொள்ளுதற்கு மேற்கொள்ளார்.
4 மூவேந்தருள் ஒருவனுக்கு நீவலியாக (போர்த்துணையாக) வேண்டுமென்று.
5 (அம்மூவர்பானின்றும் வந்தோர் தனித்தனி நின்னைப்) புகழ்ந்து தரும்பொருள்.
6 அரிவை தோளளவல்லது நினதெனவிலை என்றது, நின் மனைவியல்லது வேறு எப்பொருளும் நினக்கென வரைந்து கொண்டாயல்லை என்றபடி.
7 பெருமிதம் என்றது, இரவலர்க்கும் அந்தணர்க்கும் வேண்டுவன கொடுத்தோம் என்னும் உள்ளச்செருக்கு.
8 மணிகளானியன்ற விளங்குபூணணிந்த ஆரத்தையுடைய ஆயே!

நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவா துவந்துநீ யளித்த
வண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
[1]தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே.

திணை—பாடாண்டிணை ; துறை—இயன்மொழி
ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

8 பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்[2]டசைஇ
யூரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
[3]யாரீ ரோவென வினவ லானாக்
[4]காரெ ணெக்கற் கடும்பசி யிரவல
வெல்வே லண்ணற் காணா வூங்கே
[5]நின்னினும் புல்லியே மன்னே யினியே
[6]யின்னே மாயினே மன்னே யென்று
முடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் [7]கலிமான் பேக
[8]னெத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

திணை—பாடாண்டிணை ; துறை—பாணாற்றுப்படை ; புலவராற்றுப்படையுமாம்.

வேயாவிக்கோப் பெரும் பேகனைப் பரணர் பாடியது.

---

1 (தம்முயிர்க்கரணாகக்) கைவிட்டுச் சென்ற வேலினும்பல.
2 இளைப்பாறி.
3 நீர் யாவிர் பாணரோ எனக் கேட்டலமையாத. (பன்முறையுங் கேட்கின்ற)
4 புல்லென்ற சுற்றம். (வறுமையால் வாடிய சுற்றம்)
5 நின்னினும் வறியேம்.
6 வறுமை நீங்கி இப்பொழுதுள்ள தன்மையே மாயினேம்.
7 மனஞ்செருக்கிய குதிரை.
8 எத்துணையாயினும் ஈத்தல் நன்றெனப் பிறர் வறுமை நோக்கின்று ; மறுமை நோக்கின்றோ அன்று எனக்கூட்டுக.

9 [1]கறங்குமிசை யருவிய [2]பிறங்குமலை நள்ளிநின்
னசைவி னோன்றா ணசைவள னேத்தி
[3]நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின்முற் றளிப்பப்
பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்த
லெய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.

திணை பாடாண்டிணை ; துறை – பரிசிற்றுறை
கண்டீரக்கோப் பெருநள்ளியை வண்பரணர் பாடியது.

10 மழையணி குன்றத்துக் கிழவ னாளு
மிழையணி யானை யிரப்போர்க் கீயுஞ்
சுடர்விடு பசும்பூட் [4]சூர்ப்பமை முன்கை
யடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றுஞ்
சென்றது மன்னெங்[5] கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா[6] மணிமிடை குவளை
[7]வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
[8]பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்

---

1 மிசைகறங்கு என மாற்றி உச்சியிலிருந்து அசைந்து விழும் எனக்கொள்க.
2 உயர்ந்தமலை.
3 "நாடொறும்......அளிப்ப" என்பதை நள்ளியின் தொழிலாகவும், அவன்பாற் பரிசில் பெற்ற பரிசிலர் தொழிலாகவும் கூறலாம்.
4 வளைந்த கடகமமைந்த.
5 கூத்தச் சுற்றம்.
6 நீலமணிகளமைத்துச் செய்யப்பட்ட குவளைப்பூ.
7 வெள்ளிநார்.
8 பசிதோன்றப் பெருமையால். (வறுமை நீங்கினமையால் என்பது கருத்து.)

கூடுகொ ளின்னியங் கறங்க
வாடலு மொல்லார்தம் பாடலு மறந்தே.

திணை—பாடாண்டிணை ; துறை—இயன்மொழி
வல்விலோரியை வன்பரணர் பாடியது.

11 [1]தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் [2]துஞ்சான்
[3]கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீத
றுய்ப்பே மெனினே தப்புந பலவே.

திணை—பொதுவியல் ; துறை—பொருண்மொழிக் காஞ்சி
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

12 [4]பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
[5]கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
[6]நல்லது செய்த லாற்றீ ராயினு
[7]மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

திணை—பொதுவியல் ; துறை—பொருண்மொழிக்காஞ்சி.
நரிவெரூஉத் தலையார் பாடியது.

---

1 "தெண்கடல்......ஒருமை யோர்க்கும்" என்றது உலக முழுதும் ஒரு குடைக்கீழாண்ட பேரரசர்க்கும் என்றபடி.
2 தூங்காதவனாய்.
3 விரைந்து செல்லும் விலங்குகளைக் கொல்லக்கருதிச் செல்லும்.
4 பல்சான்றீரே என்றது இழித்தற் குறிப்பு.
5 மழு.
6 நல்லது செய்தல் ஆற்றீராயினும் என்றதனால் நல்லது செய்தல் வேண்டும் என்பது கருத்து.
7 தீவினை செய்தலை ஒழியுங்கள்.

(19) சிலப்பதிகாரம்

வேனிற்காதை

சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ மல்லிகை [1]வேரொடு மிடைந்த
அஞ்செங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
யெதிர்பூஞ் செவ்வி யிடைநிலத் தியாத்த
[2]முதிர்பூந் தாழை முடங்கல் வெண்டோட்டு
விரைமலர் வாளியின் வியனில மாண்ட
ஒருதனிச் செங்கோ [3]லொருமக னாணையி
[4]னொருமுக மன்றி யுலகுதொழு திறைஞ்சுந்
திருமுகம் போக்குஞ் [5]செவ்விய ளாகி
யலத்தகக் கொழுஞ்சே றளைஇ யயலது
பித்திகைக் கொழுமுகை [6]யாணி கைக்கொண்டு
மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கு
மின்னிள வேனி [7]லிளவர சாள
னந்திப் போதகத் [8]தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் [9]பொழுதிடைப் படுப்பினுந்
[10]தணந்த மாக்கள் தந்துணை மறப்பினு

---

1 வெட்டிவேர் என வழங்குவது.

2 இடைநிலத்தியாத்த பூஞ்செவ்வி எதிர்முதிர் தாழைப்பூ முடங்கல் வெண்டோட்டு எனக்கூட்டிப் பொருள்கொள்க.

3 காமனாகிய பேரரசன்.

4 ஒரு திசையிலுள்ளார் மட்டுமேயன்றி உலகமெல்லாம் தொழுதிறைஞ்சத்தக்க.

5 தன்மையையுடையவளாகி; அன்றி நினைவையுடையவளாகி.

6 எழுத்தாணி.

7 இளவரசாளன் என்றதனால் அவன் நெறியறிந்து செய்யான் என்பது கருத்து.

8 அரும்பு இடர்தோன்றிய—பிரிந்தார்க்கு உண்டாகும் காம நோயின்மேல் வந்துதோன்றிய.

9 ஊடல் நீட்டித்து, அதனால் காலந்தாழ்ப்பினும்.

10 ஓதல் முதலியவற்றாற் பிரிந்தோர் குறித்த காலத்தில் வாராதொழியினும்.

நறும்பூ வாளியி [1]னல்லுயிர் கோட
விறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென
வெண்ணென் கலையு மிசைந்துடன் போகப்
பண்ணுந் திறனும் [2]புறங்கூறு நாவிற்
தளைவா யவிழந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின்[3]விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாங்
[4]கோவலற் களித்துக் [5]கொணர்க வீங்கென
மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்ப
அணித்தோட்டுத் திருமுகத் தாயிழை எழுதிய
மணித்தோட்டுத் திமுமுக மறுத்ததற் கிரங்கி
[6]வாடிய வுள்ளத்து வசந்த மாலை
தோடலர் கோதைக்குத் துனைந்து சென்றுரைப்ப
[7]மாலை வாரா ராயினு மாணிழை

---

1 காமவின்பம் நுகர்தற்குரிய நல்வினையுடைய உயிர்.

2 பண்ணுந்திறனும் இவள் சொல்லினிமைக்குத் தோற்றலின் புறங்கூறுவனவாயின.

3 எழுதப்படுவதைப் பன்முறை சொல்லிக்கொண்டே எழுதினாள்; கோவலன் அதனைக்கண்டு உடனே வருதல் வேண்டுமென்னும் அவாவினால்.

4 எழுதப்பட்ட கருத்தைக் கோவலன் மனங்கொள்ளுமாறு எடுத்துக்கூறி.

5 எப்படியும் அவனைக் கொண்டுவருதல் வேண்டும் என்னும் நினைவினளாய்க் "கொணர்க" என்றாள்.

6 மாதவி துன்பம் நீங்கவழியின்மையானும், தன்தூது பயனுறுண்மையானும் வாடிய உள்ளத் தளாயினள் வசந்தமாலை.

7 கோவலன் மறுத்ததுகண்ட வசந்தமாலை மாதவியினிடம் கோவலனைப்பற்றி யிகழ்ந்துகூற, அது பொறாத மாதவி மாலைவாராராயினும் காலை காண்குவம் என்றாள். இனி, முன் தன்னிடத்து அவனுக்கிருந்த அன்பையே யறிந்தவளாதலின் அங்ஙனம கூறினள் என்றலுமாம்.

காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

அடைக்கலக் காதை

அறத்துறை மாக்கட் கல்ல திந்தப்
புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலி
னரைசர் பின்னோ ரகநகர் மருங்கினின்
னுரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
கோவலன் றனக்குக் கூறுங் காலை
[1]யறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
[2]புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ
ளாயர் முதுமகண் மாதரி யென்போள்
காவுந்தி யையையைக் கண்டடி தொழலு
மாகாத் தோம்பி [3]யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளளியண்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி
மாதரி கேளிம் [4]மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கிற் றன்குல வாண

---

1 அறத்தைவிரும்பிய நெஞ்சினையுடைய,

2 புறஞ்சிறை மூதூரினிடத்துள்ள கவுந்தியைக் கண்டடிதொழலும் எனக்கூட்டுக.

3 ஆவின்பயனாகிய பால் முதலியவற்றை யாவர்க்கும் கொடுக்கும்.

4 பரத்தையைக் கூடியொழுகிய கோவலனினும் கற்பிற்சிறந்த கண்ணகி மேன்மையுடையள் என்பது கருதிக் கோவலன் தந்தை என்னாது, மடந்தைதன் கணவன் தாதை என்றார்.

[1]ரரும் பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவ
ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு
[2]மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க ணஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் [3]சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பி
னாயமுங் [4]காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கிங்
கென்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
[5]வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
[6]யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
[7]பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
[8]வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது

---

1 பெறுதற்கரிய பொருளைப் பெற்றவரைப்போல மகிழ்ந்து.
2 இடைக்குல மடந்தையாகிய உனக்கு.
3 மங்கலமாகச் சிலமலரையணிந்து.
4 செவிலித்தாய்.
5 மதுரைக்குப் புறபபடுவதற்குமுன் வீட்டை விட்டுப் புறப் பட்டறியாள் என்பது கருத்து.
6 இல்லறவாழ்க்கைக் கேற்ற இனிய துணையாகிய மகளிர்.
7 கற்புத்தெய்வம் ஊனக் கண்ணாற் காணப்படுதலின் இதனினும் சிறந்த தெய்வம் கண்டிலம் என்றார்.
8 "வானம்......தருமது கேளாய்" என்ற பகுதியில் தன் அடைக்கலப் பொருளை ஏற்றுக்கோடற்குக் கவுந்தி இரண்டு காரணங் கூறினர்; ஒன்று பத்தினிப்பெண்டிர் இருக்கும் நாடு சிறப்புறும் என்பது; மற்றொன்று தவத்தோர்கொடுக்குமடைக்கலம் சிறிதாயினும் பேரின்பம் தருவது என்பது.

நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு
மிகப்பே ரின்பந் தருமது கேளாய்.

ஆய்ச்சியர் குரவை.

படர்க்கைப்பரவல்

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
[1]சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே.
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.
பெரியவனை [2]மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத[3] கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே.
[4]மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா[5]னாற்றிசையும் போற்றப்

---

1 சேவகன்—வீரன். "கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ" (திருவாய்மொழி) என்பது காண்க.

2 ஆச்சரியப்படத்தக்க குணஞ்செயல்களையுடையவனை.

3 காட்சிக்கினிய னாதலிற் காணாத கண் என்ன கண் என்றார். (நம்பியைக்காண நங்கைக்காயிரம் நயனம் வேண்டும். இராமாயணம்.)

4 அறியாமை நிலைத்துள்ள நெஞ்சத்தையுடைய கஞ்சன். கஞ்சனார் இழிவுக் குறிப்பு.

5 நாற்றிசையிலுமுள்ள தேவர்கள் போற்ற; நாற்றிசையும் கூறியதனால் உலக முழுவதும் போற்ற என்றும் கொள்ளலாம்.

படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.

வழக்குரை காதை

[1]தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின், கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்ற
னரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
[2]பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூ
ரேசாச் சிறப்பினிசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
[3]வாழ்தல் வேண்டி [4]யூழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு [5]பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்ப தென்பெய ரேயெனப்,
பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
[6]வெள்வேற் கொற்றங் காணென வொள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே

---

1 உண்மை காண்டலில்லாத மன்னா.
2 மிக்க புகழையுடைய புகார்.
3 வாழ்க்கைக்கு வேண்டிய பொருளீட்டக் கருதி.
4 ஊழ்வினை நின்னாட்டை நோக்கிச் செலுத்த.
5 பகர்தல்வேண்டி வந்து என ஒருசொல் வருவிக்க.
6 வெள்வேல் = அறத்தின் வழிச் செல்லும் வேல். (அறம் வெண்மையாகவும் பாவம் கருமையாகவும் கூறுதல் மரபு.)

யென்காற் பொற்சிலம்பு [1]மணியுடை யரியே, யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
[2]தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே,
மணிகண்டு
[3]தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
[4]லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

வஞ்சிக்காண்டம்

குன்றக் குரவை

[5]சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று
மேரகமு [6]நீங்கா விறைவன்கை வேலன்றே

---

1 மணியை அரியாக உடையது; பின் முத்துடையரி என்பதும் இவ்வாறே கொள்க.

2 கோவலனிடத்திருந்து பெற்ற சிலம்பைக் கொண்டுவருக எனத் தந்து முன்வைப்ப.

3 அறத்திற் றவறியதால் அவன் குடை பெருமையிழந்தது; கோல் கோடிற்று என்றபடி.

4 இது காறும் தவறாது வந்தகாவல் என்முதலாகத் தவறியது.

5 சீர்கெழு என்பதைச் செங்கோடு, வெண்குன்று, ஏரகம் என்பவற்றோடும் கூட்டுக.

6 அடியார் பொருட்டாக மேற்கூறிய இடங்களைவிட்டுப் பிரியா துறைகின்ற.

பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே.
[1]அணிமுகங்க ளோராறு மீராறுகையு
மிணையின்றித் தானுடையா னேந்தியவே லன்றே
[2]பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ண
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.
[3]சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே லன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே.

காட்சிக்காதை

[4]மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கு
மொண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாந்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
தீவினைச் சிலம்பு காரண மாக
வாய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற [5]சேயிழை வழக்குஞ்
[6]செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி
யஞ்சி லோதி யறிகெனப் பெயர்ந்து

---

1 அன்பர்க்கு முகமலர்ந்து அருள்புரிதலின் அணிமுகங்கள் என்றார்.
2 பிணிமுகம் முருகக்கடவுள் ஊரும் யானை; மயிலுமாம்.
3 சரவணப் பொய்கையில் தாமரையாகிய பள்ளியறையில்.
4 உலகிற்குக் களிப்பைத் தருகின்ற நெடுவேலையுடைய மன்னவன்.
5 கண்ணகி வழக்குரைத்துக் கோவலன் கள்வனல்லன் என்று காட்டியதும்.
6 கண்ணகி தன் கையிலிருந்த சிலம்பை எறிந்துவிட்டு.

முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
[1]மதுரை மூதூர் மாநகர் சுட்டது
மரிமா னேந்திய வமளிமிசை யிருந்த
[2]திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்
றயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன்
மயங்கினன் கொல்லென மலரடிவருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
[3]கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅண்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோற் றன்மை
[4]யிற்றெனக் காட்டி யிறைக்குரைப் பனள்போற்
[5]றன்னாட் டாங்கட் டனிமையிற் செல்லா
ணின்னாட் டகவயி னடைந்தன ணங்கையென்
றெழிவின் றுரைத்தீண் டூழி யூழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்
தென்னர் கோமான் றீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தின னுரைப்போ
[6]னெம்மோ ரன்ன வேந்தற் குற்ற

---

1 மதுரை மூதூராகிய மாநகர்.

2 திருவிரும்பும் மார்பு; இப்பொழுது கோல் கோடினமையால் திருநீங்கிய மார்பு என்றுமாம்.

3 கலக்கங்கொள்ளாமலும் கடுந்துயரடையாமலும் விரைவி னிறந்தாள் என்றபடி.

4 இத்தன்மைத்தென விளங்கக்காட்டி இறையாகிய உனக்குரைப்பவள் போல.

5 கணவனுடன் புறப்பட்டு வந்த தன்னாட்டிற்குக் கணவனை யிழந்த நிலையிற் செல்ல விரும்பாமல்.

6 எம்மோரன்ன......................உறுகவீங்கென = பாண்டியன் பிழை செய்ததுபற்றிய பழியுரை ஏனை வேந்தர் செவிகளிற் சென்று வீழ்வதன்முன், அப்பிழை காரணமாக அவன் உயிர் நீங்கிய செய்தி சென்று வீழ்க என்றபடி.

செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமு
னுயிர்பதிப் பெயர்த்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
[1]பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சங்
[2]குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்த
[3]றுன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பந் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவற்கு [4]நன்கன முரைத்தாங்
[5]குயிருடன் சென்ற வொருமக டன்னினுஞ்
[6]செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினு
[7]நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென
மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
காதலன் றுன்பங் காணாது கழிந்த
[8]மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திற நிற்கநம் மகனா டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்.

அறவுரை

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
[9]தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்

---

1 தன்னாட்டு உயிர்கள் துன்பமுறின்.
2 குடிகளை நன்கு காத்தும் எவ்வகையிலேனும் கொடுங்கோல் உண்டாகிவிடுமோ என்று அஞ்சி.
3 துன்பந்தருதற் குரியதேயன்றி இன்பத்திற் குரியதன்று என்று.
4 உள்ளந் தெளியுமாறு எடுத்துக் கூறி.
5 கணவன் இறந்தவுடனிறந்த ஒப்பற்ற கோப்பெருந் தேவி.
6 ஊரையெரித்த வெகுளியுடன் வந்த கண்ணகி.
7 நன்னுதலாகிய நீ (சேரன் மனைவி).
8 பாண்டியன் தேவி விண்ணுலகில் இன்புறுக.
9 தெய்வம் உண்டு என்று துணிக.

பொய்யுரை யஞ்சுமின் [1]புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் [2]தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீ நட்பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் [3]பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
[4]அறமனை காமின் அல்லவை கடிமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்.

(20) மணிமேகலை

மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

இளங்கோன் கண்ட விளம்பொற் பூங்கொடி
விளங்கொளி மேனி விண்ணவர் வியப்பப்
[5]பொருமுகப் பளிங்கி னெழினி வீழ்த்துத்
[6]திருவின் செய்யோ ளாடிய பாவையின்
விரைமல ரைங்கணை மீன விலோதனத்
துருவி லாளனொ டுருவம் பெயர்ப்ப
வோவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்
[7]காவியங் கண்ணி யாகுத றெளிந்து
தாழொளி மண்டபந் தன்கையிற் றடைஇச்
சூழ்வோன் சுதமதி தன்முக நோக்கிச்
சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன
வெத்திறத் தாணின் னிளங்கொடி யுரையெனக்

---

1 புறஞ்சொல் சொல்லாது ஒழுகுமின்.
2 தவத்திற்குரிய விரதங்கள் பலவற்றை மேற்கொள்க.
3 மெய்ப்பொருள்பற்றிக் கூறும் தத்துவ மொழிகள்.
4 அறமனை—மனையறம் = இல்லறம்.
5 அரங்கில் இருபுறத்திருந்து வந்து கூடும் திரை.
6 திருவாகிய செய்யோள்.
7 ஓவியம் என்று கருதியவன், கண்ணிமைத்தல் முதலிய இயக்கத்தால் மணிமேகலை எனத் தெளிந்தான்.

குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
[1]முருகச் செவ்வி முகந்துதன் கண்ணாற்
பருகா ளாயிற் பைந்தொடி நங்கை
[2]ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மைய ளென்றே
தூமலர்க் கூந்தற் சுதமதி யுரைப்பச்
சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்கொளிற்
[3]செவ்விய ளாயினென் செவ்விய ளாகென
வவ்விய நெஞ்சமொ டகல்வோ னாயிடை
... ...
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலு முண்டென்
றப்பொழி லாங்கவ [4]ணயர்ந்து போயபின்
பளிக்கறை திறந்து [5]பனிமதி முகத்துக்
[6]களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகிக்
கற்புத் தானில ணற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்
[7]றிகழ்தன னாகி நயந்தோ னென்னாது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச
மிதுவோ வன்னாய் காமத் தியற்கை
யிதுவே யாயிற் கெடுகதன் றிறமென
மதுமலர்க் குழலாள் மணிமே கலைதான்

---

1 இளமையழகு.
2 முன்னை வினையால் வாய்த்த தவத்தையுடையள்.
3 இவள் காமச் செவ்வியுடையளாயின் என் நுகர்ச்சிக்குரியளாக என்றபடி.
4 தளர்ந்து.
5 குளிர்ந்த மதிபோன்ற முகத்து; வியர்வையரும்பிய மதி போன்ற முகத்து என்றுமாம்.
6 துன்பத்தாற் கண்பிறழ்ந்திலது.
7 இகழ்ச்சியோடு விரும்பினன் என்றெண்ணாது.

சுதமதி தன்னொடு நின்ற வெல்லையு
ளிந்திர கோடணை விழாவணி விரும்பி
வந்து காண்குறூஉ மணிமேகலா தெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கிப்
புலவன் [1]தீர்த்தன் புண்ணியன் [2]புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் [3]செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ [4]யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியந் திருந்தடி
[5]நாவா யிரமிலே னேத்துவ தெவனென்
றெரிமணிப் பூங்கொடி யிருநில மருங்குவந்
தொருதனி திரிவதொத் தோதியி னொதுங்கி
[6]நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும்.

---

1 தூய்மையுடையன்.

2 பழமையானவன்.

3 உள்ளத்துப் பகைமையால் நெடுங்காலம் நிகழும் வெகுளி.

4 நின்னையடைந்தோர்க்குக் காவலாகவுள்ளவனே; உலகத்திற்குக் காவலாக உள்ளவனே என்றுமாம்.

5 நாவாயிரமுடையோர் நின் பெருமைகளை ஒருவாறு கூற வல்லர் என்றபடி.

6 இந்நிலத்தோர் அறிந்து கூறுவதினும் மேம்பட்ட கருத்துக்களைக் கூறுதலால் நிலவரையிறந்து என்றார்.

(21) பெருங்கதை இலாவாண காண்டம்

நகர் கண்டது

நகரமாந்தர் செயல்

சயந்தியம் பெரும்பதி யியைந்தகம் புகுதலின்
[1]தாதுமல ரணிந்த வீதி தோறும்
பழுக்குலைக் கமுகும் விழுக்குலை வாழையும்
கரும்பு மிஞ்சியு மொருங்குட னிரைத்து
முத்துத் தரியமும் பவழப் பிணையலும்
ஒத்த தாம மொருங்குடன் பிணைஇப்
பூரணப் பெருங்கடைத் தோரண நாட்டி
அருக்கன் வெவ்வழ லாற்றுவ போல
விரித்த பூங்கொடி வேறுபல நுடங்க
எண்வகைச் சிறப்பொடு [2]கண்ணணங் கெய்த
விடாஅு விளக்கொளி வெண்பூந் தாமமொடு
படாகையும் விதானமும் பாற்கடல் கடுப்ப
[3]இருமயிர் முரச முருமென வுரறக்
[4]கடமுழக் கின்னிசை யிடையிடை யியம்ப
வெந்துய ரருவினை வீட்டிய வண்ணலை
இந்திர வுலக மெதிர்கொண் டாங்கு
மகளிரு மைந்தரு துகணிலந் துளங்க
நற்பெருங் கடைமுத னண்ணுவனர் குழீஇப்
பொற்பெருங் குடத்திற் புதுநீர் விலங்கி

நகரமாந்தர் உதயணனுக்கு உபசாரங்கூறி வரவேற்றல்

இருள்கண் புதைத்த விருங்கண் ஞாலத்து
விரிகதிர் பரப்பிய வெய்யோன் போல

---

1 தாதினையுடைய மலர்களாலணி செய்யப்பட்ட.

2 விளக்கொளி மிகுதியால் காண்போர் கண் வருந்தும்படி.

3 மயிர்சீவாத தோலால் போர்க்கப்பட்ட முரசம் இடிபோல் ஒலிக்க.

4 கடம் = மதம்; மதத்தையுடைய யானையின் முழக்கமாகிய இன்னிசை எனக்கொள்க.

வெங்க ணிருட்டுய ரிங்க ணீக்கிய
பொங்குமலர்த் தாரோய் புகுகென் போரும்
.........................ளுட்கா தொழுகிற்
[1]பகைவ ரெண்ணம் பயமில வென்னும்
நீதிப் பெருமை நா லோதியு மோராய்
யானை வேட்கையிற் சேனை நீக்கிப்
பற்று மன்னனிற் பற்றவும் பட்டனை
பொற்றொடிப் பாவையை [2]யுற்றது தீரக்
கொற்ற மெய்திக் கொண்டனை போந்த
மிகுதி வேந்தே புகுகென் போரும்
பயங்கெழு நன்னாடு பயம்பல தீரப்
புகுந்தனை [3]புகன்று நின் புதல்வரைத் தழீஇ
ஒன்னா மன்னனை யோடுபுறங் கண்டு
நின்னகர் நடுவண் மன்னுகென் போரும்

நகரமாந்தர் வாசவதத்தையைக் கண்டு கூறல்

மாயோன் மார்பிற் றிருமகள் போலச்
[4]சேயோன் மார்பிற் செல்வமெய் தற்கு
நோற்ற பாவாய் [5]போற்றெனப் புகழ்நரும்
திருமலர்ச் செங்கட் செல்வன் றன்னொடு
[6]பெருமகன் மடமகள் பின்வரக் கண்டனம்
உம்மைச் செய்த புண்ணிய முடையம்

---

1 அரசன் தன் விருப்பத்தைப் பிறரறியாமற் செலுத்தினால் பகைவர் சூழ்ச்சி பயனற்றதாகும் என்னும் நீதிநூற் பொருள். "காதல காத லறியாமை யுய்க்கிற்பின், ஏதில ஏதிலார் நூல்" திருக்குறள்.

2 உனக்குற்ற பழி தீரும்படி.

3 விரும்பி.

4 சேயோன்=உதயணன்.

5 எங்களைப் போற்றுக; அன்றி, நின் நோன்பின் பயனைப் போற்றியுணர்க என்றுமாம்.

6 பெருமகன்=பிரச்சோதனன்.

இம்மையின் மற்றினி யென்னு கியரென
அன்புறு கிளவிய ரின்புறு வோரும்
[1]மண்மீக் கூரிய மன்னவன் மடமகள்
பெண்மீக் கூரிய பெருநல வனப்பின்
வளைபொலி பணைத்தோள் வாசவ தத்தை
உளளென மற்றியா முரையிற் [2]கேட்கும்
அவணலங் காண விவண்வயிற் றந்த
மன்னருண் மன்னன் மன்னுகென் போரும்

யூகியை வாழ்த்துபவர்

கருத்திற் சூழ்ச்சியொடு கானத் தகவயிற்
[3]பெருத்திறல் வேந்தனெம் பெருமாற் சிறைகொள
மாயச் சாக்காடு மனங் கொளத் தேற்றி
ஆய மூதூ ரகம்புக் கவன்மகள்
நாகுவளை முன்கை நங்கையைத் தழீஇப்
போகெனப் புணர்த்த [4]போகாப் பெருந்திறல்
யூகியு மன்னுக வுலகினு ளென்மரும்

உதயணனைப் புகழ்வோர்

வியன்கண் ஞாலத் தியன்றவை கேண்மின்
நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்கு
நன்றே யாகி நந்தினு நந்தும்

---

1 உலகில் மிக்க மேன்மையுடைய மன்னன். 'கூறிய' என்ற பாடம் சிறக்கும். மண்மீக் கூறுதற்குக் காரணமான பெருமை பொருந்திய மன்னன் என்றபடி. அடுத்த அடியில் "பெண்மீக்கூரிய" என்பதும் இவ்வாறே.

2 கேட்கும்—பெயரெச்சமாகவும் முற்றாகவும் கொள்ளலாம்.

3 பெருந்திறல்—பெருத்திறல் என விகாரமாயிற்று.

4 அழியாத மிக்க திறலையுடைய. இனி, உதயணனை வாசவதத்தையுடன் அனுப்பிவிட்டு, மேல் ஆகவேண்டுவன செய்தற்காக அவர்களுடன் போகாது தங்கிய பெருந்திறல் யூகி என்றுமாம்.

நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்
கன்றாய் மற்றஃ தழுங்கினு மழுங்கும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்குத்
தீதே யாகித் தீயினுந் தீயும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்
காசில் பெரும்பொரு ளாகினு மாமெனச்
சேயவ ருரைத்ததைச் செவியிற் கேட்கும்
மாயி காஞ்சனம் வத்தவ ரிறைவற்குப்
பெருஞ்சிறைப் பள்ளியு ளருந்துய ரீன்று
தீயது தீர்ந்தத் தீப்பொரு டீர்ந்தவன்
செல்வப் பாவையைச் சேர்த்திச் செந்நெறி
அல்வழி வந்துநம் மல்ல றீர
நண்ணத் தந்தது நன்றா கியரெனக்
கண்ணிற் கண்டவன் புண்ணியம் புகழ்நரும்
ஓங்கிய பெருங்கலந் தருக்கிய வுதயணன்
தேங்கமழ் கோதையென் றிருநுதன் மாதரை
[1]வேண்டியுங் கொள்ளான் [2]வேட்டனென் கொடுப்பிற்
குலத்திற் சிறியவன் பிரச்சோ தனனென
நிலத்தின் வாழ்ந ரிகழ்ச்சி யஞ்சி
யானை மாயங் காட்டி மற்றுநம்
சேனைக் கிழவனைச் சிறையெனக் கொண்டு
வீணை வித்தகம் விளங்கிழை கற்கென
மாணிழை யல்குன் [3]மகணலங் காட்டி
[4]அடற்பே ரண்ணலைத் தெளிந்துகை விட்டனன்

---

1 வேண்டியும்—உம் அசைநிலை.

2 யானே விரும்பிச் சென்று கொப்பின். (இது பிரச்சோதனன் நினைவைச் சயந்தி நகர மாந்தர் கொண்டு கூறியது.)

3 வாசவதத்தையின் அழகை உதயணன் அறியும்படி செய்து.

4 வலிமைமிக்க அண்ணலாகிய உதயணனைத் தெளிந்து அவனுடன் வாசவதத்தை செல்லுமாறு விட்டனன். (வாசவதத்தையை மீட்பதில் முயற்சி கொண்டிலன் என்பது கருத்து)

கொடுப்போர் செய்யுங் குறிப்பிஃ தென்மரும்
மற்று மின்னன பற்பல பயிற்றி
மகளிரு மைந்தரும் புகழ்வன ரெதிர்கொள
அமரர் பதிபுகு மிந்திரன் போலத்
தமர்நகர் புக்கனன் றானையிற் பொலிந்தென்.

கல்லாடம்

(22) காமமிக்க கழிபடர் கிளவி

வானவர்க் கிறைவ னிலங்கிடைக் கொண்டு
திருவுட [1]னிறைவிழி யாயிரத் திரளு
மிமையாது விழித்த தோற்றம் போலக்
கஞ்சக் கொள்ளை யிடையற மலர்ந்து
மணஞ்சூழ் கிடந்த நீள்கருங் கழியே
கருங்கழி கொடுக்கும் வெள்ளிற வருந்தக்
[2]கைபார்த் திருக்கு மடப்பெடைக் குருகே
பெடைக்குரு கணங்கின் விடுத்தவெண் சினையொடு
காவலடை கிடக்கும் கைதையம் பொழிலே
வெம்மையொடு கூடியுந் தண்மை பொருந்தியு
முலகவிருள் துரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
காலங் கோடா முறை முறை தோற்ற
மணிநிரை குயிற்றிய மண்டப மாகிப்

---

1 நிறைந்த விழிகளின் தொகுதியாகிய ஆயிரமும் 1-5 வரிகள் உடல் முழுதும் கண் நிறையப்பெற்ற இந்திரன், முழுதும் தாமரை மலரப்பெற்ற கழிக்கு உவமை.

2 கைபார்த்து—சிறுமைபார்த்து, இரு அகப்படும் நிலை அதன் சிறுமை என்றபடி, இடம் பார்த்திருக்கும் என்றுமாம். 10-வது வரிமுதல் 37-வது வரி வரை, கடலைப் பன்னிரண்டு பொருள்களாக உருவகப்படுத்தி வருணிக்கின்றார். 10-13 வரிகள் ஞாயிறும் திங்களுமாகிய ஒளிப்பொருள் தோன்று தற்குரிய மண்டப மாகக்கடல் உருவகப்படுத்தப்பட்டது. பிறவும் இவ்வாறு கொள்க.

[1]பொறைமாண் டுயிர்க்குந் தாயா மண்மகள்
களையா துடிக்கும் பைந்துகி லாகி
வேனிற் கிழவன் பேரணி மகிழ
முழக்காது தழங்கு மாமுர சாகி
நெடியோன் துயிலா தறிவொடு துயிலப்
பாயற் கமைந்த பள்ளியறை யாகிச்
சலபதி யாய்ந்து சேமநிலை வைத்த
முத்துமணி கிடக்குஞ் செறியிரு ளரங்காய்ப்
புலவுடற் பரதவர் தங்குடி யோம்ப
[2]நாளும் விளைக்கும் பெருவய லாகிக்
கலமெனு நெடுந்தேர் தொலையா தோட
வளப்பறப் பரந்த வீதியதாகிச்
சுறவ வேந்து [3]நெடும்படை செய்ய
முழக்கமொடு விளைத்த வமர்க்கள மாகி
[4]மகரத் தெய்வ நாணிறைந் துறைய
மணிவிளக்கு நிறைந்த வாலய மாகி
நீர் நெய் வார்த்துச் சகர ரமைத்த
தீவளர் வட்டக் குண்ட மாகி
யெண்டிகழ் பகுவா யினமணிப் பாந்தட்
டண்டினின் றெரியுந் தகளிய தாகிப்
பஞ்சவ னிறைந்த வன்புடன் வேண்ட
மாறிக் குனித்த நீறணி பெருமாற்

---

1 பொறுமையால் மாட்சிமையுற்று எல்லாப் பொருள்களையுந் தோற்றுவிக்கும் தாயாகிய மண்மகள்.

2 எக்காலமும் விளையப்பண்ணும் பெரியவயலாகி.

3 பெரிய படை கொண்டு போர் செய்ய. அதன் கோட்டைப் படை எனலாம்.

4 மகரம் மன்மதனுக்குக் கொடியாதலின் அதனைத் தெய்வம் என்றனர்.

[1]கமுத போனகங் கதுமென வுதவு
மடுந்தீ மாறு மடைப்பள்ளி யாகி
யின்னும் பலவாய் மன்னுங் கடலே
[2]நுங்க ளின்பம் பெருந்துணை யென்பாற்
றண்ணத் துறைவற் கின்றிவ ளொருத்தி
நெருப்புறு மெழுகி னுள்ளம் வாடியு
மருவி தூங்கக் கண்ணீர் கொண்டு
மரவின்வா யரியிற் பலவு நினைந்து
நிலையாச் சூளி னிலையா நெஞ்சுங்
கொண்டன ளென்னென வென்முக நாடி
[3]யுற்ற வாய்மை சற்றுந் தருகிலீ
ரன்றெனி னும்மி லொன்றுபட் டொருகா
லிவளோ துயரம் பெறுவதென் னென்று
வினவா திருக்குங் கேண்மை
மனனு னுடிற் சொல்லினுங் கொடிதே.

---

1 அமுதமாகிய உணவு. பாற்கடலிற் றோன்றிய நஞ்சைச் சிவபெருமான் உண்டதனால் அதனை அவருக்கு அமுதபோனகம் என்றார். நஞ்சு உண்டானது பாற்கடலிலாயினும், கடலென்ற ஒப்புமையால் ஈண்டுக் கூறப்பட்டது. முன்னர் திருமாலுக்குப் பள்ளியறையாகியும் என்றதும் இவ்வாறே கூறப்பட்டது.

2 நுங்கள் இன்பம் பெருந்துணை என்றது குறிப்பு மொழி. பெருந்துணையாக வில்லை என்பது கருத்து. "குடம்பை தனித்தொழிய" என்ற குறலில் "நட்பு" என்றது போல.

3 உற்ற பரிகாரத்தைச் சிறிதும் செய்கின்றிலீர். வாய்மை—உண்மை. ஈண்டு பரிகாரம் என்னும் பொருளில் வந்தது.

(23) சூளாமணி.

மந்திர சாலைச் சருக்கம்.

இரதநூபுரத்தரசன் சடி என்பான் தன் அமைச்சரை நோக்கிக் கூறுதல்.

1 மண்ணியல் வளாகங் காக்கு மன்னவர் [1]வணக்கலா
புண்ணிய நீர ரேனும் [2]புலவராற் புகலப்பட்ட [காப்
[3]நுண்ணிய நூலினன்றி நுழைபொரு ளுணர்த
றேற்றா
ரெண்ணிய துணிந்து செய்யுஞ் சூழ்ச்சியு மில்லை
யன்றே

2 வால்வளை பரவி மேயும் வளர்திரை வளாக
மெல்லாங்
கோல்வளை வுறாமற் காக்குங் கொற்றவ [4]னெடிய
னேனு
மேல்விளை பழியும் வெய்ய வினைகளும் விலக்கி
நின்றார்
நூல்விளை புலவ ரன்றே நுணங்குபோ தணங்கு
தாரீர்.

3 சுற்றுநின் றெரியுஞ் செம்பொன் மணிமுடி சுடரச்
சூட்டி
வெற்றிவெண் குடையி னீழல் வேந்தன்
வீற்றிருக்குமேனு
மற்றவன் மனமுங் கண்ணும் வாழ்க்கையும்
வலியுஞ்சால்பு
[5]மற்றமி லரசுங் கோலு மாபவ ரமைச்ச ரன்றே.

---

1 பிறரால் தடுக்க வியலாத.
2 அமைச்சர்.
3 நுண்ணிய நூலறிவானறிந்து கூறப்பட்ட நுண்பொரு ளன்றி வேறு நுண்பொருளறியலார்கள்.
4 அறிவாற்றல்களான் மிக்கவனாயினும்.
5 இடையீடுபடாத அரசும்.

4 வீங்குநீ ருலகங் காக்கும்[1]விழுநுக மொருவ னாலே
தாங்கலாந் தன்மைத் தன்று தளையவிழ் தயங்கு தாரீர்
பாங்கலார் பணியச் சூழு [2]நூலவர் பாகமாகப்
பூங்குலா மலங்கன் மாலைப் புரவலன் பொறுக்கு
மன்றே.

5 [3]செறிந்தவர் தெளிந்த நூலார் சிறந்தவை
தெளிந்து சொன்னு
லறிந்தவை யமர்ந்து செய்யு மமைதியா னரச
னுவான்
செறிந்தவர் தெளிந்த நூலார் சிறந்தவை தெரிந்து
கூறி
யறிந்தவை யியற்றுகிற்கு மமைதியா ரமைச்ச
ராவார்.

6 வாள்வலித் தடக்கை மன்னன் [4]வையகம் வணக்கும்
வாயில்
[5]தோள்வலி சூழ்ச்சி யென்றாங் கிருவகைத்
தொகையீற் றாகு
மாள்வலித் தானை யார்கட் [6]காதிய தழகி தேனுங்
கோள்வலிச் சீய மொப்பீர் சூழ்ச்சியே குணம
தென்றான்.

---

1 சிறந்த பாரம்.
2 அமைச்சர் பாதிப் பாரத்தைச் சுமக்க.
3 அரசனிடத்து மிக்க அன்புடையர் தெளிந்த நூலறிவு முடையர்.
4 உலகைத்தன் ஆட்சிக்குட்படுத்தும் உபாயம்.
5 படை வலிமையும் ஆராய்ந்துணரும் சூழ்ச்சியுமென இரண்டாம்; தோள்வலி—ஈண்டுப்படைவலி.
6 படைவலி சிறப்புடையதாகவிருப்பினும் 7-வது பாட்டு—வலிமையின் மிக்கது சூழ்ச்சி; அச்சூழ்ச்சியைச் சொல்வோர் அமைச்சர்; ஆதலால் அரசன் அமைச்சரோடியைந்து செல்லின் அவனுக்கு அரியதொன்றுமில்லை. அரசர்கட்கு ஆற்றலென்றோதப்பட்டவற்றின் மிக்கவாற்றல்தான் என்று கொள்க.

7 ஆற்றலென் ஞேதப்பட்ட வரசர்கட் கவற்றின் மிக்க
வாற்றருன் சூழ்ச்சி யென்ப தாதலா லதனை யாயு
மாற்றலா ரமைச்ச ராக வமைச்சரோ டமர்ந்து
செல்லு
மாற்றலா னரச ஞகி னரியதொன் றில்லை யன்றே.

8 மன்னுநீர் வளாக மெல்லாம் வணக்குதல் வல்லீ ராய
பன்னுநூற் புலவீர் முன்னர்ப் பலபகர்ந் துரைப்ப
தென்னை
யென்னைநீ ரிறைவ ஞக்கி யிராப்பக லியற்ற வன்றே
யின்னநீ ரின்ப வெள்ள மியைந்தியா னுயர்ந்த
தென்றுன்.

அமைச்சன் சுச்சுதன் என்பான் அரசனை நோக்கிக் கூறுதல்.

9 பொழிற்கதிர் பரப்பி வந்து பொங்கிருள் புதைய
[1]நூறுந்
தொழிற்கதிர்க் கடவு டோன்றச் சூரிய காந்த
மென்னு
மெழிற்கதிர்ப் பிறங்கல் வட்ட மெரியுமிழ்ந் திடுவ
தன்றே
யழற்கதி ரிலங்குஞ் செவ்வே லதிர்கழ லரசர்
கோவே.

10 [2]கோனைநூற் றடங்க மாட்டாக் குணமிலார் குடர்க
ணைய
வானைநூற் றடங்கக் காக்கு மரசர்த மருளி ஞலே
பேணுநூற் புலவர் மாண்பும் பெருகுவ துருவத்
தார்மேற்
பூணுநூற் பொலிந்து தோன்றும் பொன்வரை
மார்ப வென்றுன்.

---

1 அழிக்கும்.

2 மாறுபாட்டைத் தம்முள் உண்டாக்கிக்கொண்டு அடங்காத நற்குணமில்லாப் பகைவர். 9-வது பாட்டின் பொருள் உபமானமாகவும் 10-வது பாட்டின் பொருள் உபமேயாக வும் கொள்க.

11 கண்ணிய கடாத்த வேழங் கவுளிஞ் ஞரிஞப் பட்டுத்
தண்ணிய தன்மை நீங்காச் சந்தனச் சாதிபோலப்
[1]புண்ணியக் கிழவர் கீழோர் பிழைத்தன பொறுப்ப வாயின்
மண்ணியல் வளாக மெல்லாம் வழிநின்று வணங்கு மன்றே.

12 நிறந்தலை மயங்க வெம்பி நெடுங்கடல் சுடுவ தாயி
[2]னிறந்தலை பெருகு நீர்வா ழுயிர்க் கிடரெல்லை யுண்டோ
[3]மறந்தலை மயங்கு செவ்வேன் மன்னவன் வெய்ய னாயி
[4]னறந்தலை மயங்கி வைய மரும்பட ருழக்கு மன்றே.

13 மண் குளிர் கொள்ளக் காக்கு மரபொழிந் தரசர் தங்கள்
விண் குளிர் கொள்ள வோங்கும்[5]வெண்குடை வெதும்பு மாயிற்

---

1 புண்ணியப் பேற்றையுடைய அரசர்.

2 அளவு கடந்து அலைபெருகும் கடலில் வாழும் உயிர்கட்கு உண்டாகும் இடர்க்கு எல்லையில்லை.

3 மறம் மிக்குப் பொருந்தியுள்ளவேல்.

4 அறம் தன் நிலை கெட்டு.

5 வெண்குடை வெதும்புமாயின் என்றது அரசன் அறநெறி நீங்கி மக்களைத் துன்புறுத்துவானாயின் என்பது கருத்து.

கண் குளிர் கொள்ளப் பூக்குங் கடிகயத் தடமுங் காவுந்
தண் குளிர் கொள்ளு மேனுந்[1] தான்மிக வெதும்பு மன்றே.

14 தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரியு மாயிற்
போயினம் படர்ந்து வாழும் புகலிட மின்மை யாலே
வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் [2]புல்வாய்
மாயினம் படர்ந்த தெல்லாம் வையகம் படரு மன்றே.

15 [3]மறந்தலை மயங்கி வையத் தொருவரை யொருவர் வாட்ட
[4]விறந்தலை யுறுமை நோக்கி யின்னுயிர் போலக் காக்கு
மறந்தலை நின்ற வேந்த ரடிநிழ லன்றி யார்க்குஞ்
சிறந்ததொன் றில்லை கண்டாய் திருமணி திகழும் பூணாய்.

---

1 பிறவாற்றால் அத்துன்பத்தைப் போக்கவியலாது மக்கள் வருந்துவர் என்றபடி.

2 புல்வாய்மாயினம் படர்ந்ததெல்லாம் — மானினது பெரிய கூட்டம் அடைந்த துன்பமெல்லாம். மா + இனம் = மாயினம் என விகாரப்பட்டு நின்றது. படர்ந்ததெல்லாம் ஒருமை பன்மை மயக்கம்.

3 மறத்தின்கண்ணே பொருந்தி.

4 மிக்க துன்பமுறு வண்ணம்.

(24) சீவகசிந்தாமணி.

கடவுள் வாழ்த்து.

1 [1]மூவாமுதலா வுலக மொருமூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
யோவாது நின்ற குணத் தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவனவன் சேவடி சேர்து மன்றே.

பதிகம்.

2 மீனேறுயர்த்த கொடிவேந்தனை வென்ற பொற்பிற்
றானேறனையானுளன் சீவகசாமி யென்பான்
வானேற நீண்ட புகழான்[2]சரிதம் மிதன்னைத்
[3]தேனூற நின்று தெருண்டாரவை செப்பலுற்றேன்.

நாமகளிலம்பகம்.

3 நாவீற்றிருந்த புலமா மகளோடு நன்பொற்
பூவீற்றிருந்த திருமாமகள் புல்ல நாளும்
பாவீற்றிருந்தகலை[4]பாரறச் சென்ற கேள்விக்
கோவீற்றிருந்தகுடி நாட்டணி கூறலுற்றேன்.

4 நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம்

---

1 மூவா முதலா—அழிதலும் தோன்றுதலுமில்லாத; முதலுதல்—முதலாதல் தோன்றுதல்.

2 சரிதம்—ஒழுக்கம்.

3 தேனூறநின்று—நின்று தேனூற.

4 பார்—வன்னிலம்; ஈண்டுத்தடை. 3-வது செய்யுள்—நாமகளோடு திருமகள் புல்ல என்றதனால் நாமகள் புல்லுதல் சிறப்பாயிற்று; ஒடு உருபு சிறப்புடைப்பொருளில் வருமாதலால்.

[1]வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ.
5 தேன்றலைத் துவலைமாலை பைந்துகில் செம்பொன் பூத்து
ஞான்றன வயிரமாலை நகுகதிர் முத்தமாலை
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலையார்க்கு
மீன்றருள் சுரந்த செல்வத்தி ராசமா புரமதாமே.
6 தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
யருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு மாநில மன்னனே.
7 தன்னையாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமக
ளன்னவன் வழிச் செல்லினிம்மண் மிசைப்
பின்னைத் தன்குலம் போர்க்குநரில்லையே.
8 [2]திலகநீண் முடித்தேவரும் வேந்தரு
முலகமார்தர்க ளொப்பவென் றேதுப
குலவுதார் மன்னர்க்கியானிது கூறுவன்
பலவுமிக்கனர் தேவரிற் பார்த்திவர்.

---

1 தேவருஉலகம் தனது சிறந்த இன்பத்தை இப்பூவுலகம் விரும்பும்படி செய்வதற்காகக் கீழேயிறங்கி வந்திருந்தாற் போன்றது ஏமாங்கதநாடு. 5-வது செய்யுள்—ஈன்றருள் சுரந்த செல்வத்து—அருளையீன்று செல்வம் சுரந்த என்று மாற்றுக.

7-வது செய்யுள்—குலம் முன்னுங்கூட்டி, பூமகள் பின்னுங் கூட்டி, வெளவிற் குலமும் செல்வமுமழியும், வழிச்செல்லின் குலத்தையும் செல்வத்தையும் பெயர்ப்பாரில்லை எனக் கொள்க.

2 மக்கள் முடிகளினும் மேலான முடிகளையுடைய தேவர்.

9 அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வ
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினு
[1]மருளி யாக்க லழித்தலங் காபவோ.

10 உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமா
லிறங்கு கண்ணிமை யார்[2]விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்.

11 யாவ ராயினு நால்வரைப் பின்னிடிற்
றேவ ரென்பது தேறுமிவ் வையகங்
காவன் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவினும்முரை யார்நவை யஞ்சுவார்.

12 தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
யீண்டு தங்கிளை யோடு மெரித்திடும்
[3]வேண்டி லின்னமிர் துந்நஞ்சு மாதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே.

13 வேலின் மன்னனை விண்ணகங் காட்டியிஞ்
ஞால மாள்வது நன்றெனக் கென்றியேல்
வாலி தன்றெனக் கூறினன் வாண்ஞமற்
கோலை வைத்தன்ன வொண்டிற லாற்றலான்.

---

1 அருளியாக்கல் என்றதனால் அருளாது (வெகுண்டு) அழித்தல் எனக்கொள்க. அங்காபவோ 'என்றதனால், வாழ்த்தினார் வைதாருடைய நல்வினை தீவினைகட்கேற்பப் பலன் கொடுத்தலன்றி, அப்பொழுதே பலன் கொடுத்தல் தெய்வங்கட்காகாதென்றபடி. அதனால் அரசனை மாதெய்வம் என்றார்.

2 தேவர் இமையாதவராதலின் விழித்தேயிருந்தும் என்றார்.

3 வேண்டிலின்னமிர்து என்றதனால் வேண்டாதார்க்கு நஞ்சு எனக்கொள்க.

14 குழற்சிகைக் கோதைசூட்டிக் கொண்டவ னிருப்ப மற்றோர்
நிழற்றிகழ் வேலினானை நேடிய நெடுங்கணாளும்
[1]பிழைப்பிலாட் புறந்தந்தானுங் குரவரைப் பேணல் செய்யா
திழுக்கினா ரிவர்கள்கண்டா[2]யிடும்பைநோய்க் கிரைகளாவார்.

15 நட்பிடைக் குய்யம் வைத்தான் [3]பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத்தீயிற் [4]கன்னியைக் கலக்கினானு
மட்டுயிருட லந்தின்றா னமைச்சனா யரசு கொன்றான்
குட்டநோய் நரகந்தம்முட் குளிப்பவரிவர்கள் கண்டாய்.

காந்தருவதத்தையாரிலம்பகம்

16 இம்மியன நுண்பொருள்க ளீட்டி நிதியாக்கிக்
[5]கம்மியரு மூவர்களி றோடைநுதல் சூட்டி
யம்மி மிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்கென்
றும்மைவினை நொந்துபுலந் தூடலுணர் வன்றே.

17 உள்ளமுடை யான்முயற்சி செய்ய வொருநாளே
வெள்ள நிதி வீழும் விளையாததனி னில்லை
[6]தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின் மடிகிற்பி
னெள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே.

---

1 நெஞ்சினாற் பிழைப்பிலாளைக் கைவிட்டவன்.

2 நோய் இடும்பை தருவதேயாகவும்—இடும்பை நோய் என்றதனால் பெருந்துன்பந்தரும் நோய் எனக்கொள்க.

3 பெரும்பாலும் பிறர்மனைவியரை அவர் தம் அழகு கருதிச் சேர்தலால் "பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்" என்றார்,

4 கன்னியைக் களவிற்கூடிப்பின் வரையாது விட்டவனும் என்றபடி; வலிதிற் கூடிப்பின் வரையாது விட்டவனுமாம்.

5 கம்மியர்—ஈண்டுப்பிறர் தொழில் செய்து வாழ்வோர் எனப் பொதுப்பொருளில் வந்தது.

6 உறுதியான அறிவில்லாதவர்கள், "வருவது வந்தே தீரும்" என்று சொல்லிக்கொண்டு முயற்சியின்றிச் சோம்பியிருப்பின்.

18 செய்கபொருள் யாருஞ் செறுவாரைச் செறுகிற்கு
மெஃகுபிறிதில்லை[1]யிருந்தேயு யிருமுண் ணு
மையமில்லையின்பமற னோடவையு மாக்கும்
பொய்யில் பொருளே பொருண் மற்றல்ல
பிறபொருளே.

19 தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
வோங்குகுலநைய வதனுட் பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்[2] தலை சாய்க்கவரு தீச்சொ
னீங்கன் மடவார்கள் கடனென் றெழுந்து
போந்தான்.

20 எண்டிசை வளியுமீண்டி யெதிரெதிர் கலாவிப்
பவ்வங்
கொண்டுமே லெழுவதொப்பக் குளிறிநின் றதிர்ந்து
மேகந்
தண்டுளி பளிக்குக் கோல்போற் றாரையாய்ச்
சொரிந்து[3]தெய்வங்
கொண்டதோர் செற்றம்போலுங் குலுங்கன்மி
னென்று கூறும்.

21 இடுக்கண் வந்துற்றகாலை யெரிகின்ற விளக்குப்
போல
நடுக்கமொன் றானு மின்றி[4] நகுகதா நக்க போழ்தவ்

---

1 பொருள், தன்னையுடையாரிடத்திருந்துகொண்டே பகைவரை யழிக்கவல்லது.

2 தலைசாய்க்க வருதீச் சொல்லோடு இறத்தல் மடவார்கடன் என்றபடி.

3 "தெய்வங்கொண்டதோர் செற்றம் போலும்" என்றது—இம்மழை இயல்பாகப் பெய்யும் மழையாக இல்லை; தெய்வம் நம்பால் வெகுண்டு பெய்வது போலுள்ளது என்றபடி.

4 நகுக—மகிழ்க.

விடுக்கணையரியு மெஃகாமிருந் தழுதியாவ ருய்ந்தார்
[1]வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந்
துறுங்களன்றே.

22 ஆடகச் செம்பொற் கிண்ணத் தேந்திய வலங்கற்
றெண்ணீர்
கூடகங் கொண்டவாழ்நா ளுலந்ததேற் கொல்லும்
பவ்வத்
தூடகம் புக்கு முந்நீரழுந்தினு முய்வர் நல்லார்
பாடகம் போலச்சூழ்ந்த பழவினைப் பயத்தி
னென்றான்.

23 வினையது விளைவின்வந்த வீவருந்துன்ப முன்னீர்க்
கனைகடலழுவ[2]நீந்திக் கண்கனிந் திரங்கல் வேண்டா
நனைமலர்ப் பிண்டி நாதனலங்கிளர்[3]பாதமூல
நினையுமி னீவிரெல்லா நீங்குமி னச்ச மென்றான்.

24 குட்டநீர்க் குவளையெல்லாங் கூடிமுன் னிற்கலாற்றாக்
கட்டழ கமைந்தகண்ணு[4]ணிறையெனுஞ் சிறையைக்
கைபோ
[5]யிட்டநாண் வேலியுந்திக் கடலென வெழுந்த
வேட்கை
விட்டெரி கொளுவ நின்றா ளெரியுறு
மெழுகினின்றாள்

---

1 துன்பம் வந்தால் அதனைப்போக்க முயலுதல் ஆண்மைக்கழகாம்; அதனைக்கண்டு வருந்தியிருத்தல் ஆண்மைக்குக் குற்றமாம் என்றபடி.

2 நீந்தி—நீந்திக் கரைகாணாது உழன்று.

3 பாதம்—பாதமாகிய, மூலம்—(துன்பம்நீங்குதற்குக்) காரணமாகிய அதனை.

4 வேட்கை, நிறையாகிய சிறையைக்கடந்து.

5 நாணாகிய வேலியையும் கடந்து என்றபடி.

25 [1]நலத்தைமத் தாகநாட்டி நல்வலி யிளமை வாராக்
குலப்பிறப் பெண்ணுங்கையாற்[2]கோலப் பாசங்
கொளுத்திக்
கலக்கி[3]யின் காமம் பொங்கக் கடைந்திடுகின்ற காளை
யிலைப்பொலி யலங்கன் மார்ப மியைவதென் றுகுங்
கொல்லோ.

26 [4]தீங்கரும் பெருத்திற்றூங்கி யீயின்றி யிருந்த தீந்தே
னுங்கணுற் பருகியிட்டு நலனுணப் பட்டநம்பி
பூங்குழன் மகளிர் முன்னர்ப் புலம்பனீ நெஞ்சே
யென்றாள்
[5]வீங்கிய காமம் வென்றார் விளைத்த வின்பத்
தோடொப்பாள்.

27 கண்ணெனும் வலையினுள்ளான் கையகப்பட்டிருந்
தான்
[6]பெண்ணெனு முழலைபாயும் பெருவனப்புடைய
நம்பி
யெண்ணின்மற் றியாவனுங்கொ லெண்ணிதற் படுத்த
வேந்த
லொண்ணிற வுருவச் செந்தீயுருவு கொண்டனைய
வேலான்.

---

1 நலம்—இயற்கையழகு.

2 கோலம்—செயற்கையழகு.

3 தான்விரும்புதலாலே, இன்காமம் என்றாள்.

4 இனிமை மிகுதியும் எளிதிற்கிடைத்தலும்பற்றித் தீங்கரும் பெருத்திற்றூங்கி என்றார்.

5 இவ்வுலகிற் காமம் வென்றார் மேலுலகிற் பெறுமின்பத்தோ டொப்பாள்.

6 பெண்தன்மையாகிய தடை மரத்தைக்கடந்து பாயும் பெருவனப்புடையநம்பி. எனவே தன்வனப்பு அவன்மனத்திற் பாய வில்லை என்பது கருத்து.

28 யாவனே யானுமாக வருநிறைக் கதவ நீக்கிக்
காவலென் னெஞ்சமென்னுங் கன்னிமாடம் புகுந்து
நோவவென் னுள்ளம் யாத்தாய் நின்னையு
மாலையாலே
[1]தேவரிற் செறிய யாப்பன் சிறிதிடைப் படுக
வென்றாள்.

29 கழித்தவே லேறுபெற்ற கடத்திடைப் பிணையின்
மாழ்கி
விழித்துவெய் துயிர்த்துமெல்ல நடுங்கித் தன்றோழி
கூந்த
லிழுக்கி வண்டிரியச் சேர்ந்தோர் கொடிப்புல்லுங்
கொடியிற் புல்லி
[2]யெழிற்றகை மார்பற் கின்யாழிது வுய்த்துக்
கொடுமோ வென்றாள்.

30 தடங்கணுள் பணியிற் றுனவ் வீணை யொன்றினை
நெடுங்கணுளெழினியை நிக்கியுய்த்து நீட்டினாண்
மடங்கலன்ன மொய்ம்பினான் வருகவென்று
கொண்டுதன்
கிடந்த ஞானத் தெல்லையைக் கிளக்கலுற்று
நோக்கினான்.

---

1 நீ தேவரைப்போல இமையாது நோக்கும்படி செறியப் பிணிப்பேன்.

2 எழிலால் என்னைத் தகைந்து கொண்ட மார்பற்கு.

30-வது பாட்டு—நெடுங்கணுள், எழினியை வீணையொன்றினை நீக்கி—தோழி எழினியையுடைய வீணை யொன்றினை நீக்கி.

31 சுரந்துவானஞ் சூன்முதிர்ந்து மெய்ந்நொந் தீன்றதுளியேபோற்
[1]பரந்த கேள்வித் துறைபோய பைந்தார் மார்பன் பசும் பொன்யாழ்
நரம்பு தேனார்த்தெனத் தீண்டி நல்லாள் வீணை பொல்லாமை
யிருந்த முலையாணின்றாளை நோக்கி யிசையினிது சொன்னான்.

32 [2]நீர்நின்றிளகிற் றிதுவேண்டா நீரின் வந்ததிதுபோக
வார்நின்றிளகு முலையினாய் வாட்புண் ணூற்றதிது நடக்க
வோருமுரு மேறிதுவுண்ட தொழிக வொண் பொனாகு கொடியே
சீர்சால் கணிகை சிறுவன் போற் சிறப்பின் றம்ம விதுவென்றான்.

33 [3]கல்சேர் பூண்கொள் கதிர்முலையாய் காமத்தீயால் வெந்தவர் போற்
கொல்லையுழவர் சுடப்பட்டுக் குரங்கி வெந்ததிது களிறு
புல்ல முரிந்த தெனப் போக்கித் தூம மார்ந்த துகிலுறையு
ணல்யாழ் நீட்டவது கொண்டு நங்கை நலத்ததிது வென்றான்.

---

1 பரந்தநூற்கேள்விகளிற் றேர்ந்த பைந்தார்மார்பன்; நூற் கேள்விகளாற் பிறர்க்குப் பயன்படுபவன் என்பது உவமையாற்போந்தபொருள்.

2 நீர்மிக்க இடத்தில் நின்றமையால் வன்மையின்றி மெல்கிற்று.

3 முன்னர் "இருந்த முலையாள்" "வார்நின்றிளகு முலையினாய்" என அவள் பேடித்தன்மை கூறப்பட்டமையின், ஈண்டுக் "கல்சேர்பூண் கொள்கதிர் முலையாய்" என்றது இகழ்ச்சிக் குறிப்பாகும்.

34 தன்றுணைவி கோட்டியினீங்கித் தனியிடம் பார்த்
தின்றுணைவற் சேர்வானிருந்ததுகொல் போந்தது
கொல்
சென்றதுகொல் சேர்ந்ததுகொல் செவ்வியறிந்
துருகு
மென்றுணைவி மாற்றமிஃதென்றதுகொல் பாபம்.

35 செந்தார்ப் பசுங்கிளியார் சென்றூர்க்
கோரின்னுரைதான்
றந்தாரேற் றந்தாரென்னின்னுயிர் தாந்தாராரே
லந்தோ குணமாலைக் காதகா தென்றுலக
நொந்தாங் கழமுயன்று நோற்றானு மெய்துவனே.

36 [1]சென்றூர் வரைய கருமஞ் செருவேலான்
பொன்றாங் கணியகலம் புல்லப் பொருந்துமேற்
குன்றாது கூடுகெனக் கூறிமுத்தவார் மணன்மே
லன்றாங் கணியிழையாளாழி யிழைத்தாளே.

37 பாகவரை வாங்கிப் பழுதாகிற் பாவியேற்
கேகுமா லாவி யெனநினைப்பப் பைங்கிளியார்
[2]மாகமே நோக்கி மடவாளே யவ்விருந்தா
ளாகும்யான் சேர்வ லெனச்சென் றடைந்ததே.

34-வது பாட்டு—செவ்வியறிந்து துணைவிமாற்றமிஃது, உருகும், என், என்றது கொல் எனக்கூட்டுக.

35-வது பாட்டு—எய்துவனே—ஏகாரம் எதிர்மறை. அதனால் நோலாது இறப்பேன் என்பது கிடைக்கும். அதனை "நொந்தாங்கழ" என்பதற்கு முடிபாக்கிக் கூறினர். நச்.

1 சென்றவர் திறமைக்கேற்ப அவர்மேற் கொண்டவினை முடியும் என்றபடி.

2 "மாகமே.......ஆகும்" என்பது ஐயுற்றுத் துணிந்தார்கூற்றாக விருத்தலின், கிளிசென்று திரும்பி வந்ததற்குள் குணமாலைக்குண்டான மெலிவு புலனாகும்.

38 கண்டா ணெடிதுயிர்த்தாள் கைதெழுதாள்
கையகத்தே
கொண்டா டினைக்குரறான் சூடினா டாழ்குழன்மே
னுண்டார்ப் பசுங்கிளியை நோவவகட் டொடுக்கி
வண்டாரான்[1] செவ்விவாய்க் கேட்டாடன் மெய்ம்
மகிழ்ந்தாள்.

39 தீம்பா லமிர்தூட்டிச் செம்பொன் மணிக்கூட்டிற்
காம்பேர்[2]பணைத்தோளி மென்பறவை கண்படுப்பித்
தாம்பான் மணிநாம மோதிரந்தொட் டையென்னத்
தேம்பா வெழுத்தோலை செவ்வனே நோக்கினாள்.

40 கொடுஞ்சிலையா னோலை குணமாலை காண்க
வடுந்துயரமுள்சுட வெந்தாற்றா தேனுற்ற
விடுந்த சிறுகிளியால் விம்மனோய் தீர்ந்தே
ணெடுங்கணா டானு[3] நினைவகல்வா ளாக.

41 ஈட்டஞ்சா னீணிதியு மீர்ங்குவளைப் பைந்தடஞ்சூழ்
மோட்டுவளஞ் சுரக்கு மூரு முழுதீந்து
[4]வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய
வேய்மென்றோட்
பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேனே.

42 குங்குமஞ்சேர் வெம்முலைமேற் கொய்தார்
வடுப்பொறிப்பச்
செங்கயற்கண் வெம்பனியாற் சிந்தை யெரியவித்து
மங்கை மகிழ வுறையேனேல் வாளமருட்
பங்கப்பட் டார்மேற் படைநினைந்தே னாகென்றான்.

---

1 செவ்வி-ஈண்டு, சீவகன் குணமாலையை நினைந்து வருந்துந் தன்மை; அது குணமாலைக்கு மகிழ்ச்சி தருவதாதலின் செவ்வியாயிற்று.

2 பருத்ததோளையுடையாள்; நற்செய்திபெற்ற மகிழ்ச்சியால் பருத்த தோளென்க.

3 நினைவுத்துன்பம் நீங்குவாளாக.

4 தாம் கருதிய அரியபொருளைப் பெற்றார்க்கு உண்டாகும் இன்பம் போன்ற இன்பந் தரும் தோள்.

43 [1]நூல்புடைத்தாற் போற்கிடந்த [2]வித்தகஞ்சேர்
நுண்வரிகள்
பான்மடுத்துத் தீந்தேன் பருகுவாள் போனேக்கிச்
சேல்படுத்த கண்ணீர் சுமந்தளைஇ மெய்ம்மகிழ்ந்து
மால்படுத்தான் மார்பின் மணந்தாளே போன்
மகிழ்ந்தாள்.

44 பாலவியும் பூவும் புகையும் படுசாந்துங்
காலவியாப் பொன்விளக்குந் தந்தும்மைக்
கைதொழுவேன்
கோலவியா வெஞ்சிலையான் சொற்குன்று
ருகெனவே
நூலவையார் போனீங்க ணேக்குமினே யென்றுள்.

பதுமையாரிலம்பகம்

45 புற்றிடை வெகுளிநாகம் போக்கறக் கொண்டதேனு
[3]மற்றிடை யூறுசெய்வான் வானவர் வலித்ததேனும்
பொற்றொடிக் கிறத்தலில்லை புலம்புகொண்
டழேற்கவென்றுன்
[4]கற்றடிப் படுத்த விஞ்சைக் காமரு காமனன்ஞன்.

46 பொழிந்து நஞ்சுகுத்த லச்ச மிரைபெரு
வெகுளிபோகங்
கழிந்து மீதாடல் காலம் பிழைப்பென வெட்டினுகும்
பிழிந்துயி ருண்ணுந் தட்டமதட்டமாம்
பிளிற்றினும்ப
[5]ரொழிந்தெயி றூனஞ் செய்யுங் கோளென மற்றுஞ்
சொன்னுன்.

---

1 "நூல்புடைத்தாற்போல்" என்றது வரிகள் ஒழுங்காக அமைந்திருத்தலை.

2 திறமை தோன்ற எழுதப்பட்ட நுண்வரிகள்.

3 தேவர் இவளைக் கொல்லக்கருதிப் பாம்புவடிவாகவந்து தீண்டியிருப்பினும் என்றபடி.

4 கற்று அந்நூற் பொருள் பயன்படுமாறு செய்துகொண்ட யாவரும் விரும்பும் காமனன்னுன்.

5 ஒழிந்த எயிறுகளாற் கடித்து நஞ்சு உகுப்பின் வருத்தஞ் செய்யும்.

47 அந்தண னுறுமான்பா லவியினை யலர்ந்தகாலை
நந்தியா வட்டநாறு நகைமுடி யரசனுயிற்
றந்தியா முறைப்பிற் றுழைத் தடமலர்
வணிகனுறும்
பந்தியாப் பழுப்புநாறிற் சூத்திரன் பாலதென்றான்.

48 கன்னியைக் கடித்த நாகங் கன்னியே கன்னி நோக்க
மன்னதே யரசர்சாதி மூன்றெயி றழுந்தியாழ்ந்த
கொன்னுமா நாகங்கொண்டாற் கொப்புளாம்
விரலிற் றேய்த்தான்
மன்னிய தெண்மட்டாயின் மண்டலிப் பால
தென்றான்.

49 குன்றிரண்டனைய தோளான் கொழுமலர்க் குவளைப்
போதங்
கொன்றிரண் டுருவமோதி யுறக்கிடை மயிலனுடன்
சென்றிருண் டமைந்தகோலச் சிகழிகை யழுத்திச்
செல்வ
[1]னின்றிரண்டுருவ மோதி நேர்முக நோக்கினனே.

50 நெடுந்தகை நின்றுநோக்க நீள்கடற் பிறந்த கோலக்
கடுங்கதிர்க் கனலிகோப்பக் காரிரு ளுடைந்ததேபோ
லுடம்பிடை நஞ்சுநீங்கிற் றெண்டொடி
யுருவமார்ந்து
குடங்கையி னெடியகண்ணாற் குமரன்மே
னோக்கினளே.

47-ஆம் செய்யுளால் பாம்புகள் நான்கு சாதிகளாகப் பிரிக்கப் பட்டன வெனினும், 48-ஆம் செய்யுளால் அவை எல்லாம் மாநாகம் மண்டலி என இருவகையாகப் பிரிக்கப்படும் என்பது புலனும்.

1 முகத்தை நேரே நோக்கி மந்திரத்தை இரண்டுஉரு மனத்தால் ஓதினன்.

51 நோக்கினுணிறையு நாணு மாமையுங் கவினு
நொய்திற்
போக்கினுள் வளையும் போர்த்தாள் பொன்னிறப்
பசலை மூழ்கிற்
றூக்கினு ளநங்கனப்புத் தூணியை யமருளாணு
தோக்கிய முருகனெஃக மோரிரண்டனைய கண்ணாள்.

52 [1]ஆட்சியைம்பொறி யாள னுடம்பெனும்
பூட்சிநீள் கொடிப்புற்றி னகத்துறை
வாட்க ணேக்கெனும் வையெயிற் றூரழல்
[2]வேட்கை நாகத்தின் மீட்டுங் கொளப்பட்டாள்.

53 மாழ்கி வெய்துயிர்த்தாண்மட வாளெனத்
தோழிமார்களுந் தாயருந் தொக்குடன்
சூழியானை யன்னாய்தொடி னஞ்சறும்
வாழியென்றனர் வம்பலர் கோதையார்.

54 கண்ணிற் காணினுங் கட்டுரை கேட்பினு
நண்ணித் தீண்டினு நல்லுயிர் நிற்குமென்
றெண்ணி யேந்திழை தன்னை யுடம்பெலாந்
[3]தண்ணென் சாந்தம்வைத் தாலொப்பத்
தைவந்தான்.

55 மற்றமாதர்தன் வாட்டடங் கண்களா
லுற்ற நோக்க முறுதொர் நோக்கினிற்
சுற்றி வள்ளலைச் சோர்வின்றி யாத்திட்டா
ளற்ற மில்லமிர் தாகிய வஞ்சொலாள்

---

1 தம்வயப்படுத்தித் தமக்கு ஏவல்கொள்ளும் ஐம்பொறிகளையும் தான் அடக்கியாளும் சீவகன். அத்தன்மையன் ஈண்டுப் பதுமையினிடத்து வேட்கையுற்றனன் என்பது கருத்து.

2 முன் நச்சுநாகத்தாற் கொள்ளப்பட்டு மீண்டனள்; இப்பொழுது வேட்கை நாகத்தால் மீளாவாறு கொள்ளப்பட்டனள் என்றபடி.

3 "தண்ணென் சாந்தம் வைத்தாலொப்ப" என்றதைப் பதுமை சீவகன் இருவருக்கும் கொள்ளலாம்.

56 செய்தா னிருவினையின் பயத்தைச் சேருஞ்
சென்றென்றி
யெய்தா னதன்பயத்தைப் பிறனே துய்யத்த
லியல்பென்றி
கொய்தாமந் தாழ்ந்தொசிந்த குளிர்பூம் பிண்டிக்
கோமானே
யஃதே நின்சொ லியல்பென்று லடியே னின்னைத்
தொழுதேனே.

57 உண்டே தனதியல்பி னுணருங் காலை யுயிரென்றி
யுண்டாய வவ்வுயிரே பிறிதினில்லை யெனவுரைத்தி
வண்டார்த்து நாற்காதம் வண்ண மாலை
சுமந்தொசிந்து
கொண்டேந்து பூம்பிண்டிக் கோமானின்னைத்
தொழுதேனே.

58 காதலா லெண்வினையுங் கழிப வென்றியக்காத
லாதலா லெண்வினையுங் கழியா வென்று
மறைதியாற்
போதுலாய்த் தேன்றுளித்துப் பொழிந்து வண்டு
திவண்டுலாங்
கோதைதாழ் பூம்பிண்டிக் கோமா னின்னைத்
தொழுதேனே.

56-வது பாட்டு—உயிர் ஒருடம்பில் நின்று செய்த வினைப்பயனை வேறோர் உடம்பெடுத்து நின்று நுகரும் என்பது கருத்து. வேறோர் உடப்பெடுத்து நுகரும் என்றது பெரும்பான்மை பற்றி.

57-வது பாட்டு—உயிருக்கு உண்மையும் இன்மையும் சாதுரியமாகக் கூறப்பட்டன.

58-வது பாட்டு—இறைவன்பால்வைத்த காதலால் எண் வினையும் நீங்கும்; பிறபொருளிடத்து வைத்த காதலால் எண்வினையும் நீங்கா. ஒருபாற் காதல் கொள்ளுதலும் ஒருபாற் காதல் கொள்ளாமையுமாக முரண்தோன்றக் கூறினர்.

59 நற்றானஞ் சீலநடுங்காத் தவமறிவர் சிறப்பிந் நான்கு
மற்றாங்குச் சொன்ன மனைவியரிந் நால்வரவர்
வயிற்றுட் டோன்றி
யுற்றானொருமகனே மேற்கதிக்குக் கொண்டு போமுரா
வோன்றன்னைப்
பெற்றார் மகப்பெற்றா ரல்லாதார் பிறர்மக்கள்
பிறரே கண்டீர்.

60 படநாகத் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்
மெய்பணிப்ப நோற்றிட்
டடனாக வைம்பொறியும் வென்றார்க் குவந்தீதறான
மாகுந்
திடனாகத் தீந்தேனுந் தெண்மட்டு முயிர்க்குழா
மீண்டி நிற்றற்
கிடனாகு மூனுமிவை துறத்தலே
சீலமென்றுரைத்தார் மிக்கார்.

61 [1]ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினி
விட்டொழுக்கங் காத்த
றவாத்தவ மென்றார் தண்மதிபோன்
முக்குடைக் கீழ்த் தாதை பாதம்
பூவே புகைசாந்தஞ் சுண்ணம் விளக்கிவற்றாற்
புனைதனாளு
மேவா விவைபிறவும் பூசனையென் றீண்டிய
நூல்கண்ரை கண்டாரே.

60-வது பாட்டு-தோலுரித்த நாகம் மீண்டும் அதனைப் போர்த்துக்கொள்ளாது ; அதுபோல மீண்டும் பற்றுச் செல்லாவாறு துறத்தல்.

1 இரண் டுவவு—அமாசையும் பௌர்ணிமையும்.

62 இந்நால்வர் துணைவியராக் காதன்மகனிவனு
வுடையார் போகிப்
பொன்னுரமார்பிற் புரந்தரராய்ப் பூமிமுழுது
மாண்டு
மன்னுகி முக்குடைக்கீழ் வாமன் சிறப்பியற்றி
வரம்பிலின்பம்
பின்னு விளைவித்துப் பிறவாவுல கெய்தல்
பேசலாமே.

63 மட்டார்பூம் பிண்டிவளங்கெழு முக்குடைக்கீழ்
மாலே கண்டீர்
[1]முட்டாதவின்பப் புதாத்திறக்குந்[2]தாளுடைய
மூர்த்திபாத
[3]மெட்டானும் பத்தானு மில்லாதார்க்
கிவ்வுலகிலின்பமேபோ
லொட்டாவே கண்டீர் வினையவனைத் தேருதார்க்
குணர்ந்தீரன்றே.

64 வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும்
வெகுண்டீர் போல
[4]வாற்றுணக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரேயல்லீர்
போலுங்

1 அழியாத இன்பம்—வீட்டின்பம்.
2 தாளாகிய பாதம் உடைய மூர்த்தி எனக்கூட்டுக.
3 “ பத்தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும் ” நாலடியார்.
4 வழிப்போவார் கொண்டுசெல்லும் கட்டுச்சோறு.

கூற்றங்கொண் டோடத் தமியே கொடு நெறிக்கட்
செல்லும் போழ்தி
[1]னாற்றுணைக் கொள்ளீரழகலா லறிவொன்றுமிலிரே
போலும்.

65 அளைவது காமமடுநறவு நெய்யொழுகு மூனும் பின்னை
விளைவது தீவினையே கண்டீரிவை மூன்றும்
விடுமினென்றாற்
றளையவிழ் கோதையார் தாமஞ்சேர் வெம்முலைபோல்
வீங்கிக் கண்சேந்
துளையவுறுதி யுரைப்பாரை யோஒர் பாவ
முணராரேகாண்.

66 கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணா
ளதனைக் காட்டா
ளையா விளாம்பழமே யென்கின்றீராங்கதற்குப்
பருவமன்றென்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக் கட்டுரை
யாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்.

---

1 நல்வினையாகிய ஆற்றுணை.

66-வது பாட்டு—இளமையில் அறஞ்செய்யாதான், இறக்குங் காலத்துச் செய்யக் கருதி, பேசவியலாமையின் கையால் பொருளினளவு குறித்து மனைவியிடத்துக் காட்ட, அதனை யுணர்ந்த மனைவி உண்மையை மறைத்து, விளாம்பழம் கேட்கின்றார்; அதற்கு இது பருவமன்றே என்று கூறியழுதனள்; அத்தன்மை நேராமுன் அறஞ்செய்க என்றபடி.

67 பனிமதி யின்கதிர் பருகு மாம்பல் போன்
[1]முனிமதி முகத்தியர் முறுவ னம்பினர்
துனிவளர் கதிகளுட் டோன்றி நாடகங்
கனியநின் றுடுவர் கடையில் காலமே.

68 திழனிமிர் நெடுமதி நிகரி நீங்கதிர்ப்
பிழனவெண் டாமரை பனிக்கு மாறுபோல்
குழனிமிர் கிளவியார் [2]கோல மஞ்சினர்
தொழநிமிர்ந் தமரராய்த் துறக்க மாள்வரே.

விமலையாரிலம்பகம்.

69 நலிவில் குன்றொடு காடுறை நன்பொருட்
புலிய னார்மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலு
நிலைகொண் மன்னர் வழக்கென நேர்பவே.

70 நீதி யாலறுத் தந்நிதி யீட்டுத
[3]லாதி யாய வரும்பகை நாட்டுதன்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே.

71 [4]ஒற்றர் தங்களை யொற்றறி னுய்தலுங்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலுஞ்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலுஞ் [5]சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே,

---

1 மதிமுனிமுகத்தியர் எனமாற்றுக; அன்றி, முனிவிலும் மதி போலும் முகத்தியர் என்றுமாம். ("செயிர்ப்பினுமழகு செய்யும் திருமுகத்தணங்கு" கம்பர்)
2 கோலமஞ்சி அவரைத் துறந்தவர் என்றபடி.
3 பழம்பகையை மறவாது மனத்திற்கொண்டிருத்தல். ("காலம் பார்த்து, உள்வேர்ப்பர் ஒள்ளியவர்" குறள்)
4 ஓர் ஒற்றன் கூறுவது உண்மையா என்று மற்றோர் ஒற்றனு லாராய்தல். (மூன்றுமுறை ஆராய்ந்து மூவர் கூறுவதும் ஒற்றுமைப்பட்டால் கொள்ளுதல் வேண்டும்.)
5 சூது—உபாயம்.

72 வென்றி யாக்கலு மேதக வாக்கலுங்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலு
மன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
[1]பொன்றுஞ் சாகத்தி னய்பொருள் செய்யுமே.

73 பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத்[2] துன் னாதன வில்லையே.

74 கார்தோன்ற வேமலரு முல்லை கமலம் வெய்யோன்
றேர்தோன்ற வேமலருஞ் செம்மணின் மாமன்
மற்றுன்
[3]சீர்தோன்ற வேமலருஞ் சென்றவன் சொல்லினோடே
பார்தோன்ற நின்ற பகையைச் செறற்பாலை
யென்றாள்.

சுரமஞ்சரியாரிலம்பகம்.

75 வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட
வந்திலதி னயபய னென்னைமொழி கென்றாண்
[4]முந்திநலி கின்றமுது மூப்பொழியு மென்றான்.

76 நறவிரிய நாறுகுழ லாள்பெரிது நக்குப்
பிறருமுள ரோபெறுநர் பேணிமொழி கென்னத்
துறையறிந்து சேர்ந்து[5]தொழு தாடுநரி லென்றாற்
கறிதிர்பிற நீவிரென வையமிலை யென்றான்.

---

1 திருமகள் தங்கும் மார்பினையுடையாய்.

2 "துன்னாதனவில்லை" என்றதன் கருத்து, கிடைத்தற்கரிய வீடுபேறும் கிடைக்கும் என்பது.

3 நீ உயிரோடு சிறப்புடனிருக்கின்றாய் என்பதைக் கேட்ட அளவில் மகிழ்வான் என்றபடி.

75, 76 இரண்டினும் சீவகன் கூற்றுக்கள் இரட்டுறமொழிதல்.

4 தான்வரவேண்டிய காலத்தில் வாராது முந்திவந்து நலிகின்ற மூப்பு. முதுமூப்பு—பிறர்மூப்பெலாம் இளமை என்னும் படி மிக்க மூப்பு.

5 குமரி தெய்வத்துறையாதலின் அதனைத் தொழுது; நின் மனம் இணங்குமாறு நின்னைத்தொழுது என்க.
78வது பாட்டும் இரட்டுறமொழிதல்.

77 செத்தமர மொய்த்தமழை யாற்பெயரு மென்பார்
பித்தரிவ ருற்றபிணி தீர்த்துமென வெண்ணி
யத்தமென மிக்கசுட ரங்கதிர் சுருக்கு
மொய்த்தமணி மாடமிசை யத்தக வடைந்தாள்.

78 வல்லதெனை யென்னமறை வல்லன்மட வாயா
னெல்லையெவ னென்னப்[1]பொரு ளெய்திமுடி காறுஞ்
சொல்லுமினா நீவிர்கற்ற காலமெனத் தேன்சோர்
சில்லென்கிளிக் கிளவியது சிந்தையில னென்றான்.

79 இன்னவர்க ளில்லைநிலத் தென்றுவியந் தேத்தி
யன்னமன மென்னடையி னாளமர்ந்து நோக்கப்
பின்னையிவள் போகுதிறம் பேசுமென வெண்ணித்
தன்னஞ்சிறி தேதுயின்று தாழவவ ணக்காள்.

80 கோலமணி வாய்க்குவளை வாட்கண்மட வாளைச்
சாலமுது மூப்புடைய சாமி[2]முக நோக்கிக்
[3]காலுமிக நோஞ்சிறிது கண்ணுந்துயில் குற்றே
னேலங்கமழ் கோதையிதற் கென்செய்குரை
யென்றான்.

81 மட்டுவிரி கோதைமது வார்குழலி னாடன்
பட்டுநிணர் கட்டில்பரி வின்றியுறை கென்றா
ளிட்டவணை மேலினிது மெல்லென வசைந்தான்
கட்டழல்செய் காமக்கட லைக்கடைய லுற்றான்.

---

1 வேதப் பொருளைத் தெளியும் அளவும். வந்தகாரியம் முற்றும் அளவும்.

2 சுரமஞ்சரி முகம் நோக்கி-அவள் தன்பால் அன்புகொண்டு அங்கு துயிலச் சொல்லுதற்காக முகம் நோக்கிக் கூறினான்.

3 காலுமிகநோம் கண் சிறிது துயில்குற்றேன் என்பது முரண் பட நின்றது.

82 பொன்னறையு ளின்னமளிப் பூவணையின் மேலான்
முன்னியதன் மன்றலது முந்துறமு டிப்பான்
[1]மன்னுமொரு கீதமது ரம்பட[2]மு ரன்றாற்
கின்னமிர்த மாகவிளை யாருமது கேட்டார்.

83 மன்மதன் மணிக்குரன் மருட்டுமென்று மால்கொள்வா
ரின்னதின் றியக்கரின் னியக்கவந்த தென்றுதம்
பின்னு முன்னு நோக்குவார் பேதுசால வெய்துவார்
கன்னிதன் மனத்திழைத்த காளைநாமம் வாழ்த்துவார்.

84 கொம்பினைத் தொதுங்கியுங் குழங்கன்மாலை தாங்கியு
மம்பினைத்த கண்ணினா ரடிக்கலம் மரற்றவுந்
நம்பிதந்த[3]கீதமே நயந்துகாண வோடினார்
வெம்புவேட்கை வேனிலானின் வேறலானு மாயினான்.

85 தாமமாலை வார்குழற் றடங்கணார்க் கிடங்கழி
காமனன்ன காளைதன் கருத்தொடொத்த தாகலான்
மாமலர்த் தெரியலான் மணிமிடற்றி டைக்கிடந்த
சாமகீத மற்றுமொன்று சாமிநன்கு பாடினான்.

---

1 கேட்டோருள்ளத்தில் நிலைபெறும் கீதம்.

2 "முரன்றாற்கு" குவ்வுருபு கொடைப்பொருட்டு. சீவகன் தன் கீதத்தை ஆண்டுள்ளார் கேட்டல் கருதிப் பாடினானதலின், அவர்கள் கேட்டது அவனுக்குக் கொடையாயிற்று.

3 ஐம்பொறிகளால் அறிவனவெல்லாம் காட்சி எனப்படுமாதலின், கீதம் காண ஓடினார் என்றது பொருந்துவதாயிற்று.

85வது பாட்டு. தன் பாட்டைச் சுரமஞ்சரியும் பிறரும் விரும்பிக் கேட்கவேண்டுமென்பது சீவகன் கருத்தாகலின் மற்றுமொரு பாட்டைப் பாடினான். சாமகீதம்—இனியபாடல்,

86 இனிச்சிறி தெழுந்து வீங்கி யிட்டிடை கோறு நாங்க
ளெனக்கொறு கொறுப்ப போலு மிளமுலைப்
பரவை யல்குற்
கனிப்பொறை மலிந்த காமர் கற்பக மணிக்கொம்
பொப்பாள்
[1]பனிப்பிறைப் பூணி னான்றன் பாண்வலைச் சென்று
பட்டாள்.

87 அடிக்கல மாற்ற வல்குற் கலைகலந் தொலிப்ப வந்து
முடிப்பதென் பெரிது மூத்தேன் முற்றிழை யரிவை
யென்ன
[2]வடிக்கணா ணக்கு நாணித் தோழியை மறைந்து
மின்னுக்
கொடிக்குழாத் திடையோர் கோலக் குளிர்மணிக்
கொம்பி னின்றாள்.

88 இளையவற் காணின் மன்னே வென்செய்வீர்
நீவி ரென்ன
விளைமதுக் கண்ணி மைந்தர் விளிகெனத் தோழி கூற
முளையெயிற்[3]றிவளை யாரு மொழிந்தன
ரில்லை யென்றே
வுளைவது பிறிது முண்டோ வொண்டொடி
மாதர்க் கென்றான்.

---

1 மூப்பு வேடத்துக்கு முன்பின் நிலை நோக்கிப் பனிப்பிறைப் பூணினான் என்றார்.

2 மூப்படைந்தும் இவனுக்கு இந்நினைவு நீங்கவில்லையே என்று நகைத்தாள்; தான் அவ்வாறு கூறப்பட்டதற்கு நாணினாள்.

3 இவளை யாரும் மணஞ்செய்ய மகட்பேசினாரில்லை என்றே.

89 வாய்ந்த விம்மாதர் சுண்ணஞ் சீவகன் பழித்த
பின்றைக்
காய்ந்தன ளென்று கூறக் காளைமற் றிவட்குத் தீயான்
மாய்ந்தனன் போலு மென்ன மாதரா ரொருங்கு
வாழ்த்தி
யாய்ந்தன மைய னுய்ந்தா னறிந்தன
மதனை யென்றார்.

90 அன்பொட்டி யெமக்கோர் கீதம் பாடுமி னடித்தி
யாரு
முன்பட்ட தொழிந்து[1] நுங்கண் முகவியர் முனிவு
தீர்ந்தார்
[2]பொன்றொட்டேம் யாமு நும்மைப்
போகொட்டோம் பாடல் கேளா
[3]தென்பட்டு விடினு மென்றா ரிலங்குபூங் கொம்பொ
டொப்பார்.

91 பாடுதும் பாவை பொற்பே பற்றிமற் றெமக்கு நல்கி
னுடைமைத் தோளி னீரஃ தொட்டுமேற் கேண்மி
னென்ன
நாடியார் பேயைக் காண்பார் நங்கைகா ளிதுவு
மாமே
யாடுவ தொன்று மன்றிவ் வாண்மக னுரைப்ப
தென்றார்.

---

1 நும்மை முகம்நோக்கி நிற்குந் தன்மையராய்.
2 பொன்போலும் இத்தலைவியின்மேல் ஆணையிட்டோம்.
3 நீர் எவ்வளவு துன்பப்பட்டாலும்.
91வது பாட்டு "பொற்பேபற்றி மற்றெமக்கு நல்கின்" என்றது இரட்டுற மொழிதல். சீவகன்கருத்தில், பொற்பு—தோற்றப் பொலிவு, மற்று—மற்றைய தனித்தனி அவயவ அழகும் அவளால் எய்தும் இன்பமும்.

92 பட்டுலாய்க் கிடந்த செம்பொன் பவளமோர்
டிமைக்கு மல்கு
லொட்டினு ளதனை யோரா[1] துலம்பொரு
தோளி னானும்
பட்டவா ணுதலி னாய்க்குப் பாடுவல் காமன் றந்த
[2]தொட்டிமை யுடைய வீணைச் செவிச்சுவை
யமிர்த மென்றான்.

93 வயிரவில் லுமிழும் பைம்பூண் வனமுலை
மகளிர் தம்மு
[3]ளுயிர்பெற வெழுதப் பட்ட வோவியப் பாவை
யொப்பாள்
செயிரில்வாண் முகத்தை நோக்கித் தேன்பொதிந்
தமுத மூறப்
பயிரிலா நரம்பிற் கீதம் பாடிய தொடங்கி னானே.

94 பாடினான் றேவ கீதம் பண்ணினுக் கரசன் பாடச்
சூடக மகளிர் சோர்ந்து செருக்கிய மஞ்ஞை
யொத்தா
ராடகச் செம்பொற் பாவை யந்தணற் புகழ்ந்து
செம்பொன்
மாடம்புக் கநங்கற் பேணி வரங்கொள்வ னாளை
யென்றாள்.

---

1 உலம்—திரண்டகல்.

2 ஒற்றுமையுடைய சாரீரவீணை. சரீரத்தையே வீணையாக வைத்துக்கூறுதல் மரபு.

3 ஓவியம் எழுதப்பட்டு உயிர் கொடுக்கப்பெற்றாற் போன்ற உருவமுடையவள்.

95 [1]அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்
தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி
யுடம்பொடு முகங்க ளொவ்வா[2]ரூழ்கனி மாந்தி வாழ்வர்
[3]மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்னரேறே.

96 செப்பிய சீல மென்னுந் திருமணி மாலை சூழ்ந்தார்
கப்பத்து ளமர ராவர் காட்சியி னமிர்த முண்டா
ரொப்பநீ ருலக மெல்லா மொருகுடை நிழற்றி யின்பங்
கைப்படுத் தலங்க லாழிக் காவல ராவர் கோவே.

97 வீட்டின தியற்கைநாம் விளம்பிற் றீங்கதிர்ப்
பாட்டரும் பனிமதி பழித்த முக்குடை
மோட்டிருங் கொழுமலர்ப் பிண்டி மூர்த்திநா
லீட்டிய பொருளகத் தியன்ற தென்பவே.

98 உள்பொரு ளிதுவென வுணர்தன் ஞானமாந்
தெள்ளிதி னப்பொரு டெளிதல் காட்சியாம்
விள்ளற விருமையும் விளங்கத் தன்னுள்ளே
யொள்ளிதிற் றரித்தலை யொழுக்க மென்பவே.

---

1 அடங்கலர்—ஐம்பொறிகளும் அடங்கப்பெறாதவர்.

2 ஊழ்வினைப்பயனாகிய கனி.

3 சிங்கம்போலும் சீற்றமும் வலியுமுடையமானவேல் மன்னர்களுக்குள் ஏறுபோன்றவனே.

97-வது பாட்டு—தீங்கதிர்ப்பாடு, அரும்பனிமதி பழித்த முக்குடை—இளஞாயிற்றின் ஒளியும், மதியின் குளிர்ச்சியுமுடைய முக்குடை.

99 கூடிய மும்மையுஞ் சுடர்ந்த கொந்தழ
னீடிய வினைமர நிரைத்துச் சுட்டிட
வீடெனப் படும்வினை விடுதல் பெற்றதங்
காடெழிற் றேளிணுய நந்த நான்மையே.

100 கிடையிலா வறிவொடு காட்சி வீரியங்
கிடையிலா வின்பமுங் கிளந்த வல்லவு
முடையதங் குணங்களோ டோங்கி விண்டொழ
வடைதலான் மேலுல கறியப் பட்டதே.

99-வது பாட்டு—ஞானம், காட்சி, ஒழுக்கம் என்ற மூன்றும் எரியாகவும், இவற்றுற் போக்கப்படும் இருவினையும் மரமாகவும் உருவகஞ் செய்யப்பட்டன.

100-வது பாட்டு, கிடை இலா—வேறொருபொருள் ஒப்பில்லாத. கிளந்தவல்லன, எண் குணங்களுள் அநந்தஞானம், அனந்த தரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம் என்னும் நான்கும் ஒழிந்த, நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்பன.

(25) கம்பராமாயணம்.

கடவுள் வாழ்த்து.

1 உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

சரயுநதிச் சிறப்பு.

2 முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை
முல்லையாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லா மிடைதடுமாறு நீராற்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச்
சென்றதன்றே.

3 கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக்
கலந்தநீத்தம்
எல்லையின் மறைகளாலு மியம்பரும் பொரு
ளீதென்னத்
தொல்லையி லொன்றேயாகித் துறைதொறும்
பரந்தசூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற்
பரந்ததன்றே.

1-வது பாட்டு-நீங்கலாவிளையாட்டு, அலகிலாவிளையாட்டு எனக் கூட்டுக. அலகில்லாமை—முடிவில்லாமை எனக்கொள்க.

2-வது பாட்டு-வினைபொருள் கொண்டுநோக்கின், நானிலத்திலும் மருதம் உயர்ந்தது, நெய்தல் தாழ்ந்தது எனக்கொள்ளப் படுதலின், புல்லியநெய்தல் பொருவருமருதமென்றார்.

3-வது பாட்டு-ஈதுஇயம்பரும் பொருள் என்ன—ஈது இயம்பரும் பொருள்போலும் என்று கூறும்படி. ஈது—சரயுநதி. சொல்லும் பொருளும்போல்—சொல்லும் பொருள்போலும் எனக்கூட்டுக.

4 தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும் புதுமணற்றடங்
கடோறும்
மாதவி வேலிப்பூக வனந்தொறும் வயல்கடோறும்
ஓதிய உடம்புதோறு முயிரெனவுலாயதன்றே.

அயோத்தி நகரச் சிறப்பு.

5 ஏகம் முதற்கல்வி முளைத் தெழுந் தெண்ணில்
கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்தவத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங்கனி யொன்று பழுத்தது போலு மன்றே.

தசரதன் அரசியற் சிறப்பு.

6 வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா உலகினிற் சென்று நின்று வாழ்
உயிரெலா முறைவதோருடம்பு மாயினன்.

சீதையும் இராமனும் தம்முட் கண்ணுறுதல்.

7 எண்ணரு நலத்தின ளினைய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கின னவளு நோக்கினள்.

8 நோக்கிய[1]நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன

4-வது பாட்டு ஓதிய உடம்பு—நூல்களிற் கூறப்பட்டமக்கள், தேவர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவை.

1 வேல்தப்பாது பகைவர்மேல் பாய்தல்போல் தப்பாது தன் வயப்படுத்தும் பார்வை என்க.

வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணங் கனையவ டனத்திற் றைத்தவே.

9 பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக்[1] கிதய மெய்தினார்.

10 [2]மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
[3]கருங்கடற் பள்ளியிற் கலவிநீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ.

திங்கள் தோற்றம் (சடையப்பவள்ளல் குறிப்பு).

11 வண்ணமாலைகைபரப்பி யுலகை வளைந்தவிருளெல்லாம்
உண்ணவெண்ணித் தண்மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணுமண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்டவிரிநன்னீர்ப்
பண்ணைவெண்ணெய்[4]சடையன்றன் புகழ்போ லெங்கும்பரந்துளதால்.

---

1 ஒருவரிதயத்து மற்றொருவர் எய்தினார்.
2 சாதுரியமாக இருவர்க்கும் ஒவ்வோர் இன்மை கூறியபடி.
3 கருங்கடல்—பெரிய(பாற்)கடல்.
4 கொடைப்புகழை வெண்மைநிறமாகக் கூறுதல் கவிமரபாதலால், ஈண்டுச் சடையன்புகழை நிலவிற்குவமை கூறினார்.

உலாவருகையில் மகளிர் இராமனைக்கண்டதன்மை.

12 தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்டசமயத் தன்னானுருவுகண் டாரை யொத்தார்.

அயோத்தியாகாண்டம்.

தசரதன் கூற்று.

13 பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமக ணிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகண் மணமுங்கண் டுவப்ப தாயினேன்.

14 ஆதலாலிராமனுக் கரசை நல்கியிப்
[1]பேதைமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்தென வினைய கூறினான்.

வசிட்டன் கூற்று

15 நிருப நின்குலமன்னவர் நேமிபண்டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப்பெற்றார்
கருமமேயிது கற்றுணர்ந் தோய்க் கினிக் கடவ
தருமமும்மிதுதக்கதே நினைந்தனை தகவோய்.

12-வது பாட்டு—ஒவ்வொரு சமயத்தவரும் இறைவனிலையிற் சிறிது சிறிது உணர்ந்து அவ்வளவி லமைந்தாற்போ லாயினர் இராமனழகைக்கண்டோர் என்றபடி.

1 பேதைமை மிக்கு வருகின்ற பிறப்பு—பேதமை பிறப்புக்குக் காரணம்.

தசரதன் மகிழ்ச்சி

16 மற்றவன் சொன்னவாசகங் கேட்டலு மகனைப்
பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்றவன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்றவன்றினும்[1] பெரியதோ ருவகைய னானான்.

தசரதன் அரசேற்குமாறு கூறியபோது இராமன்நிலை.

17 தாதையப்பரிசுரைசெயத் தாமரைக் கண்ணன்
காதலுற்றிலனிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவனேவிய ததுசெயலன்றோ
நீதியெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்.

கைகேசி கூற்று.

18 ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாள நீபோய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவமேற்
கொண்டு
பூழிவெங்கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண்டாண்டின் வாவென் றியம்பின
னரசனென்றாள்.

இராமன் மனநிலையும் விடைபெறுதலும்.

19 தெருளுடை மனத்துமன்ன னேவலிற்றிறம்பவஞ்சி
[2]யிருளுடை யுலகந்தாங்கு மின்னலுக் கியைந்து
நின்றான்
உருளுடைச் சகடம்பூண்ட வுடையவ னுய்த்தகாரே
றருளுடை யொருவனீக்க வப்பிணியவிழ்ந்த
தொத்தான்.

---

1 தன்மகனைச் சான்றோன் எனப் பிறர் கூறக்கேட்டதனால் பேருவகையனானான் என்க.

17-வது பாட்டு—அரசகுடியில் மூத்தவன் அரசேற்கும் முறைமை, தந்தைசொற்படி நடத்தல் ஆகிய இருகடமைகளும் கருதி அரசேற்க இயைந்தனன் என்றபடி.

2 உண்மை யுணர்வுதோன்றாமல் தடுப்பதே இயல்பாக உடைய உலகம். "இருள்தருமாஞாலம்" என்றார் ஆழ்வார்.

20 மன்னவன் பணியன் ருகினும்பணி மறுப்பனோவென்
பின்னவன்பெற்ற செல்வமடியனேன் பெற்றதன்ருே
என்னினி யுறுதியப்பாலிப்பணி தலைமேற்
கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன்
விடையுங்கொண்டேன்.

சுமித்திரை கூற்று.

21 [1]ஆகாத தன்ருலுனக் கவ்வன மிவ்வயோத்தி
மாகாதலிராமனம் மன்னவன் வையமீந்தும்
போகா வுயிர்த்தாயர் நம்பூங் குழற்சீதை யென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலு மேதமென்ருள்.

22 பின்னும் பகர்வாண்மகனே யிவன்பின் செறம்பி
என்னும் படியன் றடியா ரினிலேவல் செய்தி
மன்னுந்நகர்க்கே யிவன்வந்திடின்வா வதன்றேல்
முன்னம் முடியென்றனள் பான்முலை சோர நின்ருள்.

இலக்குவன் வெகுளியும் இராமன் தணிப்புரையும்.

23 உதிக்கும் முலையுள் ளுறுதீ யெனவூதை பொங்கக்
கொதிக்கும்மன மெங்ஙனமாற்று வென்
கோளிழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்வானவர்க்கும் வலீஇதாம்
விதிக்கும் விதியாகுமென் விற்ரெழில்
காண்டியென்ருன்.

20-வது பாட்டு—மன்னவன் புணியன்ருகில் நும்பணி மறுப்பனோ என்றும், முன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்பனோ என்றும் கொள்க. பின் கருத்துக்கு ஆகிலும் என்பது உம்கெட்டு நிற்பதாகக் கொள்க.

1 இராமனுடன் சேறல் உனக்கு ஆகாததன்று.

22-வது பாட்டு—தம்பி என்னும்படியன்று என்றது—தம்பியாயின் சம உரிமை கருத இடமுண்டாகும் ஆதலின் அங்ஙிலை கருதற்க என்றபடி.

24 ஆன்றான் பகர்வான் பினுமைய விவ்வையமையல்
தோன்றா நெறிவாழ் துணைத் தம்பியைப் போர்
தொலைத்தோ
சான்றோர்புகழுந் தவத்தாதையை வாதை
கொண்டோ
ஈன்றாளை வென்றோ வினியிக் கதந்தீர்வ தென்றான்.

25 நன்சொற் கடந்தாண் டெனைநாளும் வளர்த்ததாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்கதன்றால்
என்சொற் கடந்தாலுனக்கியாதுள தீனமென்றான்
தென்சொற் கடந்தான் வடசொற் கடற்கெல்லை
தேர்ந்தான்.

பரதன் நந்தியம்பதியிலிருத்தல்.

26 நந்தியம்பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோன் முறை செலுத்தச் சிந்தையான்
இந்தியங் களையவித் திருத்தன் மேயினான்
அந்தியும் பகலுநீ ரறாத கண்ணினான்.

ஆரண்ய காண்டம்.

இராமனிடம் முனிவர் குறைகூறுதல்.

27 மாதவத் தொழுகலெ மறைகள் யாவையும்
ஓதலெ மோதுவார்க் குதவ லாற்றலெம்
மூதெரி வளர்க்கிலெ முறையி னீங்கினேம்
ஆதலி னந்தண ரேயு மாகிலேம்.

24-வது பாட்டு—வைய மையல் தோன்றா நெறி—உலகிய லின்பங்களில் ஆசை தோன்றாது இராமபக்தியிலேயே உள்ளஞ் செல்லுதல். சான்றோர் புகழுந் தவத்தாதை—மெய் கூறுதலைத் தவமாகக்கொண்டு நடத்திய தாதை. "மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன்" என்பர் பின்னும். "பொய்யாமையன்னபுகழில்லை" என்பது திருக்குறள்.

28 வேந்தன் வீயவும் யாய்வர[1] மேவவும்
ஏந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவும் யான்வனம்
போந்த தென்னுடைப் புண்ணியத் தாலென்றான்.

29 சூரறுத் தவனுஞ் சுடர்நேமியும்
[2]ஊரறுத்த வொருவனு மோம்பினும்
ஆரறத்தி னொடன்றி நின்றாரவர்
வேரறுப்பென் வெருவன்மி னீரென்றான்.

கோதாவரியின் சிறப்பு.

30 புவியினுக் கணியா யான்ற பொருடந்து[3] புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி [4]யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.

சூர்ப்பணகை இராமனழகை வியத்தல்.

31 [5]எவன்செய வினியவிவ் வழகை யெய்தினேன்
அவன்செயத் திருவுடம் பலச நோற்கின்றான்
[6]நவன்செயத் தகைய விந்நளின நாட்டத்தான்
தவன்செயத் தவன்செய்த தவனெ னென்கின்றாள்.

---

1 மேவவும்—உம் அசைநிலை.

2 திரிபுரங்களை யழித்த சிவபெருமான்.

3 அறிவினுக்கு உரியதாகி, நவில்தொறும் புதியபுதிய பொருள்களை யுணர்த்துவதாகி.

4 அகத்திணை ஏழனுள் சிறப்புடைய அகனைந்திணையும் கூறப்பட்டன; கைக்கிளை பெருந்திணை ஏற்றபெற்றி கொள்ளப்படும்.

5 எவன் செய—யார்படைத்தலால்; அன்றி என்ன பயனை யடைய என்றுமாம்.

6 நவன் செயத்தகைய — ஒன்பது மெய்ப்பாடுகளையும் உண்டாக்கவல்ல.

32 உடுத்தநீ ராடைய ளுருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவன்
அடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன நிகர்க்குமாற் புல்லென் றுன்னுவாள்.

33 வாணிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
காணல னேகொலோ கதிரி னாயகன்
சேணெலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையின்
நாணலன் மீமிசை நடக்கின்றா னென்றாள்.

34 நற்கலை மதியுற வயங்கு நம்பிதன்
எற்கலை திருவரை யெய்தி யேமுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள்.

35 கரந்தில னிலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் பழிப்புற் றானரோ
இரந்திவ னிணையடிப் பொடியு மேற்கலாப்
புரந்தர னுலகெலாம் புரக்கின்றா னென்றாள்.

சூர்ப்பணகை இராவணன் முன் சீதையினழகைக் கூறுதல்.

36 காமர முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் நிரந்த கூந்தற் றேவர்க்கு மணங்கா
மென்னத்
தாமரை யிருந்த தையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்கு மென்ப தேதைமைப் பால தன்றே

32-வது பாட்டு—பூமியைப் பெண்ணாகக்கூறியதற்கேற்ப உருவச் செவ்வியும் பிடித்தருநடையும் கூறப்பட்டன எனக்கொள்க.

33-வது பாட்டு—கதிரின் நாயகன் இராமன் மேனியொளியைக் கண்டால், தன்புல்லொளி பரப்பி ஆகாயத்தில் உலாவாது அடங்குவன் என்றபடி.

36-வது பாட்டு—காமரமுரலும் பாடலென, கள்ளெனக் கனிந்த இன்சொல் என்க. காமரம்—வண்டும், ஓர்வகைப் பண்ணுமாம்.

37 மஞ்சொக்கு மளக வோதி மழையொக்கும் வடித்த
கூந்தல்
பஞ்சொக்கு மடிகள் செய்ய பவளத்தின் விரல்களைய
அஞ்சொற்க ளமுதி லள்ளிக் கொண்டவள்
வதன மைதீர்
கஞ்சத்தி னளவிற்றேனுங் கடலினும்பெரிய கண்கள்.

38 ஈசனார் கண்ணின் வெந்தா னென்னுமி திழுதைச்
சொல்லிவ்
வாசநா ருேதி யாளைக் கண்டனன் வல்ல வாற்ருல்
பேசலாந் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப
நீண்ட
ஆசையா லழிந்து தேய்ந்தா னநங்கனவ்
வுருவ மம்மா.

39 தோளையே சொல்லு கேனே சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனே வல்லவை
வழுத்து கேனே
மீளவுந் திகைப்ப தல்லாற் றனித்தனி விளம்ப
லாற்றேன்
நாளையே காண்டி யன்றே நானுனக் குரைப்ப
தென்னே.

37-வது பாட்டு—கண்கள் கடலினும் பெரிய என்றது கடலினும் மிக்க அழகையுடையன என்றபடி.

39-வது பாட்டு—இவள்கூறியதைக்கேட்ட இராவணன் உடனே சீதையைக் கொண்டுவர முயலுதல் ஒருதலே என்பது கருதி நாளையே காண்டி நானுனக்குரைப்பதென் என்ருள்.

40 வில்லொக்கு நுதலென் ருலும் வேலொக்கும்
விழியென் ருலும்
பல்லொக்கு முத்தென் ருலும் பவளத்தை
யிதழென் ருலும்
சொல்லொக்கும் பொருளொவ் வாவாற் சொல்லலா
முவமை யுண்டோ
நெல்லொக்கும் புல்லென் ருலு நேருரைத்
தாக வற்றே.

41 இந்திரன் சசியைப் பெற்ரு னிருமூன்று வதனத்
தோன்றன்
தந்தையு முமையைப் பெற்ருன் ருமரைச் செங்க
ணுனும்
செந்திரு மகளைப் பெற்ருன் சீதையைப் பெற்ருய்
நீயும்
அந்தரம் பார்க்கி னன்மை யவர்க்கில்லை யுனக்கே
யையா.

42 தேர்தந்த வல்குற் சீதை தேவர்த முலகி னிம்பர்
வார்தந்த கொங்கை யார்தம் வயிறுதந் தாளு மல்லள்
தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
நீர்தந்த ததனை வெல்வா னிலந்தந்து நிரம்பிற்
றன்றே.

40-வது பாட்டு—சொல்லொக்கும் பொருளொவ்வா என்றது, 'வில்லொக்கும் நுதல்' என்ருல் உவமை வாக்கியம் இலக்கண முறைப்படி அமைந்ததாயினும், இவள் நுதலுக்கு வில் சிறிதும் ஒவ்வாது என்றபடி.

41-வது பாட்டு அந்தரம்பார்கில் நன்மை அவர்க்கில்லை உனக்கே என்றும், நன்மை அவர்க்கு, இல்லை உனக்கு என்றும், பொருள்பட்டு இராவணனுக்கு அமங்கலமாகவமைந்தது.

இராவணன் மன நிலைமை.

43 கோபமு மறனுமானக் கொதிப்புமென் றினைய
வெல்லாம்
பாபநின் றிடத்து நில்லாப் பெற்றிபோற்
பற்றுவிட்ட
தீபமொன் றென்றை யுற்று லென்னலாஞ்
செயலிற்புக்க
தாபமுங் காம நோயு மாருயிர் கலந்த வன்றே,

44 கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து
நின்றான்
உரனையுமறந்தா னுற்ற [1]பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காம னம்பினுன் முன்னைப்
பெற்ற
[2]வரனையு மறந்தான் கேட்ட மங்கையை
மறந்தி லாதான்.

45 சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்று லொன்றொழித்
தொன்றை யுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற்றி
யாதோ
[3]கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்க லாமோ.

43-வது பாட்டு—மானக்கொதிப்பு—மானத்தாலெழுந்த மனக் கொதிப்பு.

1 பழியையும் என்பதில் உம் எண்ணுப் பொருளோடு உயர்வு சிறப்புப்பொருளும் உணர்த்தியது.

2 வரன்—எதிர்மறை இலக்கணையாக, அவன் முன் பெற்ற சாபத்தை உணர்த்தி நின்றது. பிறமகளிரை வலிதிற் றொடின் அழியக்கடவன் என அரம்பை முதலியோர் இராவணனைச்சபித்துள்ளனர்.

3 கற்றவர்க்குக் கற்றபடி ஒழுகும் ஞானமின்றேல்.

46 பொன்மய மான நங்கை மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ வரக்கன் றன்னை யயர்த்ததோர்
தகைமை யாலோ
மன்மதன் வாளிதூவி நலிவதோர் வலத்த ஞானன்
வன்மையை மாற்று மாற்றல் காமத்தே வதிந்த
தன்றே.

47 வன்பணை மரமுந் தீய மலைகளுங் குளிர வாழும்
மென்பனி யெரிந்த தென்றல் வேனிலை
விளம்ப லாமோ
அன்பெனும் விடமுண் டாரை யாற்றலா மருந்து
முண்டோ
[1]இன்பமுந் துன்பந் தானு முள்ளத்தோ டியைந்த
வன்றே.

48 கூலத்தா ருலக மெல்லாங் குளிர்ப்பொடு வெதுப்பு
நீங்க
நீலத்தா ரரக்கன் மேனி நெய்யின்றி யெரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றோ காமத்தாற் கனலும்
வெந்தீச்
சீலத்தா லவிவ தன்றிச் செய்யத்தா னுவ துண்டோ.

அநுமன் இராம இலக்குவர்களைக் கண்டு தன்னுள் நினைதல்.

49 அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகியொரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்றுகற் பினினையும்.

---

1 இன்பமும் துன்பமும் மனத்தில் நிகழும் கொள்கை வேறு பாடுகள் என்றபடி. ஒருவர்க்கு இன்பம் பிறர்க்குத்துன்ப மாகவும், ஒருவர்க்குத் துன்பம் பிறர்க்கு இன்பமாகவும் அமைதலால், நினைவு வேறுபாடன்றி இன்பம் துன்பம் எனத் தனியேயில்லை என்றபடி.

50 தருமமுந் தகவுமிவர் தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் றதுகருதின்
அருமருந் தனையதிடை யழிவுவந் துளததனை
இருமருங் கினுநெடிது தருவுகின் றனரிவர்கள்.

51 கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
[1]சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர்.

52 என்பன பலவு மெண்ணி யிருவரை [2]யெய்த நோக்கி
அன்பின னுருகு கின்ற வுள்ளத்த னார்வத் தோரை
[3]முன்பிரிந் தனையர் தம்மை முன்னின னென்ன நின்றான்
தன்பெருங் குணத்தாற் றன்னிற் றானல தொப்பி லாதான்.

50-வது பாட்டு—இவர், இவர்கள் என்று பன்முறை கூறியது, கூறுகின்ற அநுமனுடைய அன்பின்மிகுதிகாட்டி நின்றது.

1 இந்திரனுமஞ்சும் நிலையையுடையர். அறக்கடவுளுமஞ்சும் ஒழுக்கமுடையர்.

2 நன்றாகப்பார்த்து.

3 முன்கூடியிருந்த அன்புடையாரைப் பிரிந்து, மீண்டும் அவரைக் கூடினாற்போன்ற அன்பினனாகி நின்றனன்.

53 தன்கன்று கண்டவன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்று மெயிற்றுக் கோண்மா வேங்கையென்
றினைய வேயும்
பின்சென்று காதல் கூரப் பேய்[1]கணித் திரங்கு கின்ற
என்கன்று கின்ற தெண்ணிற் பற்பல விவரை யம்மா.

54 மயின்முதற் பறவை யெல்லா [2]மணிநிறத் திவர்கண்
மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா விருஞ்சிறைப் பந்தர் வீசி
எயில்வகுத் தெய்து கின்ற விண்முகிற் கணங்க
ளெங்கும்
பயில்வுறத் திவரை சிந்திப் பயப்பயத் தழுவும்
பாங்கர்.

55 காயெரி கனலுங் கற்கள் கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதந் தோய்தொறுங் குழைந்து
தோன்றுங்
போயின திசைக டோறு மரனெடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் தாழ்வ போலிங் கிவர்களோ தருமமாவார்.

53ல், நிலத்தில் உலாவும் விலங்கு பேய் முதலியவைகளும், 54ல், வானில் உலாவும் பறவைகள் மேகம் முதலியவைகளும், 55ல், அசையாப்பொருள்களாகிய கல் மரம் முதலியவை களும் அன்புடையவாயின என்று கூறப்பட்டன.

1 கண்ணோட்டம் செய்து.

2 அழகிய நிறத்தையுடைய இவர்கள்.

56 துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறியுய்க்குந் தேவ ரோதாம்
என்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
[1]அன்பினுக் கவதி யில்லை யடைவென்கொ லறித றேற்றேன்.

57 இவ்வழி யெண்ணி யாண்டவ் விருவரு மெய்த லோடும்
செவ்வழி யுள்ளத் தானுந் தெரிவுற வெதிர்சென் றெய்திக்
[2]கவ்வையின் றாக நுங்கள் வரவெனக் கருணை யோனும்
எவ்வழி நீங்கி யோய்நீ யாரென வியம்ப லுற்றான்.

58 [3]மஞ்செனத் திரண்ட கோல மேனிய [4]மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிரிரும் பணிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணயான் காற்றின் வேந்தற்
கஞ்சனை வயிற்றின் வந்தே னாமமு மனும னென்றான்.

---

1 உண்டாகும் அன்பினுக்களவில்லை; இவர்களோடு எனக்குள்ள இயைபை அறிகிலேன் என்றான் அநுமன்.

2 சுக்ரீவன் முதலியோர் வாலியால் துன்புற்றவர்; இவர்கள் வாலியால் அனுப்பப்பட்டவரோ என்றஞ்சினராதலின் "கவ்வையின்றாக" என்றான். கவ்வை—துன்பம்.

3 மஞ்சுதிரண்டெனக் கோலமேனிய என மாற்றுக.

4 சீதையொழிந்த ஏனைய மகளிர்க்கு எனக்கொள்க.

59 இம்மலை யிருந்து வாழு மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன் றேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனைய னேவ [1]வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ விசைசுமந் தெழுந்த தோளான்.

60 மாற்றமஃ துரைத்த லோடும் வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னுங்குச் செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலு நிறைவுங் கல்வி யமைதியு மறிவு மென்னும்
வேற்றுமை யிவனோ டில்லை யாமென விளம்ப லுற்றான்.

61 இல்லாத வுலகத் தெங்கு மீங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர விரிஞ்சனோ விடைவ லானோ.

---

1 நீங்கள் யார் என வினவியறிய.

61-வது பாட்டு—இவன் கல்லாத கலையும் வேதக் கடலுமே உலகத்தெங்குமில்லாத எனக் கூட்டுக. உலகத்தெங்கும் இசைகள் கூர என இயைப்பினுமாம்.

62 [1]மாணியாம் படிவ மன்று மற்றிவன் வடிவ மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற்
கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத்
தெளிந்தேன்[2] பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக்
கண்ணன்.

63 எவ்வழி யிருந்தான் சொன்ன கவிக்குலத் தரசன்
யாங்கள்
அவ்வழி யவனைக் காணு மருத்தியா லணுக
வந்தேம்
இவ்வழி நின்னை யுற்ற வெமக்குநீ யின்சொ லன்ன
[3]செவ்வழி யுள்ளத் தோனைக் காட்டுதி தெரிய
வென்றான்.

சுந்தர காண்டம்.

சீதையைக் கண்டுவந்த அநுமன் இராமனிடம் கூறுதல்.

64. [4]கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னகர்
அண்டர்நா யகவினித் துறத்தி யையமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்.

---

1 மாணி—பிரமசாரி.

2 பின்னர்க்காணுதி மெய்ம்மை என்றதனால் இப்பொழுது நீ தெளியமாட்டாய் என்றானும்.

3 அறநெறியன்றிச் செல்லாத உள்ளத்தோன்.

4 கற்பினுக் கணியை என் கண்களாற்கண்டனென் என்றபடி. இராவணன் வேண்டுகோட்குச் சீதை யிணங்காது மறுத்துரைத்ததையும் மற்றும் அவள் தன்மைகளையும் நேரிற் கண்டதனால் இங்ஙனங் கூறினன் அநுமான்.

65 உன்பெருந் தேவி யென்னு முரிமைக்கு முன்னைப்
பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை
மன்னன்
தன்பெருந் தனையை யென்னுந் தகைமைக்குந்
தலைமை சான்றாள்
என்பெருந் தெய்வ மையா வின்னமுங் கேட்டி
யென்பான்.

66 பொன்னல தில்லைப் பொன்னை யொப்பெனப்
பொறையி னின்றாள்
தன்னல தில்லைத் தன்னை யொப்பெனத் தனக்கு
வந்த
நின்னல தில்லை நின்னை யொப்பென நினக்கு
நேர்ந்தாள்
[1]என்னல தில்லை யென்னை யொப்பென வெனக்கு
மீந்தாள்.

67 [2]உன்குல முன்ன தாக்கி யுயர்புகழ்க் கொருத்தியாய
தன்குலந் தன்ன தாக்கித் தன்னையித் தனிமை
செய்தான்
வன்குலங் கூற்றுக் கீந்தவ் வானவர் குலத்தை
வாழ்வித்
தென்குல மெனக்குத் தந்தா ளென்னினிச்
செய்வ தெம்மோய்.

---

1 கடல் தாண்டுதல் முதலிய செயற்கருஞ் செயல்கள் சீதை காரணமாகச் செய்யப்பட்டமையால் "என்னலதில்லை...... ஈந்தாள்" என்றான்.

2 சூரியன் மரபை இனி இராமன் மரபு என்னும்படி செய்து. பிறவற்றிற்கும் இங்ஙனமேகொள்க.

68 விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை
வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக்
கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறை யென்ப
தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக்
கண்டேன்.

69 கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ வாயின்
எண்ணினு முளைநீ கொங்கை யிணைக்குவை தன்னி
னெவ்வா
தண்ணல்வெங் காம னெய்த வலரம்பு தொளைத்த
வாறுப்
புண்ணினு முளைநீ நின்னைப் பிரிந்தமை
பொருந்திற் றாமோ.

70 வேலையு ளிலங்கை யென்னும் விரிநக ரொருசார்
விண்டோய்
காலையு மாலை தானு மில்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனி னும்பி புல்லினாற் றெடுத்த[1] தூய
சாலையி னிருந்தா ளைய தவஞ்செய்த தவமாந்
தையல்.

71 மண்ணொடுங் கொண்டு போனான் வானுயர்
கற்பி னுடன்
புண்ணிய மேனி தீண்ட வஞ்சுவா னுலகம் பூத்த

68-வது பாட்டு—சீதையின் பெருமையைக் கூறுங்கருத்தால், கண்ணாற் காணலாகாத இற்பிறப்பு, பொறை, கற்பு என்னுங் குணங்களைக் கண்டேன் என்றான்.

1. இயற்றிய இலக்குவன் பக்தியினாலும், இருந்த சீதையின் கற்பினாலும் "தூய சாலை" என்றார். மண்ணோடு எடுத்த இராவணனாற் றொடப்படாமையாலும் தூய்மையுடைய தாயிற்று.

கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாட் டொடுதல்
கண்ணின்
எண்ணருங் கூருய் மாய்தி யென்றதோர்
மொழியுண் டென்பான்.

72 தீண்டில னென்னும் வாய்மை திசைமுகன்
செய்த முட்டை
கீண்டில தனந்த னுச்சி கிழிந்தில தெழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில[1]வேதஞ் செய்கை
மாண்டில தென்னுந் தன்மை வாய்மையா னுணர்தி
மன்னே.

73 சோகத்தா ளாய நங்கை கற்பினுற் ருழுதற் கொத்த
மாகத்தோர் தேவி மாரும் வான்சிறப் புற்ருர்
மற்றைப்
பாகத்தா ளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தா ளல்லண் மாய ணுயிர மௌலி மேலாள்.

74 இலங்கையை முழுது நாடி யிராவண னிருக்கை
யெய்திப்
பொலங்குழை யவரை யெல்லாம் [2]பொதுவுற
நோக்கிப் போந்தேன்
அலங்குதண் சோலை புக்கே னவ்வழி யணங்க னுளைக்
கலங்குதெண் டிரையிற் ருய கண்ணினீர்க் கடலிற்
கண்டேன்.

---

1 வேதஞ் செய்கைமாண்டிலது என்றது—இன்னும் வேதம் ஓதலும், அதிற் கூறப்பட்ட யாகம் முதலியன நடைபெறுதலும் உள்ளன என்றபடி.

73-வது பாட்டு—சீதையின் கற்புச் சிறப்பால் பெண்ணினம் முழுதும் மேன்மையுற்றது என்பது கருத்து.

2 பொது நோக்காக நோக்கிப் போந்தேன்.

75 [1]அரக்கிய ரளவற் றூரு மலகையின் குழுவு மஞ்சச்
செருக்கினல் கண்டு செய்ய மெய்க்கன றீக்கச் சீர்த்த
இரக்கமென் ருேன்று தானே யேந்திழை வடிவ மெய்தித்
[2]தருக்கிய சிறையுற் றன்ன தகையளத் தமிய ளம்மா.

76 மாண்பிறந் தமைந்த கற்பின் வாணுத னின்யால் வைத்த
சேண்பிறந் தமைந்த காதல் கண்களிற் றெவிட்டித் தீராக்
காண்பிறந் தமையா னீயே கண்ணகன் ஞாலந் தன்னுள்
ஆண்பிறந் தமைந்த செல்வ முண்டனே யாதி யன்றே.

உயுத்த காண்டம்.

கும்பகர்ணன் வதைப்படலம்.

77 வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான்.

---

1 அளவற்ற அரக்கியர்.

2 தருக்கினுலாகிய சிறை. இராவணன் தருக்கினுகிய சிறை என்றபடி.

76-வது பாட்டு—மாண் பிறந்தமைந்த—பிறப்பின் கண்ணே யமைந்த மாண்புகளையுடைய. சேண் பிறந்தமைந்த காதல்—மிகப் பெருங்காதல். கண்களிற்றெவிட்டித் தீரா—கண்களாற் பார்த்து முடியாதபடி (கண்—அகக்கண்). காண் பிறந்தமையால்—காண்பதற்குப் பிறந்தமையால்.

77-வது பாட்டு—மார்பும், தோளும், நாவும் களத்தே போட்டு என்றது அவற்றின் பெருமைகளையிழந்து என்றபடி. வீரம் களத்தே போட்டு என்றதுவீரத்தை யிழந்து என்றபடி.

78 பண்ணிறை பவளச்செவ்வாய்ப் பைந்தொடிச் சீதை
யென்னும்
பெண்ணிறை கொண்ட நெஞ்சி னுணிறை கொண்ட
பின்னர்க்
கண்ணிறை கோடல் செய்யான் கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானந் தன்னை யுமிழ்ந்தெரி யுயிர்ப்ப
தானான்.

79 வானகு மண்ணு மெல்லா நகுநெடு வயிரத்
தோளான்
நானகு பகைஞ ரெல்லா நகுவரென் றதற்கு நாணான்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியன் மிதிலை
வந்த
சானகி நகுவ ளென்றே நாணத்தாற் சாம்புகின்றான்.

80 ஆங்கவன் றன்மூ தாதை யாகிய மூப்பின் யாக்கை
வாங்கிய வரிவி லன்ன மாலிய வானென் றோதும்
பூங்கழ லரக்கன் வந்து பொலங்கழ லிலங்கை
வேந்தைத்
தாங்கிய வமளி மாடோர் தவிசுடைப்
பீடஞ் சார்ந்தான்.

81 இருந்தவன் இலங்கை வேந்த னியற்கையை யெய்த
நோக்கிப்
பொருந்தவந் துற்ற போரிற் றோற்றனன் போலு
மென்ன
வருந்தினை மனமுந் தோளும் வாடினை நாளும்
வாடாப்
பெருந்தவ முடைய வைய வென்னுற்ற பெற்றி
யென்றான்.

80-வது பாட்டு—வாங்கிய வரிவில்லன்ன மூப்பின் யாக்கை மாலியவான் எனக்கூட்டுக. மாலியவான்—இராவணன் தாய்ப் பாட்டன்.

81-வது பாட்டு—நாளும்.........ஐய—என்றுங் குறையாத தவப்பயனையுடைய ஐய. தவம்—தவப்பயனாகிய வரப் பலன்கள்.

இராவணன் இராமனுடைய வில்வீரத்தை வியந்து கூறுதல்.

82 மலையுறப் பெரிய ராய வாளெயிற் றரக்கர் தானை
நிலையுறச் செறிந்த வெள்ள நூற்றிரண் டெனினு நேரே
குலையுறக் குளித்த வாளி குதிரையைக் களிற்றை யாளின்
தலையறப் பட்ட தல்லா லுடல்களிற் றங்கிற் றுண்டோ.

83 போயபி னவன்கை வாளி யுலகெலாம் புகுவ தல்லால்
ஓயுமென் றுரைக்க லாமோ வூழிசென் றாலுமூழித்
தீயையுந் தீய்க்குஞ் செல்லுந் திசையையுஞ் தீய்க்குஞ் சொல்லும்
வாயையுந் தீய்க்கு முன்னின் மனத்தையுந் தீய்க்கு மன்னோ.

84 மேருவை யுருவு மென்றால் விண்கடந் தேகு மென்றால்
பாரினைப் பிளக்கு மென்றால் கடல்களைப் பருகு மென்றால்
ஆருமே யவற்றி னாற்ற லாற்றுமே லநந்த கோடி
மேருவு விண்ணு மண்ணுங் கடல்களும் வேண்டு மன்றே.

82-வது பாட்டு—இராமன் அம்பு குதிரை யானை வீரர் உடல் களிற்றைத்து ஊடுருவிச் சென்றதன்றி உடலிற்றங்கியதில்லை என்றபடி. குலையுற—குலைதலுற.

83-வது பாட்டு—வாயையும் தீய்க்கும் மனத்தையுந்தீய்க்கும் என்றது அவ்வம்பிற்கு மாறாகப் பேசுவோர் வாயும் மனமும் வருந்துவர் என்றபடி.

84-வது பாட்டு—ஆருமே—போதியதாகுமே. மேருவையுருவுதல் முதலியன இராமனம்பின் ஆற்றலுக்குப்போதிய செயலாகா என்றபடி. ஆருமே—ஏகாரம் எதிர்மறை.

85 வரிசிலை நாணிற் கோத்து வாங்குதல் விடுத லொன்றும்
தெரிகில ரமர ரேயும் யாரவன் செய்கை தேர்வார்
பொருசினத் தரக்க ராவி போகிய போக வென்று
கருதிய வுலக மெல்லாஞ் சரங்களாய்க் காட்டு மன்றே.

இலக்குவனை வியந்து கூறுதல்.

86 சீர்த்தவீ ரியரா யுள்ளார் செங்கண்மா லெனினும் யானக்
கார்த்தவீ ரியனை நேர்வா ருளரெனக் கருத லாற்றேன்
பார்த்தபோ தவனு மற்றத் தாபதன் றம்பி பாதத்
தார்த்ததோர் துகளுக் கொவ்வா னரவற் காற்ற கிற்பார்.

இராமனம்பை வியந்து கூறுதல்.

87 முப்புர மொருங்கச் சுட்ட மூரிவெஞ் சிலையும் வீரன்
அற்புத வில்லுக் கைய வம்பெனக் கொள லு மாகா
ஒப்புவே றுரைக்க லாவ தொருபொரு ளில்லை வேதம்
தப்பின போதும் அன்னான் றனுவுமிழ் சரங்க டப்பா.

87-வது பாட்டு—முப்புரமழித்த மேருமலையாகிய வில் இராமன் வில்லுக்கு ஒப்பாகாது. வம்பென—விரோதமாக. பொய்யாத வேதம் பொய்க்குமாயினும் இராமனம்பு குறியிற் சென்று தைத்தலிற்றப்புவதில்லை.

88 உற்பத்தி யயனே யொக்கு மோடும்போ தரியே
யொக்கும்
கற்பத்தி னரனே யொக்கும் பகைஞரைக் கலந்த
காலைச்
சிற்பத்தி னம்மாற் பேசச் சிறியவோ வென்னைத்
தீராத்
தற்பத்தைத் துடைத்த வென்றாற் பிறிதொரு சான்று
முண்டோ.

89 போயினித் தெரிவ தென்னே பொறையினு லுலகம்
போலும்
வேயெனத் தகைய தோளி யிராகவன் மேனி
நோக்கித்
தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுது மன்றே காமனு நாமு மெல்லாம்.

90 வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவா
ளங்கை
ஈசனென் றினைய தன்மை யிளிவரு மிவரா லன்றி
நாசம்வந் துற்ற போது நல்லதோர் பகையைப்
பெற்றேன்
பூசல்வண் டுறையுந் தாராய் இதுவிங்குப் புகுந்த
தென்றான்.

88-வது பாட்டு—கற்பத்தினான்—ஊழி முடிவில் எல்லாவற்றை யுமழிக்கும் நிலையிலுள்ள சிவபெருமான். தற்பம்—செருக்கு. பிறிதொரு சான்றும் உண்டோ—பிறிதொரு சான்றும் வேண்டுமோ என்க.

89-வது பாட்டு—இராமனுக்கு, அழகினால் மன்மதனும் வீரத் தால் நாமும் ஒப்பாதல் இல்லை என்றான். எனவே, தான் அழகிற் சிறந்தவனல்லன் என்பதும், மன்மதன் வீரத்திற் சிறந்தவனல்லன் என்பதும் இராவணன் கருத்தாம்.

திக்குவிசயப் படலம்.

91 வாக்கி னுன்மனத் தான்மழை வண்ணனைப்
போக்கி வேறறி யாதபொற் பாவையை
ஆக்கு வேணியு மானுரி யாடையும்
வீக்கு மாதவ வேடத்தி னுடனே.

92 [1]மய்த வழ்ந்தகார் வண்ணனைக் கண் ணுறச்
செய்த வம்புரி சிந்தையி னுடனைக்
கய்த வமிலாக் கற்புடைக் கன்னியை
எய்த வந்தவி ராவண னேக்கினன்.

93 அன்ன கன்னியை நோக்கி யரக்கர் கோன்
[2]உன்னை நோக்கி யுலகஞ் செய்யுந்தவம்
[3]தன்னை நீசெயத் தக்கதன் றுன்பெயர்
என்னை யார்மக ணீயென் றியம்பலும்.

94 கோதினீதிக் குசத்துவ சன்எனும்
மாத வன்மறை யோதிட மற்றவன்
ஓது வேதத்தி னுற்பவித் தேனையென்
தாதைவேத வதியென்று சாற்றினன்.

95 பேசி வந்தவர் தங்களுக் கென்பிதா
மாசின் மால்வர னுவென் மகளுக்கு
வாசுதேவ னெனவரித் தேனென
ஆசையற்றங் கனைவரும் போயினர்.

---

1 கரு நிறம் பொருந்திய மேகம். கார்-மேகம் என்ற அளவில் நின்றது.

2 உன்னையடைதற்கு உலகம் தவம் செய்யும் என்றபடி.

3 அத்தகைய தவத்தை நீ செய்தல் தக்கதன்று என்றான்.

95-வது பாட்டு—வாசுதேவன் மாசின்மால்வரனுகவென வரித்தேன் எனக் கூட்டுக.

96 சம்பு வென்னும் தயித்தியர் கோன்மனம்
வெம்பி யெல்லி யுறங்கிடும் வேலையில்
எம்பி தாவை வதைத்திட வெம்மனை
உம்பர் வாழ்த்த வுடனெரி மூழ்கினள்.

97 எந்தை யெண்ண முடிக்க வியற்றுமென்
சிந்தை மாதவன் றன்வழிச் செய்கையால்
இந்த மாதவம் பூண்டனென் யானென
[1]அந்த நீசனடாதன கூறினன்.

98 சேயோனை[2] யடைந்தவர் சிந்தையனைத்
[3]தூயோனை யெனுவியை யென்றுணையை
[4]மாயோனை வரித்தனென் யானெனவும்
பேயேறினை போலிவை பேசுதியே.

99 வாடா [5]மலரோன் செருக்கான் மற்றெனைநீ
கூடா தனசொல்லிக் [6]கூசாது தீண்டினையால்
ஏடாவுனக்கு மிலங்கைக்கு முன்கிளைக்கும்
கேடாகத் தோன்றுவே னென்றுள் கிளர்சினத்தாள்.

100 வானோர் மகிழ்ந்து மலர்மா மழைபொழிய
ஏனோர்க ளெல்லா மினிப்பிழைத்தோ மென்றியம்பக்
கானு ரருந்தவத்தோர் கண்டுவியப் பெய்தத்
தேனார் மொழிமடவாள் செந்தழலின் மூழ்கினாள்.

---

1 அடாதன கூறினன் என்றது தனக்கு மனைவியாகுமாறு வேண்டியதை.

2 தன்னைத் தஞ்சமென்றடைந்தவர் சிந்தையின்கண் நீங்கா திருந்து அருள் செய்கின்றவனை.

3 வேண்டுதல் வேண்டாமை யில்லாமையாற்றூயோன் என்றபடி.

4 மாயோன்—ஆச்சரியமான குணஞ் செயல்களையுடையன், கரு நிறமுடையவன்.

5 மலரோன் செருக்கால்—மலரோனிடம் பெற்ற வரங்களால் உண்டான செருக்கால்.

6 பழிபாவங்கட்கஞ்சாது தீண்டினை.

(26) தணிகைப் புராணம்.

களவுப்படலம்.

காட்சி.

1 பூந்தா மரையும்பைங் காவியு முல்லையும்
பூத்தகொக்கும்
தேந்தா துடுக்கு மசோகமுந் தீங்கரும் புந்தழுவிக்
காந்தா ரழற்குண வாஞே னுருக்கொண்டு
காழ்பகையின்
சீந்தா வெமைப்பொரு வான்சென் று பாசறை
நின் றனனே.

ஐயம்.

2 பகுதியினண்ட முடிவிற் சுடர்பர லோகங்கொல்லோ
தகுதியின் வாழுமை மாதுல கோநந் தனியுலகோ
விகுதியில் லாச்சுத்த மாயா புவனத்தொன்
ஞேவிரையப்
புகுதியென் றுள்ளந் துரப்பநின் றீங்கொளிர்
பூங்கொடிக்கே.

துணிவு.

3 தடையா திருப்பி னமதா ருயிர்நனி சாடுமெனப்
படையாண் மதர்விழி பல்காற் றடுப்பன
போலிமைகள்
புடையா டுவவடி தோய்தலிற் பூமகள் போக்கரும்பே
றுடையா ளெனவைகு மாதலிற் பூதலத்
தோரணங்கே.

1வது பாட்டு. பூத்தகொக்கு—மாம்பூ. தாமரை முதலியன தலைவியின் உறுப்புக்கட்கு உவமையாகவந்தன. அழற்கு உணவாஞேன்—மன்மதன். சீந்தா—கோபித்து.

2வது பாட்டு—பகுதியின் அண்ட முடிவில்—மூலப்பகுதியிஞலான அண்டங்கட்கப்பாலுள்ள. விகுதியில்லா—விகாரமில்லாத.

3வது பாட்டு—தடையாதிருப்பின்—தடுக்காதிருப்பின். படையாள்—மன்மதன் படையாக உள்ள தலைவி.

வியப்பு.

4 அங்கலுழ் மேனிநல் லாள்விழி போற
னமக்கணியாம்
பங்கயன் மாலும் பரவும் தணிகைப்பைம்
பூஞ்சுனையில்
செங்கழு நீர்க்கு மரிதுசெவ் வேற்கு மரிதவடன்
பொங்கிளஞ் சாய னிகர்த்தல் பொறிமயிற்
கும்மரிதே.

குறிப்பறிதல்.

5 சிறுகிய வாடி வெயிலிற் றினகரன் றீயுமிழ்ந்தாங்
கிறுகிய வாரிளம் பூண்முலை யேந்திழை
மாதுளத்து
முறுகிய காதல் சிறுகிய நோக்கின் முகிழ்த்தனள்விண்
மறுகிய வாலமுண் டோனருள் போன்ற
வளம்பொழிற்கே.

புணர்ச்சி துணிதல்.

6 வறங்கூர்ந் தவன்கைத் தலத்திமை யார்கை
வழுக்கிவந்து
நிறங்கூ ரமிழ்தம் படிற்பின்பு மாந்த
நினைவதுண்டோ
அறங்கூர் தணிகை வரைக்குவ டேய்க்கு
மலர்முலையைத்
திறங்கூர் கிளையிற் பிரித்தது நாமுன்பு செய்தவமே.

4வது பாட்டு அங்கலுழ்—அழகு ஒழுகுகின்ற. விழிபோறல் செங்கழுநீர்க்கும் செவ்வேற்கும் அரிது என்க.

5வது பாட்டு, முறுகிய காதல்—மிக்க காதல். முகிழ்த்தனள்—தோற்றுவித்தனள்.

6-வது பாட்டு, பின்பு மாந்தநினைவதுண்டோ என்றதனால் அப்பொழுதே தலைவியைக்கூட நினைத்தனன் என்பது கருத்து.

புணர்ச்சி.

7 பொருப்பின் வளர்கொடி புல்லினி தாகலிற் பூரணனும்
விருப்பி னுடலமொற் றித்துநின் ருங்கிவ் விலங்கல்வளர்
அருப்பின் முலைப்பசுங் கொம்பொடொற் றிப்பின லாதமையா
துருப்பின்னி யெங்கு மிலாநல னெய்திய வுள்ளகமே.

தலைவியை மகிழ்தல்.

8 எனதா ருயிர்க்கு முடலே யவளுட லீர்ங்குழலாள்
தனதா ருயிர்க்கு முடலே யெனதுடல் சார்ந்துநின்ற
எனதா ருயிர்க்கு முயிரே யவளுயி ரேந்துகொங்கை
தனதா ருயிர்க்கு முயிரே யெனது தனியுயிரே.

தெய்வத்தை மகிழ்தல்.

9 ஆரா வமுதனை யாளையென் னுருயி ராகிநின்ற
வாரார் முலையைவள் ளிச்சிலம் பூடு மணப்பநல்கும்
சீரார் தணிகைக் குமாரலிங் கேசன் றிருவருளின்
பேரா விரகு மறவே னுலகு பெயரினுமே.

கிளவி வேட்டல்.

10 ஆடிய கூத்தன் முடிமதி வாணுத லைங்கரத்தோன்
பீடியல் கும்பம் பெருமுலை பின்னவன் சென்னிமிலை
தோடியல் காந்த டுணைக்கர மென்னிற்றெுன் மாண்புமைகைக்
கூடிய கிள்ளை குறுந்தொடி யாண்மொழி கேட்பதென்னே.

7-வது பாட்டு, பூரணன்—தலைவனாகிய முருகன். விலங்கல் வளர் அருப்பின்—மலையில்வளர்ந்த கோங்கரும்பு. ஒற்றித்து—ஒன்றுபட்டு.

8-வது பாட்டு, எனதாருயிர்க்கும்—உம்மை தன்னுயிர்க்கு உடலாதலேயன்றி என்னும் பொருள்தருதலின் எச்ச உம்மை.

நயப்புரைத்து அயிர்ப் பொழித்தல்.

11 பண்டே யுளனு முளனும் பிணைந்தவப்
பண்பின்வளர்
கண்டே யனைய மொழிமான் முகத்துக்
கதிர்த்தமிழ்தம்
கொண்டோர் செவிக்கண் முகந்து குமிழின்
மறிவிழியின்
உண்டே மலர்சுனை வாய்வண்டு காண்மெய்
யுரைமின்களே.

பிரிவச்சம்.

12 மணிநீர்க் கயத்து மலரிடை தட்பினும் வார்கழுத்துப்
பிணிநீர் மையிற்சற்று நீங்கினு மூழி பெயர்ந்தனைய
துணிநீர் மகன்றிலிற் றண்டாது காமத் துறைபடியும்
அணிநீர் மையினுயி ரோராங் ககல்கதி லம்புவிக்கே.

பிரிவுணர்த்தல்.

13 இமையார்க் கிறையவன் வீராட்ட காசத்தெம்
மாணிமயத்
துமையாள் கணவன் றணிகைப் பிரானரு
ளாலுவன்றன்
அமையாப் பதம்பெறி னூரிழப் பாரலர் வாழ்க்கை
நல்லார்
தமையா ணினைத்தணப் பேன்கோ றளர்ந்தெற்
றளர்க்கலையே.

11-வது பாட்டு, கதிர்ப்பு — பொலிவு. குமிழின்மறி — குமிழ் போன்ற மூக்கின்கண்வந்து மறிகின்ற.

12-வது பாட்டு, தட்பினும் — தடுப்பினும். தண்டாது — நீங்காது. காமத்துறைபடியும் — காமவின்பம் நுகர்கின்ற.

13-வது பாட்டு, வீராட்டகாசம் — வீரத்தோடுகூடிய பெருநகை. உவன்றன் — அத்தணிகைப்பிரானுடைய. அலர்வாழ்க்கை நல்லார் தமைஆள்நினை — பூமகள் நாமகளாகிய இவர்களை யாளுந் தன்மையுள்ள நின்னை.

பருவரல் நினைத்தல்.

14 தெளிவா னமிழ்த நுகர்ந்து சிறிய விட நுகர்ந்தாங்
களிவார் குழலி மனத்தைப் பிரிசொ லழுங்கல்கண்ட
தொளிவா னவர்த முலகுஞ் சமழ்ப்பவொண் டாதுறைத்துக்
குளிர்வாய் பொதும்பர் குலாயெழில் வாய்ந்தொளிர் குன்றகத்தே.

தெய்வத்தன்மை கூறல்.

15 இந்நாள் வரையு மெனையறிந் தாயில்லை யிந்தமணம்
முன்னா நுதலிற்று முண்டுகொ லோமுறி வாய்ந்த கொம்பர்
அன்னாயவ் வாறறி வானன்று கூட்டிய வக்கடவுள்
பின்னா வெறுப்பினுந் தான்றுணி யாது பிணிப்பிக்குமே.

(27) பாகவதம்.

மருதிடைத்தவழ்ந்த அத்தியாயம்.

1 தண்ணிலா முறுவற் செவ்வாய்த் தரையெனுந் தலைவியோடு
மண்ணினிற் பிறப்ப வென்றோர் வசுவினை மலரோன்கூற
அண்ணலந் திகிரி யான்மே லன்பெமக் களிப்பா யென்னக்
[1]கண்ணுறு நும்மில் வந்து கண்ணனென் றருளினானால்.

14-வது பாட்டு, அளி—வண்டு. பிரிசொல்—முற்பாட்டில் நினைத் தணைப்பேன் கொல் என்றது.

15-வது பாட்டு, நுதலிற்று முண்டுகொல்—கருதியதும் உண்டோ. துணியாது—பிரிக்காமல். பிணிப்பிக்கும்—சேர்ப்பிக்கும்.

1 கண்ணன் நும்மில்வந்து கண்ணுறும் எனக்கூட்டுக.

2 அன்ன வரிவர்மற் றம்பொ னரும்பவிழ் கமலவீட்டு
முன்னவன் மொழிந்தவாறே முறிமிடை படலைப்
பைந்தார்க்
கன்னியத் துளவத்[1]தோன்றல் கண்ணுறக்
கனியுமன்பால்
இன்னிளஞ் செவ்விநோக்கி யெய்தின ரின்ப
மன்னே.

3 [2]வளையின முரலத் திங்கள் வாணுதல் முத்தம் பூப்ப
அளியுண விரிந்த கோதை யவிழ்தர வசோதை
யோர்நாள்
[3]முளிதயிர் கடைந்தகாலை முழங்குநீ ருலகமுண்ட
ஒளிமணி வண்ணனெய்தி யுண்டனன்
முலைமற்றன்றே.

4 பைங்கதிர்க் குழவி யன்னான் படர்முலை
யருந்து மேல்வைப்
பொங்கிய தடுபா லென்று புணர்முலை சொரிந்த
பாலும்
கொங்குலா மலங்கன் மாலைக் கொழுநறுந்[4]தளியுஞ்
சிந்தச்
செங்கடை மழைக்கட் பேதை சென்றன
ளோடி யன்றே.

---

1 தோன்றலைக்காணுதலால் உள்ளங்கசிகின்ற அன்பினால்; தோன்றல் அன்போடு கர்ணுதலாலே கனிந்த அன்பால் என்றுமாம்.

2 கைவளைகளொலிக்க.

3 பால் நன்கு காய்ந்து தோய்ந்த தயிர்.

4 தளி—துளி.

5 [1]எறித்தவெண் டிங்க ளூறு மின்றளி யமுத மென்னத்
தெறித்தவெண் டயிர்நுண் புள்ளி திருமுகஞ் சிறப்ப நின்ற
[2]உறைப்பசுங் கொண்ட லன்ன னுடைத்தனன்[3]றட வுத்தாழி
மறைத்தனள் வைத்த வெண்ணெய் வாரின னோடி னானல்.

6 மழைக்கருங் கண்ணி நோக்கி மழையிருங் கூந்தருழக்
குழைத்ததோர் வல்லியென்னக் குழைந்தநுண் மருங்கு நோவப்
[4]பழுத்தநான் மறையி னோடு படுபொரு ளொருங்கு தேர்ந்த
விழுத்தவர் தொடர வெட்டா[5]விமலனைத் தொடர்ந்து சென்றாள்.

7 தளிர்க்கவி னழித்த பொற்றாட் டாமரை சிவப்ப வோடி
இளைத்தன ளன்னை யென்னா விளங்கதிர்ப் பரிதி நாணக்
கிளைத்தொளி தவழும் பைம்பொற் கிண்கிணி சிலம்ப வோடும்
களிற்றிளங் குழவி யன்னான் கையகப் பட்டு நின்றான்.

---

1 கண்ணன் முகத்தில் தெறித்த தயிர்த்துளிகள் திங்களினிடத்துத்தோன்றிய அமுதத்துளிகள் போலுள்ளன என்றபடி.
2 துளியையுடைய பசியமேகத்தை யொத்தவன்
3 பெரியதாழி.
4 முதிர்ந்த (பொருளாற்சிறந்த) நான்மறைகளையும் அவற்றின் உண்மைப் பொருள்களையுமுணர்ந்த.
5 விமலன்—தூய்மையுடையன்.

8 தளையவிழ் முளரியன்ன தாட்டுணை நினைவோர்க்

கெல்லாம்

[1]விளைதரு வினையின்கட்டு வீட்டுபைந் துளவினானைக்

களியிருஞ் சுரும்பர் மூசு கார்ந்தண்மென்

[2]முகுளமன்ன

ஒளிவளைக் கரத்தா லன்னை யுரலொடு

பிணிக்கலுற்றாள்.

9 அணைந்து வெண்மதி தொடுநெடுங் கிரியென

வண்ணந்

திணைந்து விம்மிய வேந்திள வனமுலை சுமந்து

வணங்கு நுண்ணிடை மயிலியல் வயின்வயி னோடிக்

கொணர்ந்து கட்டிய கயிறெலா மிருவிரல் குறைந்த.

10 வீக்கி வீக்கித்தன் விரைகமழ் தாமரைச் செங்கை

சேக்க வங்கதிர்த் திங்களஞ் சிறுநுதல் வியர்ப்ப

[3]மாக்கண் வெம்முலை மடவரல் வருந்துத னோக்கி

[4]யாக்கப் பட்டன னெங்கணு நிறைந்தவவ்

விறைவன்.

8-ம் செய்யுள்—தன் தாளை நினையும் அடியாருடைய இருவினைகளாகிய பாசத்தைப் போக்குபவனாகிய கண்ணனை யசோதை கட்டலுற்றாள்.

1 மேன்மேலும் பெருகுகின்ற வினையாகிய கட்டு.

2 அரும்பு.

3 கரியகண்.

4 அவள் கட்டுமாறு தன்னையமைத்துக் கொண்டனன். "கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்" என்பது காண்க. எங்ஙனும் நிறைந்த இறைவன் அன்பினால் யாக்கப்பட்டனன் என்றபடி.

11 இருநி திக்கிறை காதல ரெரிபொன்வார்ந் தன்ன
புரிந ரம்புளர் நாரதன் புகன்றசா பத்தால்
மருது ருக்கொடு நின்றமை நோக்கினன் மலர்ந்து
கருணை மாமழை [1]யசும்பெழு தாமரைக் கண்ணன்.

12 எனலு மன்னவ னென்னைகொ விளநரு வொழுகி
அணைய தீந்தொடை யாழ்முனி யறைதரு சாபம்
[2]தனதன் காதல ருற்றது சாற்றுவா யென்ன
[3]வினைமுருக்கிய மெய்த்தவன் விளம்பலுற் றனனால்.

13 நந்தாத வென்றி நளகூ பரனுன்று தேன்சோர்
மந்தார மாலை புனைமார்பன் மணிக்கிரீவன்
செந்தா மரைமேல் திருவிற் றிகழ்மாத ரோடும்
அந்தா துயிர்க்கு மலர்ப்பூம் புனலாடு வாரால்.

14 விரைநாறு [4]தேறன் மதுமாந்தி[5]மென்றூசு நீங்கி
அரமாத ரோடு களியாற் புனலாட னோக்கி
[6]மரனுக வென்று சபித்தான் மலர்வா யவிழ்ந்து
சொரிதேற லென்னச் சொரி[7]யாழிசைச் சூழ்ச்சி
மிக்கோன்.

---

1 துளி.

2 குபேரன் புதல்வர்.

3 இருவினைகளையும் போக்கிய மெய்த்தவன்.

4 தேனுற் செய்த மது.

5 மெல்லிய ஆடைகளை நீக்கி எனக்கொள்க; நீங்க என்றும் திரிக்கலாம்.

6 மலர்வாயவிழ்ந்து (திறந்து) சபித்தான் என்று கூட்டுக; அன்றி மலர்வாயவிழ்ந்து சொரிதேறல் எனமேல் இயைப்பினுமாம்.

7 யாழிசைத் தேர்ச்சியாற் சிறந்தோன்.

15 உயர்தெய்வ யாண்டி னொருநூறு நின்[1]றொற்றை யாழிப்
புயல்வண்ணன் றன்னை யடைவுற் றழிப்போவ தாகச்
செயிர்மன்னு சாப மெனச்செப் பினன்[2]செப்பு மாறு
[3]வெயின்மன்னு செக்கர் மணிமார்பன் விலக்க லுற்றான்.

16 தழைதவழ்ந்தபூந் தாதவிழ் தாழிருங் கூந்தற்
குழைதவழ்ந்தகட் டேவகி பச்சிளங் குழவி
இழைதவழ்ந்தபே ரொளிக்கதிர் மின்னென விமைப்ப
[4]மழைதவழ்ந்தென மருதிடைத் தவழ்ந்தனன் மன்னே.

17 உரலொ டுந்தனித் தவழ்தர[5]வுயர்வெளி யளந்த
விரித டஞ்சினை[6]புணர்மரு தொசிந்து வேர்பறியா
வரைவி ழுந்தென வீழ்ந்தவம் மருதுரு வெடுத்தோர்
பரவி யேகினர் பசுந்துழாய்ப் பரனடி பணிந்தே.

18 [7]அசனி வீழ்ந்ததென் றுயிச்சிய[8]ரால்வயி றதுக்கி
[8]நொசிம ருங்கிற நொய்தின்வந் தீண்டினர் நோக்கிப்
[9]பசிய மாமுகில் வண்ணத்த னுரலொடும் படர
ஓசித லுற்றுவீழ்ந் தனவெனத் தெளிந்தன ருள்ளம்.

---

1 ஒற்றைச் சக்கரமாகிய ஆயுதத்தையுடைய.
2 செப்பியவாறு எனக்கொள்க.
3 ஒளி பொருந்திய சிவந்த கௌஸ்துபமணியணிந்த மார்பையுடைய கண்ணன்; இப்போது அணியப்பட்ட மணிமார்பன் என்றுமாம்.
4 மேகம் பூமியில் வந்து தவழ்ந்து சென்றாற்போல.
5 ஆகாயம் முழுதும் பரவியுள்ள.
6 ஒன்றோடொன்று நெருங்கியுள்ள மருதமரங்கள்.
7 இடி.
8 ஆலிலை போன்ற வயிறு.
8 நுண்ணிய மருங்கு இற.
9 குளிர்ந்த கரிய முகில் போன்ற கண்ணன்.

19 அண்ண னந்தகோ னறிந்தனன்[1]கைம்முகிழ்த்
தறியான்
வெண்ணெ யுண்டபைம் புயல்பிணிப் பவிழ்த்தனன்
விருப்பால்
தண்ணந்தாமரைத் தடக்கையாற் றழீஇயினன்
செய்ய
[2]கண்ணிறைந்தனன் படுபுனல் களித்தனன் நெஞ்சம்.

20 மழைத்த கார்முகில் கொழுந்தனுன்[3]மணிநிற
விசும்பு
கிழித்த மின்னெனக் கீற்றிளம் பிறைநுத லுரோணி
தழைத்த காதலிற் றளிரடி சிவப்புற நடந்தாங்
கழைப்ப வந்தில னுடின னுற் [4]றடை கரையில்.

21 கண்ண தாமரைக் கண்ண[5]நின் பிறந்தநா ளின்முல்
அண்ண லானின மந்தணர்க் குதவுவா னடைக
[6]உண்ணி லாவிளை யாடலே யுவத்திகொ லென்னு
வண்ண வார்குழ லசோதைசென் றழைத்தனள்
வந்தான்.

---

1 பிறரைக் கும்பிட்டறியாதவனுகிய வெண்ணெயுண்ட பைம் புயல் போன்ற கண்ணன் என்க.

2 கண்களிலிருந்து உவகைக் கண்ணீர் சொரிந்தனன்.

3 விசும்பு கிழித்த மின்னென உரோணி நடந்து அழைப்ப எனக் கூட்டு. விசும்பு கிழித்துத் தோன்றிய மின். உரோணி—உரோகிணி.

4 ஆற்றங்கரையில்.

5 கண்ணன் பிறந்த நாள் உரோகிணி.

6 உன் உள்ளத்தில் நிலை பெற்றுள்ள விளையாட்டையே எப்போதும் விரும்பிச்செய்கின்றுய் போலும்.

22 தோடு வாயவிழ் தூமலர்[1]கற்பகங் கொணரக்
[2]கோடு வாய்வைக்குங் கொற்றவன் கூத்தெனைப்
புகல்வேன்
பாடல் வாயிளம் பூவையிற் பாவையர் பாடி
ஆடு வாயெனச் சீறடி சேப்பநின் ருடும்.

23 ஊறு பற்பல வுற்றவிவ் வுழையகன் றொருபால்
சேறு நாமெனத் தேங்கொள்பூந் தொடையுப நந்தன்
கூற நந்தகோன் கோற்றொடி மாதர்முன் செல்ல
ஏறு போல்வளர் குழவிக டம்மொடு மெழுந்தான்.

(28) வில்லிபாரதம்.

உத்தியோகபருவம்.

கிருஷ்ணன் தூதுச்சருக்கம்.

1 நகுலனிவை யுரைத்ததற்பின் நன்றெனக்கை
யமைத்தருளி நகுலன் சொல்லும்
மிகல்விசயன் றன்மொழியுந் திறல்வீம
னியம்பியதும் யாவும் கேட்டோம்
புகலரிய வுணர்வுடையோய் புகழுடையோய்
திறலுடையோய் புகனீ யென்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு மனமுருக
மொழிகின்ருனே.

---

1 கற்பகம் என்றது ஈண்டுப் பாரிசாதமரத்தை. சத்திய பாமைக்காகப் பாரிசாத மரத்தைக்கொண்டுவந்த வரலாறு.

2 போருக்குவந்த அமரர் மயங்கிவீழுமாறு சங்கை வாயில் வைத்தூதும்.

1-வது பாட்டு—நகுலனிவை உரைத்ததற்பின்—தூது போதலாற் பயனில்லை, போர் தொடங்கவேண்டும் என்று நகுலன் தன் கருத்தைக் கூறியபின். சகாதேவன் ஏனையோரினும் தத்துவ ஞானம் மிக்கவனாதலின் கண்ணன் அவனைப் "புகலரிய....... திறலுடையோய்" எனப் பலபடியாகப் புகழ்ந்து கூறினன்.

2 சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென் னொழிந்தாலென்
செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென் வழங்கி னாலென்
கொந்துற்ற குழலிவளு முடித்தாலென்
விரித்தாலென் குறித்த செய்கை
யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத் தெரியுமோ
வாதி மூர்த்தி.

3 முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே யன்றலகை
முலைப்பா லுண்டு
மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே
யொருவருக்குந் தெரியாதிங் குன்மாயை யானறிவே
னுண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங்
கருத்தென்றான் தெய்வ மன்னான்.

4 இவ்வண்ணஞ் சாதேவ னியம்புதலு நகைத்தருளி
யிகலோர் சொன்ன
வவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தா னிவனென்ன
வவனோ டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப் பாரதப்போர்
பயிலா வண்ண
முய்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயமெனத்
தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான்.

3-வது பாட்டு—பூபாரந் தீர்த்தல் கண்ணன் கருத்து என்பதைச் சகாதேவன் அறிவானாதலின், திருவுளத்துக் கருத்தெதுவோ. அது எனக்குங் கருத்து என்றான்.

4-வது பாட்டு—இகலோர்—வன்மையுடைய வீமன் முதலியோர்.

5 நீபா ரதவமரில் யாவரையு நீருக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்ருர்கொல் வல்லாரே.

6 பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன்
கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபா ரதமென்ருன்.

7 முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலு
மென்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாய
னுன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யானென்ருன்.

8 மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
ருய வடிவு பதினுரு யிரங்கொண்டான்
றூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன்கருத்தி ஞற்பிணித்தான்.

5-வது பாட்டு—நீ பூபாரந்தீர்க்க விரும்பியுள்ளனையாதலின், பாரதப்போர் நடவாமல் தடுக்க வல்லார் நீயன்றி ஒருவரு மிலர் என்ருன்.

6-வது பாட்டு—இகல்பார்த்தன்—கன்னனேடு பகைமைபூண்ட அருச்சுனன். அணங்கு—திரௌபதி. நின்னையும் காலிற் றளைபூட்டி நேராகக் கைப்பிடித்துக் கட்டுவனேல் எனக் கூட்டுக.

7-வது பாட்டு—உன்னை நீதானும் உணராய்—உன் தன்மை முழுதும் நீ உணராய். (அன்பர்க்கெளியனுகிய உன் தன்மையை முழுதும் நீ உணராய் என்றபடி.)

8-வது பாட்டு—மூலமாந் தோற்றம்—எல்லாவுயிர்க்குள்ளும் உயிராய்க் கரந்து நிற்கும் (அந்தரியாமியாம்) தன்மை. கருத் திஞற் பிணித்தான்—அன்பாற் கட்டினுன்.

9 நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றனேக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்முன்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவ ருந்தேடிக் காணு மலரடியோன்.

10 அன்பாலின் றென்னே யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னே யினிவிடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையு
நின்பார்வை யாற்காக்க வேண்டு நெடுமாலே.

11 என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்முன்.

12 ஆண்டிருந்த வவைநீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கள் முன்னெய்திப் பழுதில்புகழ்ப்
பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றுளே முகநோக்கி
யீண்டவரி லிளேயோனுஞ் சந்துமிக வினி
தென்முன்.

10-வது பாட்டு — என்பாதந் தன்னே யினி விடுக என்றது, அன்பர்க்கெளியனுதலின் அவர்கள் கட்டிய கட்டைத்தான் நீக்கிக்கொள்ள நினேயாமையால்.

11-வது பாட்டு—ஓமென்றுரைத்தருளி—சகாதேவன் கேட்டபடி போரில் ஐவரையும் காப்பதாக உரைத்தருளி.

12-வது பாட்டு—அறிவுடையோரிருவரும்—முற்றறிவனுகிய கண்ணனும் அவனே முதற்பொருள் என்றறிந்த சகாதேவனும். பழுதில் புகழ்ப்பாஞ்சாலி—குற்றமற்ற (கற்பினுலும் கண்ணனிடத்துக் கொண்ட பக்திமிகுதியினுலும்) புகழையுடைய திரௌபதி.

13 தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாம
லிருநில்த்தி லுடன்வாழ்த லெனக்குநினை
வென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாண்
மின்னனையாள்.

14 சாலக் கனகன் றனிமைந் தனைமுனிந்த
காலத் தவனறைந்த கற்றூ ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன் முன்னின்ற நெடுமாலே.

15 கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்
தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே.

16 மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா
னென்றழுதாள்.

13-வது பாட்டு—மலர்மறந்த குழல்—காடு சென்றது முதல் சபதங் காரணமாகக் கூந்தல் முடியாமையால் மலர் சூடப்பெறாத கூந்தல்.

14-வது பாட்டு—மூலப்பேரிட்டழைத்த—ஆதிமூலமே யெனப் பெயரிட்டழைத்த.

15-வது பாட்டு—கண்ணிலான் பெற்றெடுத்தோன்—ஈண்டுத் துச்சாதனன்; கண்ணிலான் மகனாதலின் இவனும் அறிவுக் கண்ணிலனாயினன் என்பது குறிப்பு.

17 தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த ஞனே முடிக்கின்றே
னெல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே.

18 மைக்குழலாய் கேளாய் மருவா ருடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமு
மிக்குழலுஞ் சேர முடியா திரானென்ருன்.

19 துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தர் கல்லா தவரிளையோ
ரொன்று முறைமை யுணரா தவர்மகளி
ரென்றுமிவர் மந்தணத்தி னெய்தப் பெருதாரே.

20 என்னைக் கழறி யிருந்தோ ருரைதவிர்த்து
நின்னைப் பவரில்லாய் நீயே தெனவுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பால் மாயோனுந் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான்

17-வது பாட்டு—"தொல்லாண்மை..........முடிக்கின்றேன்" என்றதனல், யான் தூதுபோதல் நிகழும்; ஆனல் துரியோதனன் உடன்படான்; அதனல் போர்நிகழ்தலும், பாண்டவர் வெற்றிபெறுதலும், நின்கூந்தல் முடித்தலும் நிச்சயம் எனக் கண்ணன் தன் எண்ணத்தைத் திரௌபதிக்குக் கூறினன் எனக் கொள்க.

18-வது பாட்டு—பகைவருடைய உடலாகிய விளைநிலத்துப்புக்கு உழுதல் பொருந்திய கொழுவாகிய வாளையுடைய அபிமன்னன் பகைவர் குலத்தையும் உன்கூந்தலையும் முடிப்பான் என்றபடி. பகைவர் குலம் முடித்தல்—அழித்தல்.

19-வது பாட்டு—கன்றுசினம்—நிலைத்தவெகுளி. மந்தணம்—ஆலோசனை. இவர் என்றும் மந்தணத்தினெய்தப் பெருதார் எனக்கூட்டுக.

(29) வசவபுராணம்.

உபதேசச் சருக்கம்.

1 அங்கண்வச வேசரணை கின்றமை யறிந்தே
சங்கரன தப்பதி தருக்குதவ ரெல்லா
நங்கடுய ரிங்கறந டந்ததரி தென்றூர்
துங்கநகர் வாழைகொடி தோரண நிரைத்தார்.

2 வந்துநக ரெய்துவச வேசரெதிர் சென்றே
யெந்தமிடர் தீரவரு வீர்சரண மென்றூர்
சிந்தைமகி ழும்படி திருந்துதுதி செய்தார்
நந்திக ளவர்க்குற நயந்துசர ணென்னு.

3 அன்னநக ரந்தனை யடிக்கடி பணிந்தே
மன்னுதிரு வீதியை வலங்கொடு வணங்காச்
சொன்னகிரி யன்னசிக ரந்தொழு திறைஞ்சிக்
கொன்னணையு மெந்தையுறை கோயிலுறு போதில்.

4 மைந்தர்வரு கின்றமை மகிழ்ந்துமக தேவர்
முந்தைவரு தேசிக முகுர்த்தமது கொண்டே
யந்தவச வேசர்விழி யாரவெதிர் நின்றூர்
வந்துகுரு தக்கணை தனைக்கசிவில் வைத்தார்.

1-வது பாட்டு—நந்தியாரின் அவதாரமாகிய வசவேசர் கங்காம்பையாரைத் திருமணமுடித்தபின், மனைவி கங்காம்பையாரோடும், தங்கை நாகாம்பையாரோடும் சிவபெருமானிடம் உபதேசம்பெறுதற்குக் கூடலசங்கமேசுவரத்திற்குச் சென்றபோது, அந்நகரத்திருந்த வீரமாகேசுவரர்கள் (சிவனடியார்கள்) மகிழ்ந்து நகரை யலங்கரித்தனர். தருக்குதவர்—சிவபக்தியில் இறுமாந்திருக்கும் அடியார்.

2-வது பாட்டு—நந்திகள்—வசவேசர்.

3-வது பாட்டு—அன்னநகர்—கூடலசங்கமேசுவரம். அடிக்கடி பணிந்து—சேய்மையிற்கண்டதிலிருந்து பன்முறைபணிந்து. சொன்னகிரி—பொன்மலை. கொன் அணையும் — பெருமை பொருந்திய.

4-வது பாட்டு—மைந்தர்—வசவேசர். மகதேவர் — சிவபெருமான். தேசிக முகுர்த்தம்—ஆசாரிய உருவம்.

5 மற்றுமடி யற்றமர மென்னமன நைந்தே
பற்றுமிகு நண்பொடு பணிந்துதரை நின்று
தெற்றெனவெ மூரரையரு டேசிகர் கரத்தா
லுற்றபெரு நண்பினுத லொற்றியெழு கென்றூர்.

6 எழுந்துவிழி நீர்விழ விரண்டுகர முந்தஞ்
செழுஞ்சிர மிசைக்குவிய வேதெளியு மன்பி
னழுந்தினர் மகிழ்ச்சியெனு மாவிதரு நீராற்
றெழுங்குரு மலர்க்கழல் விளக்கினர் துதித்தார்.

7 நேசமுட னேயருகி ருத்திநிக ரில்லாத்
தேசவுப தேசவகை செவ்வியின ளிப்பா
ராசிலெதிர் காலமு மருந்தவரை நம்போற்
பூசனைசெய் வாய்நினது புந்திமகி ழன்பால்.

8 அத்தவர்க டம்மைநர ராகுமென வுன்னு
துத்தமநி ருத்தனென வுன்னியவர் செய்யு
மெய்த்தவம னைத்தினையு மிக்கநல மென்பாய்
குத்திவையி னஞ்சலிசெய் கூறினிய சொல்லே.

5-வது பாட்டு—நுதல் ஒற்றி—நுதலைத்தொட்டு.

6-வது பாட்டு—தெளியும் அன்பின்—தெளிந்த அன்பில். மகிழ்ச்சியெனும் ஆவிதருநீரால்—மகிழ்ச்சியென்னும் தடாகம் தந்த நீரினால்.

7-வது பாட்டு—தேசம்—குருகட்டளையாகிய, உபதேசவகை—உபதேசமுறைகளை. எதிர்காலமும்—எக்காலத்திலும் என்றபடி. அருந்தவர்—அரிய அடியார்கள்.

8-வது பாட்டு—உத்தம—உத்தமனனவசவண்ணனே. (வசவனே) நிருத்தன்—சிவபெருமான். குத்திவையின் அஞ்சலிசெய்—அவர்கள்குத்தினும் வைதாலும் அவர்களைக் கும்பிடக்கடவை.

9 மேதகுத வத்தர்குல மேன்மைசிறி தென்றங்
கோதுதன் மனத்தினிடை யுன்னுத லொழிப்பாய்
பேர்தவுட லுக்கிறுதி புக்குகினு நெஞ்சி
னீதிதரு நின்விரத நெக்குறவி டாதே.

10 வண்டவரை நிந்தனைசெய் வாயினர்சி ரத்தைத்
துண்டியர னூல்விதிது லங்குலகில் வைப்பாய்
மண்டுசிவ பத்தியினில் வஞ்சனையொ ழிப்பா
யுண்டிதுவ தில்லையென வுன்னிநசை கொள்ளேல்.

11 அன்னியர்ம டந்தையரை யன்பினினை யாதே
யன்னியர்த னத்துமன மற்பமு முறாதே
யன்னியர்சு கத்துமன மாதிகள்வி டாதே
யன்னியரை நிந்தனைய யர்ந்துமுரை யாதே

12 பத்தசன மெய்திடி லெழுந்துபரி வாலே
யத்தமிக வஞ்சலிசெய் தன்பொடுது திப்பாய்
யித்தரையி னின்பரிவெ னுந்தமணி யத்திற்
கொத்தவுரை கல்லெமது ருச்செறித வத்தோர்.

9-வது பாட்டு, போத—மிகுதியாக. புக்குகினும்—புகினும்.

10-வது பாட்டு, வண்தவரை—சிறந்தபக்தியாகிய தவத்தையுடைய அடியாரை. அரன்நூல்விதி — சிவாகமவிதி. வஞ்சனை—குறைவு.

11-வதுபாட்டு, அன்பின்—காமமாகிய அன்போடு. மனமாதிகள்—மனம்வாக்குகாயம். அயர்ந்தும்—மறந்தும்.

12-வது பாட்டு, பத்தசனம்—பக்தர்கள். "நின்பரிவெனும்.... தவத்தோர்"—நின் அன்பு என்னும் பொன்னுக்கு எமது உருவத்தையுடைய அடியார்களே உரைகல்லாவர். எம் அடியாரிடத்து நீ செலுத்தும் அன்பினாலேயே நீ மேன்மையடைவை என்பது கருத்து.

13 அப்பொழுது நின்னினைவி னன்புநிலை குன்று
தொப்பநட வுன்மனமு றும்பிரிய மெல்லாந்
தப்பறவ ளித்துமிது சத்தியந மைத்தா
னெப்பொழுது நீபிரிவி லாயஃதி யாமும்.

14 என்றினிமை சேர்மதுர வாய்மைக ளியம்பா
நன்றிருக ரத்துடல நண்ணிடவ ணைத்தே
நின்றுபணி நந்தியென நீடுபணி வார்முன்
முன்றனது மேனிகொடு முத்தனுமி ருந்தான்.

15 ஐயர்சிவ லிங்கமய மானதை யறிந்தே
வெய்யவர லாதவச வேசுரர்வி ருப்பா
லுய்யவுப தேசவகை யுண்மையை யுணர்ந்தார்
செய்யதிரு மேனியொடு சிக்குமுள ரானார்.

16 உற்றசிவ பத்தர்முனி வோருளம கிழ்ந்தா
ரிற்றைநல மேதவமெ மக்குவச வேசர்
நெற்றிவிழி யாரெனநி கழ்த்தியெதிர் நின்றார்
கொற்றவிடை யாரைவிழி கொண்டுதரி சித்தார்.

13-வது பாட்டு, நீ அடியாரிடத்து மிக்க அன்புடையையாக விருக்கும்போது. அஃதியாமும் — யாமும் அவ்வாறே (நாமும் உன்னைப்பிரியாதிருப்போம் என்றபடி).

14-வது பாட்டு, முன்தனது மேனிகொடு—தனது முன்னுருவாகிய சிவலிங்க உருவோடு.

15-வது பாட்டு, செய்யதிருமேனியொடுசிக்கும் உளரானார்—சிவந்த திருமேனியோடு, சிவபெருமான் அகப்படும் திருவுள்ளத்தையுடையராயினார்.

16-வது பாட்டு, வசவேசர் நெற்றிவிழியார் எனநிகழ்த்தி—வசவேசர் சிவபெருமானேயாவர் என்று கூறி. கொற்றவிடையாரை விழிகொண்டு தெரிசித்தார் — சிவபெருமானைத் தம் கண்கொண்டு கண்டனர்.

17 இந்தவச வேசரிறை வற்கிணைய ராமா
மந்தவ் வுருக்கொடரு குற்றருளு ரைத்தே
புந்திமகி ழும்படி புறந்தடவி மற்றுந்
தந்தரும மெய்யொடு தழீஇயினர் தருக்கால்.

18 அண்ணலரு ளிப்படிய ணைந்தவரி லென்பார்
மண்ணிலிவர் வந்ததும காபுதுமை யென்பார்
நண்ணியெழு நந்துயர்ந சிக்கவல ரென்பா
ரெண்ணிவச வேசவென வெய்துநல மென்பார்.

19 ஆகமகி ழும்பொழுதி லங்கண்வச வேசர்
மோகமொ டெழுந்துகுரு முன்பணிதல் செய்தே
வாகணையு மண்டபம தொன்றினிடை வந்தார்
நாகபணி யற்கினிய நல்லரோ டிருந்தார்.

20 அன்றுமக பூசைக ளமைத்தளவி லன்பாற்
சென்றுதிரி போதுமுயர் தேசிகர்ப தத்தே
துன்றியவி ருப்பொடுப ணிந்துதுதி செய்தா
ரென்றுமிவ ணின்றகலொ ணுதெனவி ருந்தார்.

17-வது பாட்டு, ஆம் ஆம்—ஆகும் ஆகும். அடுக்குத் துணிவுப் பொருள்.

18-வது பாட்டு, எண்ணிவசவேசஎன—சிந்திந்து ஒருமுறை வச வேச என்றுகூற, நலம் எய்தும் — விரும்பிய நலமெல்லாம் உண்டாகும்.

19-வது பாட்டு, வாகு அணையும் — அழகுபொருந்திய. நாக பணியற்கு இனிய அன்பர்—சிவபெருமானுக்கு இனியரான அன்பர்கள்.

20-வது பாட்டு, மகபூசைகள் — மகேசுவரபூசைகள். (மகேசு வரர்—அடியார்.)

(30) யசோதரகாவியம்.

நான்காவது சருக்கம்.

1 வடிநுனைப் பகழி யானு மலரடி வணங்கி வாழ்த்தி
யடிகணீ ரடங்கி மெய்யி லருள்புரி மனத்த ராகி
நெடிதுட னிருந்து நெஞ்சில் நினைவதோர் நினைவு தன்னுன்
முடிபொரு டானு மென்கொல் மொழிந்தருள் செய்க வென்றான்.

2 ஆரருள் புரிந்த நெஞ்சி னம்முனி யவனை நோக்கிச்
சீரருள் பெருகும் பான்மைத் திறத்தனே போலு மென்றே
பேரறி வாகித் தம்மிற் பிறழ்விலா வுயிரை யன்றே
கூரறி வுடைய நீரார் குறிப்பது மனத்தி னாலே.

3 அனந்தமா மறிவு காட்சி யருவலி போக மாதி
நினைந்தவெண் குணங்க ளோடு நிருமல நித்த மாகிச்
சினஞ்செறு வாதி யின்றித் திரிவித வுலகத் துச்சி
யனந்தகா லத்து நிற்ற லப்பொருட் டன்மை யென்றான்.

1-வது பாட்டு, வடிநுனைப் பகழியான்—சண்டகருமன்; இவன் ஔதேய நாட்டு இராசபுரத்தில் அரசாண்ட அரசன் யசோமதி என்பவனுடைய வேலைக்காரன்; அரசன் சோலையில் விளையாடிக் கொண்டிருந்தபோது காவல்புரிந்து நின்றனன். அடிகள்—அச்சோலையின் ஓர்பால் வந்து தங்கியிருந்த முனிவர் அகம்பனர் என்பவர். சண்டகருமன் முனிவர் தியானத்திலிருப்பதைக்கண்டு அவர் விழித்தவுடன் தாங்கள் நினைக்கும் பொருள் யாது? அதன் பயன் என்ன என்று வினவினன்.

2-வது பாட்டு, சீரருள்......போலுமென்று—இவன் இறைவன் அருள் பெறுதற்குரியன் போலும் என்று கருதி. பேரறிவாகித்தம்மிற் பிறழ்விலா உயிர்—மான்மா.

3-வது பாட்டு, நிருமலம்—தூய்மை. நித்தம்—அழிவின்மை.

4 கருமனு மிறைவ கேளாய் களவுசெய் தோர்கடம்மை
யிருபிள் வாகச் செய்வ னெம்மர சருளி ஞலே
யொருவழி யாலுஞ் சீவ னுண்டெனக் கண்ட தில்லே
பெரியதோர் சோரன் றன்னைப் பின்னமாச் சேதித்
திட்டும்.

5 மற்ருெரு கள்வன் றன்னை வதைசெய்வ முன்னும்
பின்னு
மிற்றென நிறைசெய் திட்டு மிறைவனே பேதங்
காணே
னுற்றதோர் குழியின் மூடி யொருவனைச் சிலநாள்
வைத்து
மற்றவ னுயிர்போ யிட்ட வழியொன்றுங் கண்டி
லேனே.

6 பையவே காட்டந் தன்னைப் பலபின்னஞ் செய்திட்
டன்று
வெய்யரி கண்ட துண்டோ விறகொடு விறகை யூன்ற
வையனே யங்கி தோன்றி யதனையு மெரிய லுற்ற
திவ்வகை காண லாகு மென்றுநீ யுணர வேண்டும்.

4-வது பாட்டு, கருமன்—சண்டகருமன். அரசன் அருளினல்—அரசன் ஆணையால். ஒரு வழியாலும்—உடம்பினுள் எவ்விடத்தும்.

5-வது பாட்டு, "மற்ருெரு கள்வன்.........பேதங்காணேன்"—கள்வனைக் கொல்வதற்கு முன்னும் பின்னும் நிறைசெய்து பார்த்தும் வேறுபாடு காணப்பட்டிலது; அங்ஙனமாக உயிர் ஒன்று உண்டு என்று எங்ஙனங்கொள்வது என்பது கருத்து,

6-வது பாட்டு, காட்டம்—விறகு, விறகைப் பிளந்தால் அதிலுள்ள தீ காணப்படுவதில்லே; ஒன்ருேடொன்று தேய்த்தால் தீ காணப்படும் இவ்வாறு உயிருண்டு என்று உய்த்துணர்தல் வேண்டுமென்ருர் முனிவர்.

7 சிக்கென வாயு வேற்றித் தித்திவாய்ச் செம்மித்
தூக்கிப்
புக்கவவ் வாயு நீங்கிப் போயபின் னிறைசெய் தாலு
மொக்குமே யொருவன் சங்கோ டொருநில மாளி
கைக்கே
திக்கெனத் தொனிசெய் திட்ட தெவ்வழி வந்த
தாகும்.

8 இவ்வகை யாகுஞ் சீவ னியல்புதா னியல்பு வேறும்
வெய்யதீ வினைக ளாலே வெருவுறு துயரின் மூழ்கி
மையலுற் றழுந்தி நான்கு கதிகளுட் கெழுமிச்
செல்வ
ரையமில் காட்சி ஞானத் தொழுக்கத்தோ ரறிவ
தாகும்.

9 அற்றமி லறிவு காட்சி யருந்தகை யொழுக்க
மூன்றும்
பெற்றனர் புரிந்து பேணிப் பெருங்குணத் தொழுகு
வாருக்
குற்றிடு மும்ப ரின்ப முலகிதற் கிறைமை தானு
முற்றமுன் னுரைத்த பேறும் வந்துறு முறைமை
யென்றான்.

7-வது பாட்டு, தித்தி—துருத்தி. செம்மி—மூடி. சங்கோடு—சங்கினல்.

8-வது பாட்டு, இவ்வகையாகுஞ் சீவனியல்பு—என்றது சீவனைக் கண்ணாற் காண்டல் இயலாது; குறிகளால் உய்த்துணர்தல் இயலும் என்றபடி. இயல்பு வேறும்—சீவன் இயல்பு உடல் இயல்பினும் வேறும் என்றபடி.

9-வது பாட்டு, அற்றமில் அறிவு—குற்றமில்லாத அறிவு; ஐயந் திரிபில்லாத அறிவு என்றபடி. பெற்றனராய் ஒழுகுவாருக்கு எனக் கூட்டுக.

10 உறுபொரு ணிலைமை தன்னை யுற்றுணர் வறிவ தாகும்
அறிபொரு ளதனிற் றூய்மை யகத்தெழு தெளிவு காட்சி
தறுமலர்ப் பிண்டி நாத னல்லறப் பெருமை தன்மே
லிறுகிய மகிழ்ச்சி கண்டா யிதனது பிரிவு மென்றான்.

11 பெருகிய கொலையும் பொய்யுங் களவொடு பிறர்ம னைக்கட்
டெரிவிலாச் செலவு சிந்தை பொருள்வயிற் றிருகு பற்றி
மருவிய மனத்து மீட்சி வதமிவை யைந்தோ டொன்றி
யொருவின புலைசு தேன்கள் ளொருவுத லொழுக்க மென்றான்.

10-வது பாட்டு, "உறுபொருள்..........அறிவதாகும்" என்றது எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்றாங்குப்பொருள்களின் உண்மைத் தன்மையை உணர்வது அறிவு என்றபடி. அங்ஙனம் உணர்ந்ததை மனத்தில் நன்கு தெளிந்துகொள்ளுதல் காட்சியாகும்.

11-வது பாட்டு, தெரிவிலாச் செலவு—ஆராய்ந்துணரும் அறிவின்றிச் செல்லுதல். கொலை, பொய், களவு, பிறர்மனை நயத்தல், பொருள்களிற் பற்று இவை ஐந்தும் இல்லாமை அணுவிரதம் என்பர். இவற்றோடு புலால், கள், தேன் இவற்றையும் விலக்குதல் ஒழுக்கமாம். புலைசு—புலால்.

(31) மேருமந்தர புராணம்.

வைசயந்தன் மூத்திச்சருக்கம்.

வைசயந்தன் தன் பௌத்திரனாகிய வைசயந்தனுக்கு முடி சூட்டித் தன் புத்திரருடன் துறவெய்துதல்.

1 வானத்தின் றுள்ளி யல்லால் வருந்தினும் விரும்பல் செல்லா
மானத்தை யுடைய புள்ளின் மைந்தர்கள் மறுத்து நிற்பக்
கானப்போ ரேற்றின் பாரங் கன்றின்மே லிட்ட தேபோற்
றேனொத்த முடியை மன்னன் சிறுவன்றன் சிறுவற் கீந்தான்.

2 மண்ணினுக் கிறைமை பூண்டான் மன்னன்வை சயந்த னென்றே
திண்முர சறைந்த பின்னைச் சிறப்பொடுஞ் சென்று புக்கு
புண்ணியக் கிழவன் றன்னைப் புகழ்ந்தடி பணிந்து பொய்தீர்
பண்ணவர் படிவங் கொண்டார் பார்த்திபர் குழாத்தி னோடே.

1-வது பாட்டு, வைசயந்தன் கந்தமாலினி நாட்டு மன்னன்; இவன் புதல்வர் சஞ்சயந்தன், சயந்தன் என இருவர்; இவ் விருவரும் அரசேற்காமல் துறவை விரும்பினர்; அதனால் சஞ்சயந்தன் மகன் வைசயந்தனுக்கு அரசளிக்கப்பட்டது. பெரிய போரேறு சுமக்கும் பாரத்தை ஒரு சிறு கன்றின் மேல் வைத்தாற்போல வைசயந்த மன்னன் அரசபாரத்தைத் தன் பெயரன் (பேரன்) பால் வைத்தனன்.

2-வது பாட்டு, சிறப்பு—பூசைக்குரிய பொருள்கள். புண்ணியக் கிழவன்—கடவுள். படிவம்—விரதம். வைசயந்தனும் புதல்வ ரிருவரும் பண்ணவர் படிவம் கொண்டனரென்க.

3 மணிமுடி கலிங்க மாலை மணித்துணை ரனைய குஞ்சி
பணியொடு பரிந்து நின்றார் பருமத யானை.
யொத்தார்
குணமணி யணிந்து குன்றாப் பண்ணவர் குழாத்தைப்
புக்கார்
இணையிலாச் சித்தி நன்னாட் டிளவர சியன்ற
தொத்தார்.

4 ஆங்கவ ரங்க பூவ மாதிநூ லோதி யார்க்குந்
தாங்கருங் கொள்கை தாங்கித் தாமுடன் சென்று
பின்னா
ஓங்கிய உலக மூன்று மொருவழிப் படுக்க லுற்றுப்
பாங்கினால் வைச யந்தன் பருப்பத சிகரஞ்
சேர்ந்தான்.

5 மழைபனி வெயில்க டாங்கி மலைமிசை மலையைப்
போல
வெழில்பெற நின்ற போழ்தின் எழுந்தசுக் கிலத்தி
யானம்
பழவினை முழுதும் பாறப் பரந்தன வனந்த நான்மை
முழையிடைப் பழகிற் றேனும் விளக்கின்முன்
னிருளுண் டாமே.

3-வது பாட்டு—மணித்துணைரனைய குஞ்சி—நீலமணியின் ஒளிக் கொழுந்துபோன்ற கூந்தல். குணமணி—குணமாகிய மணி. சித்தி—மோக்ஷம்.

4-வது பாட்டு—அங்கபூவமாதி—அங்காகமம் பூர்வாகமம் முதலிய.

5-வது பாட்டு— சுக்கிலத்தியானம்—உயிர் தன் அவிச்சைகெட்டு இறைவனோடு ஒற்றுமையுறப் பாவித்தல். (குறள் 358)

6 சித்தநல் விரதஞ் சென்ற தாதுக்கள் போலத் தாது
வொத்தொரு வகைய தாகி யொளியுமிழ்ந் திலங்கு மேனி
சித்திரத் தியற்றப் பட்ட படமெனத் தேவர் சென்றார்
முத்திபெற் றிருந்த கோவு மதன்முன்னர் விளக்கை யொத்தான்.

7. தேமலர் மாரி சுண்ணஞ் சிதறினர் திசைகண் முட்டத்
தூபமு மெழுந்த தீபஞ் சுடர்ந்தன மிடைந்த தேவர்
தாமமுஞ் சாந்து மேந்தித் தாம்பணிந் தெழுந்து நின்று
காமனைக் கடந்த கோமான் கழலடி பரவ லுற்றார்.

8 உவத்தல் காய்தலா லுன் றிரு வடித்தலத் தெழுந் தோர்க்
குவத்தல் காய்தலுன் றிருவுளத் தொன்றுநீ யிலையேற்
சுவர்க்க மாநர கத்தவர் துன்னுவ துனது
தவத்தின் தன்மையோ தம்வினைத் தன்மையோ வருளே.

6-வது பாட்டு—சித்தநல் இரதம்—இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்குமாறு செய்யப்பட்ட ரசம். சென்ற தாதுக்கள் போல—அந்த ரசம் சேர்ந்த இரும்பு முதலியவை பொன்னாதல்போல. தாது......மேனி — உடம்பிலுள்ள தாதுக்கள் ஒத்து ஒருவகைப்பட்டு மேனி ஒளியுமிழ்ந்து இலங்குவதாயிற்று.

8-வது பாட்டு—உவத்தல், காய்தலோடு உன் திருவடியை யடைந்தவரிடத்து நீ உவத்தல் காய்தல் இல்லை; ஆயின் உவந்து நின் திருவடியடைந்தோர் சுவர்க்கமடைதலும், காய்ந்து நின் திருவடியடைந்தோர் நரகமடைதலும் நின்தவப் பெருமையாலோ அவரவர் வினையாலோ அருள்க என்றபடி. எழுந்தோர்க்கு—அடைந்தவரிடத்தில்.

9 குற்ற மொன்றிலை யெனிற்குற்ற மூன்றுநீ யுரைத்தாய்
பற்று நீயிலை யென்னிலு லோகமுன் பற்றுஞ்
சுற்ற நீயிலா யென்னிலெவ் வுயிருமுன் சுற்ற
மற்ற நீயிலாய் முனிவர்கோ னுயதோர் மாயம்.

10 அறிவு நீயிலை யொன்றல தெமக்கவை யநேகம்
பிறவி நீயிலை யாங்களோ பிறவியிற் பெரியோம்
செறிவ தோர்கதி யுனக்கிலை யெமக்குநான் கிவற்றால்
வறியை நீயெம்மை யாட்கொண்ட வசியிது பெரிதே.

9-வது பாட்டு—இதுவும் அடுத்த பாட்டும் வெளிப்படையில் முரண்தோன்ற, தாற்பரியத்தால் முரணில்லாதவாறு இறைவனைப் புகழ்ந்தவை. குற்றம் மூன்று—காமம் வெகுளி மயக்கம். அற்றம் நீ இல்லாய்—சோர்வு இல்லாத நீ.

10-வது பாட்டு—நீ அறிவு ஒன்றலது இலை எனக்கூட்டுக. அறிவு ஒன்று—கேவல ஞானம். 'அநேகம்' என்றது மக்கள் அறிவின் பலவகையை. பிறவியிற் பெரியேம்—அளவற்ற பிறப்புக்களையுடையேம். நான்கு—நான்கு கதிகள்; மக்கள், தேவர், நரகர், விலங்கு என்பன.

(32) தேம்பாவணி.

பாலமாட்சிப்படலம்.

1 [1]என்றெழுந் துவப்பி லோங்கி [2]யிரட்டலைக்
கடலி னீந்தி
நின்றெழுங் கரைகண் டாற்போ னிழற்றிய திமிசு
விம்முங்
குன்றெழுங் குவடு நோக்கிக் [3]குயில்குயின் றகவ
மஞ்ஞை
அன்றெழுந் [4]தெழுதும் வண்ணத் தலர்ந்தகா
னுழைந்தான் சூசை.

2 [5]காரிடைக் குளித்த மின்போற் கானிடைக் குளிப்பப்
போகி
நீரிடைக் குளித்த[6]பேவு நிறநரை குளித்தோர்
மூப்பன்
றூரிடைக் குளித்த தேன்போற் றயையிடைக்
குளித்த சொற்கொண்
டேரிடைக் குளித்த பாலா வியம்புதி போவ
தென்றான்.

---

1 சூசை யென்பவர் மூன்று வயதுள்ள இளம் பருவத்தே துற வடையவிரும்பிக் கானகம்சென்று, ஆண்டுள்ள ஓர் மலை யைக்கண்டு அதன் சிறப்பைத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்; அங்ஙனம் சொல்லிக் கொண்டெழுந்து என்றபடி.

2 ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலினின்றும் நீந்தி.

3 குயில் கூவ (குயின்று—குயில),

4 எழுதிப்பார்க்கத்தக்க அழகோடு மலர்கள் மலர்ந்துள்ள காடு.

5 மேகத்தில் மின் மறைந்தாற்போலச் சூசை காட்டிற்குள் மறையப்போய்.

6 பேவு—நுரை. நுரைபோன்ற நிறமுள்ள நரைபொருந்திய ஓர் முதியவன்.

3 [1]வீடிழந் திகல்செய் பேய்கள் வினைப்பகைக் கஞ்சி
யோடி
நாடிழந் தொளித்துக் கானி னயந்துறை யறத்தை
நாடி
யீடிழந் துயர்ந்த குன்றத் திடத்துநா னொளித்த
லுள்ளித்
[2]தோடிழந் தேகு கின்றேன் றுணையிழந் துயர்ந்த
[3]பாலன்.

4 கார்முகத் தலரு முல்லை கடிமுகத் திமைக்கும் வண்கா
லூர்முகத் தஞ்சு நாவா யுடைத்திருக் கொணருங்
கொல்லோ
போர்முகத் தெதிரா நீங்கிற் புணருமோ விழைந்த
வெற்றி
யேர்முகத் துணர்விற் றேர்ந்த விளவலோ
யென்றான் மூத்தோன்.

---

1 வீடிழக்குமாறு மாறுபாட்டைச் செய்கின்ற பேய்களாகிய வினைப்பகைக்கு அஞ்சியோடி. (வீடிழந்து—வீடிழக்க).
2 தோடு—தொகுதி. நாட்டினுள்ள மக்கட் கூட்டம்.
3 பாலனாகிய யான்.

4-வது பாட்டு—காற்றைத் தாங்கவியலாத நாவாய் பிறநாடு சென்று செல்வங்கொணருதல் இயலாது; போரில் எதிராது நீங்கியவர் வெற்றியடைதல் இயலாது; அங்ஙனமே நாட்டிலிருந்தால் உண்டாகுந் துன்பங்கட் கஞ்சியவர் மேன்மை யடைதல் இயலாது; ஆதலால் நாடு திரும்புக என்பது கருத்து.

5 பைம்பொறி யரவி னஞ்சிற் பழிப்படப் பகைத்துக் கொல்லு
[1]மைம்பொறி யன்றிச் சூழ்ந்த வனைத்துமே பகைத்த காலைச்
செம்பொறி பெய்த பைம்பூ சிதைந்தென வளமு[2]மேங்கி
[3]வெம்பொறி யாக வாற்றா வேட்கையே யென்றான் சூசை.

6 பொன்னொளி காட்டுஞ் செந்தீ புகையகில் மணத்தைக் காட்டும்
[4]மின்னொளி மணியைக் காட்டும் வினைசெயும் படைக்கல் மாட்சி
[5]தன்னொளி காட்டுந் துன்பந் தகுதியிற் குன்றா வூக்கம்
மன்னொளி காட்டு நல்லோய் மறையிது வென்றான் சான்றோன்.

---

1 ஐம்பொறியே யன்றியும் நம்மைச் சூழ்ந்த அனைத்துமே பகையாயவிடத்து.

2 ஏங்கி—ஏங்க.

3 கொடிய நெருப்பாக ஆற்றவொண்ணாத வேட்கையே விளையும். (விளையும் என ஒருசொல் வருவிக்க.) அன்றி வேட்கையை வெம்பொறியாகவாற்றா எனக் கொள்க. இப்பொருளில் ஆற்றா—ஆற்ற வொண்ணாதனவாம் என்றபடி. வேட்கை–வேட்கைகள்.

4 வினைசெயும் படைக்கல் (சாணைக்கல்) மணியின் மின்னொளியைக் காட்டும் எனக் கொள்க.

5 (மேற்கூறப்பட்டவைபோலத்) துன்பக்காலத்தில் தன் தகுதியிற் குன்றாத வூக்கம் தன்மாட்சி ஒளியைப் (பெருமையை)க் காட்டும்.

7 உள்ளுயி ருண்ணுங் கூற்றின் உடன்றுகொல் நசையைக் கொல்லத்
தெள்ளுயிர் மருட்டுஞ் செல்வத் திரள்துறந் தொருங்கு நீங்கிக்
கள்ளுயி ருயிர்த்த பைம்பூங் கானில்வாழ் தவத்தை நாட
லெள்ளுயிர் தெளிக்கும் வண்ண மென்பரே யென்றான் [1]சேடன்.

8 ஒருங்கெலா நீக்க லோர்நாள் உறுதியே [2]பகைத்துச் சூழ்தல்
மருங்கெலா மிருப்ப வுள்ள வாயடைத் திடைவிடாது
[3]நெருங்கெலா நுழையாக் காத்தல் நெடும்பயன் பயத்த நீண்போர்
சிருங்கெலா நிலையி னூங்குந் திறமிதென் றய்யன் சொன்னான்.

9 நாடொறுங் கனிந்த செந்தேன் நற்கனி யளித்த னன்றோ
கோடுறு மரமுந் தன்னைக் கொடுத்தலே நன்றோ விவ்வா
றீடுறு [4]முளது முள்ளு மீதல்செய் துறவே யென்பார்
வீடுறு நூலோ ரென்ன விளம்பினா னிளவல் மாதோ.

---

1 சிறந்தோனாகிய பாலன்.

2 பகைத்துச் சூழ்தலையுடைய பொருள்கள்.

3 நெருங்குகின்ற எல்லா ஆசைகளும் மனத்துள் நுழையாமற் காத்தல்.

4 உள்ள பொருளும் உள்ளமும் துறக்கின்றதுறவு. துறவே வீடுறும் என்பார் நூலோர் எனக் கூட்டுக.

10 காயொடு மரந்தந் தாற்போற் கடித்துற வருமை வெஃகி
வேயொடு நெருங்குங் கானில் விழைந்துதா னொழுகல் நன்றோ
[1]தீயொடு குழைமற் றோருஞ் செவ்வுறச் செலுத்த னன்றோ
தூயுடு வுணர்வோ யென்னச் [2]சொற்றினான் குரவ னம்மா.

11 பெற்றற மணிந்த நல்லோய் பிறர்மனை விளைத்த செந்தீ
யற்றற வோடித் தன்வீ டழன்றதே போல வேட்கைப்
பற்றற வுணர்த்தி யுள்ளம் பற்றிய நசையில் வெந்தா
லிற்றற வுறுதி யென்னோ வென்றன னாரிய சூசை.

12 தீதிலா விடமே வேண்டிற் சேணுல கெய்தல் வேண்டுங்
கோதிலா வனத்துந் தன்னைக் கொணர்ந்தகால் விளையும் [3]வெம்போர்
ஏதிலா தொழுக லுள்ளத் தியல்பினா லாகு மன்றி
வாதிலா விடத்தா லாகா மைந்தனே யென்றான் சான்றோன்.

---

1 தீமையினால் வாடும் உலகமக்கள்.
2 சொன்னான் என்பது சொற்றினான் என வந்தது.
11-வது பாட்டு—பிறன் வீட்டிற்பற்றிய நெருப்பை யவிக்க ஓடி, தன் வீடு நெருப்புப்பிடிக்க விடுவான்போலப் பிறர்க்கு உறுதிகளை எடுத்துக்கூறித் தன் உள்ளம் ஆசையினால் துன்புறவிட்டால் அவனுக்குண்டாகும் உறுதி என் உளது என்றபடி.
3 வெம்போர் என்றது மனம் ஒருவழிப்படாது அலைதலை.

13 [1]ஈரறம் வழங்கும் வண்ணத் தியாவையுந் துறந்த தன்மை
பேரற [2]மென்பக் கேட்டேன் பின்னையத் துறவி னூங்கு
மோரற முளதே லையா வுரைக்குதி யுரைத்த வன்ன
சீரறம் விழைவே னென்றான் சேணுல குரிய பாலன்.

14 ஈரறம் [3]பிரிந்து நோக்கி லியம்பிய துறவின் மாட்சி
பேரற மாவ தன்றிப் பிரிவிலா விரண்டுந் தம்முள்
ளோரற மாகச் சேர்க்கி லுறுதியும் பயனு மோங்கத்
தோரற மாகு மென்றான் செழுந்துறைக் கேள்வி மூத்தோன்.

15 பாற்கலத் திட்ட தெண்ணீர் பால்குன்றும் பண்பு மில்லால்
மேற்கலந் தொளிர்ந்த வெய்யோன் வெயிலுமுன் னெரித்த தீபம்
போற்கலந் திசைத்த மற்றப் புண்ணியம் துறவு வாய்ந்த
சாற்கலந் தியல்பை யேற்றுந் தகுதியோ வென்றான் பாலன்.

---

1 இரண்டறங்களாக (இல்லறம் துறவறமாக) வழங்கும் முறைமையில்.

2 "என்பக் கேட்டேன்" என்பது 'என்னக் கேட்டேன் என்றாவது 'என்பகேட்டேன்' என்றாவது இருத்தல் பொருத்தம்.

3 பிரிந்து என்பது பிரித்து என்றிருக்கலாம்.

15-வது செய்யுள்—பாலொடு கலந்த தெண்ணீர் பாலைக் கெடாதாயினும் அதற்கு மேன்மை தராது; வெயில் முன் எரித்த விளக்கும் அங்ஙனமே. அவற்றைப்போலப் பிற புண்ணியங்கள் துறவைச் சிறப்பிக்குமா தில்லை என்றபடி. மற்றப் புண்ணியம், சால்புவாய்ந்த துறவுகலந்து (அதன்) இயல்பை ஏற்றுந் தகுதியோ எனக் கொள்க.

16 [1]தெருட்டகு முணர்விற் சான்றோன் சேடனைத்
தழுவிச் சொல்வான்
அருட்டகு முணர்வன் பூக்க மரும்பொறை
யீகை மற்ற
மருட்டகு மியல்தீர் மாட்சி மதியைமீன் சூழ்ந்த
தேபோற்
பொருட்டகு நாட்டில் வைகும் பொலந்துற
வணியு மன்றோ.

17 கான்வளர் தவத்தைக் கானிற் கண்டெளி தடைவர்
மற்றோர்
[2]தான்வளர் தவத்தைக் கூட்டித் தமர்க்கெலா
நகரிற் காட்டல்
வான்வளர் [3]வலமை பூத்த மாண்பிதே யிதுநின்
பாலாம்
மீன்வள ருணர்வோ யென்று மின்னென
மறைந்தான் சான்றோன்.

16-வது செய்யுள்—நாட்டிலிருந்து துறவு மேற்கொள்வானுக்கு அருள் முதலிய குணங்கள் மதியைச் சூழ்ந்த மீன்போல் நின்று சிறப்பளிக்கும் என்றபடி. நாட்டிலுள்ள துறவியினுடைய இக்குணங்கள் நாட்டிலுள்ளோருக்குப் பயன்படும் என்றபடி.

1 பிறரைத் தெருட்டுதற்கேற்ற அறிவு நிறைந்தோன்.

17-வது செய்யுள்—காட்டிலிருந்து தான் தவத்தையடைதல் எளிது; நாட்டிலிருந்து அத்தவத்தைப் பிறர்க்கும் காட்டுதல் அரிது என்றபடி.

2 தான்வளர்க்கும் தவத்தை.

3 வல்லமை.

18 [1]ஊனுருக் காட்டி வந்த உம்பனென் றறிந்து
போற்றித்
தேனுருக் கோதை யொத்தான் றிளைத்தவின் புருகி
மூழ்கிக்
கூனுருப் பிறையு மெஞ்சக் கொழுங்கதிர் முகத்தில்
வீசப்
[2]பானுருச் சுமந்து [3]நாறும் பவளநன் மதலை
யொத்தான்.

19 பீதியு நெறியுஞ் சொன்ன நிலையெலா முணர்ந்த
பின்னர்
ஆதியு மந்தந் தானு மாயநின் கழலல் லாது
[4]வீதியு மெனக்கொன் றுண்டோ வினையறு
மிறையோ யென்ன
[5]ஓதியும் விறலும் விம்ம [6]வொளித்ததன் னகரஞ்
சேர்ந்தான்.

20 கார்வளர் மின்னின் மின்னிக் கதிர்வளர் பசும்பொன்
னிஞ்சி
வார்வளர் முரச மார்ப்ப மணிவளர் நகரம்வில்செய்
தேர்வளர் பருதி யொத்தான் சென்றுபுக் குவப்ப
யாரும்
பார்வளர் திலக மொத்தான் பழிப்பற விளங்கி
னனே.

---

1 மனித உருவைக் காட்டிவந்த வானவன்.
2 பானு உரு—பானுரு.
3 தோன்றும். ஞாயிற்றின் ஒளியோடு தோன்றும் பவளத் தூணை யொத்தான் என்றபடி.
4 வீதி—தெரு, ஈண்டு வழி.
5 அறிவும் வன்மையும் பெருக.
6 தான் விட்டுவந்த; ஒளியினையுடையதாகிய என்றுமாம்.

விலாதத்துக்காண்டம்.

புனல்விளையாட்டுப்படலம்.

1 அலத்தக மலர்ப்பதத் தாமி னுவெழிற்
சிலைத்தடப் புயமுகம் மதுமெய்ச் சீர்பெறக்
[1]கலைத்தட மதியென வளரக் கண்டுறு
நலத்தகு கண்களித் திருக்கு நாளினில்.

2 [2]பொறிநிக ராமினு வென்னும் பூங்கொடி
அறிவக முகம்மதைக் கூட்டி [3]யாதிநூ
னெறிதரு மக்கமா நகரை நீங்கியே
[4]செறிவள மதினமா நகரிற் சென்றனர்.

3 தன்னுயி ரனைய[5]முன் னவரிற் சார்ந்தவர்
பொன்னடி வணங்கிய பொருவி றங்கையை
என்னுயி ரென்னுயி ரெனத்த ழீஇக்குல
மன்னுயிர் முகம்மதை எடுத்து வாழ்த்தினர்.

மக்காநகரிலிருந்த அப்துல்லாவின் மனைவியாகிய ஆமினு என்பவர், அப்துல்லா என்பவ ரிறந்தபின் தமது குழந்தையாகிய நபி முகம்மதையழைத்துக்கொண்டு, தம்முடைய பெரியதந்தை, தமையன்மார் முதலியோருள்ள மதீனமா நகர்க்குச் செல்ல, முகம்மது அங்குள்ள சிறுவர்களோடு ஓர் குளத்தில் நீராடிய பகுதியைக் கூறும் பகுதியிது.

1 கலைகள் நிரம்புகின்ற பெருமைபொருந்திய திங்கள்போல.

2 இலக்குமியையொத்த.

3 ஆதிநூல்—வேதம். வேதத்திற் சொல்லிய நெறியைத் தரும் மக்கமாநகரம்.

4 வளம் நிரம்பிய மதீனமாநகர்.

5 முன்னவர்—தமையன்மார்.

4 பிடிநடை யாமினு பெரிய தந்தைதம்
[1]வடிவுறு மைந்தரு மன்னு சின்னையர்
குடிவளர்த் திடுங்குலக் கொற்ற வேந்தரு
[2]மடிகளென் றஹ்மதி னடியைப் போற்றினர்.

5 அனநடைச் சின்மொழி யாமி னுதிருத்
[3]தனையருந் தம்பிய ரியாருந் தங்குல
மனைமயி லனைவரு மனம கிழ்ச்சியாற்
கனைகட லமுதென [4]நபியைக் காமுற்றார்.

6 [5]இப்பெரு முவகையுற் றிருப்ப மன்னெறிக்
கொப்பரு மதீனமென் றோது மூரிடைத்
துப்புறழ் மதுரவாய்ச் சிறுவர் சூழ்தர
மைப்புயன் முகம்மதோர் வாவி நண்ணினர்.

7 [6]பண்ணரு மறைநபி பாரிற் றோன்றியே
நண்ணிய புனல்விளை யாட நாடுநா
ளெண்ணுற வகுத்ததென் றிறங்கி [7]வானதி
மண்ணினிற் குடியிருந் தனைய வாவியே.

8 வடுவிழித் தடமுலை யார்கண் மாமத
னடறரு முசைனயி னார்தம் மாருயிர்
கடகரி யெனு[8]மபுல் காசீஞ் செல்வம்போ
லிடனறப் பெருகியங் கிருந்த வாவியே.

---

1 அழகுபொருந்திய மைந்தரும்.
2 குருவென்று சொல்லி.
3 தனையர்—தன்ஐயர் = தமையன்மார்.
4 நபிமுகம்மதி னிடத்தன்பு கொண்டனர்.
5 இவ்வாறு பேருவகை கொண்டிருப்ப.
6 இசைபொருந்திய பொருளுணர்தற்கரிதான வேதத்தினை யுடைய நபிமுகம்மது.
7 தேவலோகத்திலுள்ள நதி பூவுலகில்வந்து குடியிருந்தாற் போன்றது வாவி.
8 அபுல்கரசீம் இந்நூலாசிரியரை ஆதரித்த வள்ளல்.

9 சேடுறு முகம்மது செவ்வி வாய்ப்பநீ
ராடுவ திஃதென வாவி யம்புயம்
பாடுறு மாசணு காது பைந்துண
ரேடலர் போர்வைபோர்த் திருந்த தொத்தவே.

10 கரைதவழ் தென்றலங் காலி னுல்விரை
சொரிமலர் வாவிநீ ரசைந்து தோன்றுவ
தரிதிரைக் கரங்களிற் சங்க மார்த்திட
விருகரை முத்தெடுத் தெறிதல் போலுமே.

11 தேன்மலர்ச் சண்பகஞ் செறிந்த நீழலும்
பானிறக் கதிர்மணற் பரப்பு மன்னமுஞ்
சூன்முதிர் குடவளைத் தொனியும் வைகிய
கான்மலர் வாவிகண் களிப்ப நோக்கினுர்.

12 மணிமுர சதிரமு மதீன மாநகர்த்
திணிபுய வரசர்கள் செல்வ ரியாவரும்
பணிமணி முகம்மது நிறைந்த பங்கயத்
தணிதிகழ் வாவிநீ ராட லுற்றனர்.

13 நிறைதட மசைதலா னிகரி லாமுத
லிறையவன் றூதர்நம் மிடத்தின் மூழ்குறக்
குறைபடா வரியமெய் குளிரு மோவென
நறைபுனல் கலங்கியுண் ணடுங்கல் போன்றதே.

9-வது செய்யுள்—வாவிமுழுதும் தாமரை பூத்திருந்தது, முகமது இங்கு நீராடுவர் எனக்கருதித் தண்ணீரில் மாசு சிறிதும் அணுகாதபடி மலர்களாகிய போர்வை போர்த்திருந்தது போலும்.

10-வது செய்யுள்—தென்றற்காற்றினுல் வாவிநீ ரசைவது, திரைக் கரங்களிற் சங்கவளைகள் ஒலிக்க முத்துக்களை எடுத்துக் கரையில் வீசுவது போலும்.

13வது செய்யுள்—வாவியின் நீரசைவது, இறைவன் தூதராகிய முகமது நம்பால் மூழ்கும்போது அவரது மெய் நன்கு குளிர்ச்சியடையுமோ என்று மனங்கலங்கி நடுங்குவது போன்றது.

14 பம்புநீர் வாவிகண் குளிர்ந்திப் பாரிடை
யெம்பெரு மானம திடத்தின் மூழ்கலாற்
செழ்பொனு டவர்க்குருச் சீர்பெற் றேமெனக்
கம்பிற மம்புயக் கரங்கள் காட்டுமே.

15 தங்கிய புனலிடைக் குளிப்பத் தத்துநீ
ரெங்கணுங் கரைதவழ்ந் திழிந்து தோன்றுவ
கங்கைதன் னுள்ளகங் களிப்புற் றுனந்தம்
பொங்கியே யுடற்புறம் பொசிவ போன்றதே.

16 வடிவுறு முகம்மது வாவித் தண்புன
லிடைகுளித் துயர்தர விலங்கும் வான்முகம்
படிமிசை யாயிரங் கலைகொள் பான்மதி
கடலிடை முளைத்தெழுங் காட்சி போன்றதே.

17 வருந்திமெய் நடுக்கொடு மரைகண் மூழ்குவ
தருந்தவப் பேறெனு மஃறம தின்றிருக்
கருந்தடங் கண்முகந் தாள்கைக் கொப்பெனப்
பொருந்துறே மெனவனம் புகுதல் போன்றதே.

14வது செய்யுள்—முகமது தன்னிடம் மூழ்கப்பெற்றதால், தேவலோகத்திலுள்ள தேவர்களும் அடையாத சிறப்பை நாமடைந்தோம் என்று உள்ளம் மகிழ்ந்து தாமரைகளாகிய கைகளைக் காட்டியது. கண்குளிர்ந்து என்றும், தன்னிடம் குளிர்ந்தென்றும் கொள்க.

15வது செய்யுள்—முகமதும் பிறரும் இறங்கி நீராடுவதால் கரைமேல் ஏறித்தவழ்ந்த நீர், கங்கை மனம்மகிழ, அம்மன மகிழ்ச்சி உடலில் வெளிப்படுவது போன்றது.

16வது செய்யுள்—நீரில் மூழ்கியெழும் முகமதின்முகம், கடலில் முளைத்தெழும் திங்களை ஒத்தது. ஆயிரங்கலைகொள் பான்மதி—இல்பொருளுவமை.

17வது செய்யுள்—தண்ணீரலைதலால் தாமரை நீரினுள் மூழ்குவது முகமதின் கண், முகம், தாள், கை இவற்றிற்கு நாம் ஒப்பாகோம் என்றெண்ணி நீரில் மூழ்குதல் போலும். அஃமதி—முகமது. மேல் அகுமது என்பதும் அவ்வாறே.

18 அருமது வாவிநீ ராடல் காண்டலுஞ்
சகமகிழ் தடக்கரைத் தருக்க டேமலர்
வகைவகை சொரிந்தன வெற்றி வானவர்
புகழொடும் பொன்மலர் பொழிவ போன்றவே.

19 மதுமலர்த் தேனையுண் டிருந்த வண்டினம்
புதுமணச் சுரும்பொடு மிசைத்த பொங்கிசை
சதுமறை முகம்மது தழைத்து வாழ்கவென்
றதிவிதப் புகழெடுத் தறைத லன்னதே.

20 பின்னிய தடத்தரு சினையிற் பேட்டொடு
மன்னிய குயிலினம் வாய்விட் டார்ப்பது
கன்னலஞ் சுவைக்கலி மாவை நந்நபிக்
கின்னண மியம்புமென் றிசைத்தல் போலுமே.

21 பொன்முடி வேந்தர்கள் புதல்வர் தம்மொடு
மன்னவர் முகம்மதும் வாவி நீர்குளித்
தன்னமென் றூவியி னரிய வேண்டுகின்
மின்னினைப் பொதிந்தென வரையில் வீக்கினர்.

22 கணமணிக் கலன்பல வணிந்து கள்ளரு
மணமலர் மாலிகை சூடி வான்றொடு
பணர்தரு பாசடைத் தருவின் பாலுயிர்த்
துணைவரோ டரியெனத் தோன்றல் வைகினர்.

20வது செய்யுள்—வாவியின் கரையில் மரங்களிலுள்ள குயில்கள் தம் பேட்டொடு கூவுவது, முகமதுக்கு வேதத்தை இவ்வாறு ஓதுங்கள் என்று பிறர்க்கு எடுத்திசைப்பது போலும். கலிமா—வேதம்.

21வது செய்யுள்—ஒளிபொருந்திய தம் இடையில் வெண்மையான ஆடையை அணிந்தது, மின்னை ஆடையால் மூடுவது போன்றது என்றபடி.

(34) இரகு வம்மிசம்.

தேனுவந்தனப்படலம்.

1 வைகறையி னித்தகை வனத்தினி லெழுந்தா
னுய்கறை யடிப்படை யொறுத்தரச ராகம்
பெய்கறை நிரப்பிய நிணத்தசை பிடித்தே
மொய்கறை பரித்துமுரண் முற்றுகதிர் வேலான்.

2 மெத்திய பவக்கொடு வினைத்தொகை யறுத்தே
முத்தியை யளிக்குநதி மூழ்கியளி மூழ்க
நித்திய நடத்துநிய மத்திறன் முடித்தே
சித்திய வருட்கடவுள் சேவடி நினைத்தான்.

3 ஏயதன மெய்ப்பொலி யிலங்கொளி யிராமந்
தூயநிழ லெற்றையி னிரட்டிகொடு தோன்ற
மேயதரு வுக்கிடை விழுந்துதிகழ் வெய்யோன்
சேயவொளி சுற்றவுயர் தேனுவை யடைந்தான்.

அயோத்தியையாண்ட திலீபமன்னன் புத்திரப்பேறின்மையால் வசிட்டமுனிவர் கூறியபடி, தன்மனைவி சுதக்கிணையோடு காமதேனுவை வழிபட்ட பகுதி.

1வது பாட்டு, இத்தகைவனத்தினில் என்றது இதற்குமுன் பாடல்களில் காட்டை வர்ணித்ததுகொண்டு கூறியது. உய்—செலுத்தப்பட்ட. கறையடி—யானை. வேலான்—திலீபன்.

2வது பாட்டு, மெத்திய—மிகுந்த. அளிமூழ்க — தன்மனம் கடவுளிடத் தன்பில் மூழ்க. இனி, கடவுளருளில் தான் மூழ்கும்பொருட்டு என்றுமாம்.

3வது பாட்டு, "ஏயதன.........சுற்ற" என்றபகுதியைத் தேனுவின் சிறப்பாகக்கொள்க. அன்றித் திலீபனுக்கு ஆக்குதலுமாம். எற்றையின்—எந்நாளினும்.

4 கொங்கைமலே வம்பொடு குலுங்கியணி கொண்டே
பொங்குமிகு பங்கமொடு பொய்யவிடை நையச்
செங்கைமல ரிற்புதிய செவ்விமலர் செவ்வே
துங்கபல மின்பொடு தரும்படி துலங்க.

5 அனங்கசர வென்றியி னழித்தழகை யெல்லாம்
தினங்கவர் கவின்கொள்வன தெய்வதமி தென்ன
வினங்கொண்மணி யின்கன விளங்கதி ரெறிக்கும்
பொனங்குழையு மன்பினொடு பொற்கொடியி
னூற்ருள்.

6 உத்தம மறைச்சுருப மொத்தசுரை யைத்தான்
சித்தமகிழ் விற்றிரிவ லஞ்செய்தத னின்சீர்
மத்தக மிசைப்பணே மருப்பினடு வட்டே
மத்தமல ரிட்டுற வருச்சனே புரிந்தாள்.

7 சொற்சதுர் மறைப்படி யளித்ததொரு தூய்தா
மற்சனே தனேத்தன தகத்தினிது கொள்ளா
வெற்செரு கலர்க்குவை சுமந்துநெறி யெய்தா
நற்சுரபி முற்செல நயந்துபி னடந்தார்.

4வது பாட்டு, வம்பு—கச்சு. பொங்குமிகு பங்கமொடு—மிக்க கெடுதலோடு (கெடுதலேயடைந்து) பொய்ய—பொய்த்தன்மை யையுடைய. துங்கபலம்—உயர்ந்த புத்திரப்பேருகிய பலன்.

5-வது பாட்டு, "அனங்கசர ....இதென்ன"—மன்மத பாணத்தால் ஆடவர்களே யழித்து அவர் அழகையெல்லாம் கவரும்படியான வனதெய்வமோ இது என்ன. கனவிளங் கதிர்—மிக்க இளஒளி.

6-வது பாட்டு, மறைச்சுருபம் ஒத்தசுரை—வேதவடிவத்தை ஒத்த காமதேனு. திரிவலஞ்செய்து—மும்முறை வலஞ் செய்து. தேம்அத்தமலரிட்டு—அத்தம் தேம் மலரிட்டு—கை யிலுள்ள தேன்பொருந்திய மலரையிட்டு.

7-வது பாட்டு, சொற்சதுர்மறை—புகழ்பொருந்திய நான்மறை. எற்செருகு—ஒளிபொருந்திய.

8 மையல்வினை பற்பல வளைத்துவரு மேனு
முய்யல்விதி யார்க்குநடு வோர்தடையு முண்டோ
பையலர் மதுக்கட லிகந்தழி பலத்தின்
செய்யலி னடந்துவழி தேனதி கடந்தார்.

9 செம்மலை வணங்கியுயர் தேனுவை வணங்கா
மைம்மலை பெருந்துயர் மறுக்கமொடு மாறு
விம்மலி னெடுந்துனை யொடுந்துணிவின் மீண்டாள்
கைம்மலை பிரிந்திடு கவின்கொள்பிடி யன்னாள்.

10 கடற்படு தரளக் கோவை கவிரின்மென் கவின்கொள்
சோதி
மடற்கிடை வைத்த வன்ன நகைச்செவ்வாய்
மஞ்ஞை மீள
மிடற்படு சமர வாகை மிலைச்சிய வீர வேற்கை
யடற்படை யரச னூ லவனொரு தமிய னானன்:

8-வது பாட்டு, உய்யல் விதியார்—நல்வினையுடையார். பையலர் மதுக்கடல்—பசிய பூவினின்று வழிந்த தேனாகிய கடல். செய்யல்—சேறு.

9-வது பாட்டு, மைம்மலை—மயக்கம் பொருந்திய. மறுக்க மொடும் விம்மலினெடும் துனையொடும் மீண்டாள் என்க.

10வது பாட்டு—“கடற்படு.........மஞ்ஞை”—கடலிற் பிறந்த முத்தை முருக்கமலர் இதழின் நடுவே பதித்துவைத்தாற் போன்ற பற்கள் பொருந்திய செவ்வாயையுடைய மயில் போன்ற சுதக்கினை, வீரவேற்கை அவன் எனக்கூட்டுக.

11 உறத்தகு தூணி யார்த்திட் டுளைபசுங் கொடியின் வீக்கி
நிறத்திளங் கிளையிற் றோற்றுஞ் சுரபிபி னெடிது போந்தான்
மறத் தெதிர் மார்பத் தல்லால் வான்றடந் திகிரி மன்னர்
புறத்திடைப் புகாத வாகைப் போர்க்கணைச் சிலையி னானே.

12 கரியகட் பெரிய கொங்கைக் கன்னியர் கவரி வீச
வரியணைப் பொலிந்து தோன்றி நிதிபல வளிப்போ னாணிற்
குரியபுற் கொடிகொ டாவீ யுலவையி னோப்பி யுள்ளந்
திரிவறச் சென்றான் யாரே யூழ்வினை தீர்க்க கிற்பார்.

13 பெருகுமா னேகி னேகாப் பேதுற நிற்கி னில்லா
முருகுநீ ராரி னாராத் துயின்றிடின் முயன்றி ராநெஞ்
சுருகுபே ரன்பி னாலேன் றதனையே தொடரா வொன்றி
யருகுறா வினிது போனா னங்கத னிழலி னம்மா.

14 அடுதிற னிருப வேழக் குழாமடு மரியே றிந்த
நடுவனம் புகுந்த தென்றே குறையினை நவில்வான் போலப்
படுமதக் குன்றக் கோடு படும்வழி பாய்பால் சோர்க்கு
நெடுநிலைச் சரளங் கண்ணீர் சொரிந்தென நின்ற தன்றே.

11வது பாட்டு—உளைபசுங் கொடியின்வீக்கி — குடுமியைப்பசிய கொடியினாற்கட்டி. மறத்தெதிர் திகிரிமன்னர் மார்பத்தல்லால் புறத்திடைப்புகாத போர்க்கணைச் சிலையினான் என்க. புறங்கொடுத்தார்மேற் செல்லாத திலீபன் இயல்பை அவன் கணைமேல் ஏற்றிக் கூறினார்.

13வது பாட்டு—துயின்றிடின் முயன்றிரா—ஆதுயின்றால் தான் துயிலாது முயன்று அதனைக்காத்து.

14வது பாட்டு—யானையால் குத்தப்பட்டுப் பால்வடியப் பெற்ற சரளமரம் திலீபன் காட்டிற்கு வந்ததுபற்றிக் கண்ணீர் சொரிவது போன்றது என்க.

15 வளியரிற் சேர்ந்து செம்பொ னேற்றுள வறுமைப் பால
வெளியரிற் பொலிந்த வோகோங் கல்லிநென் மணிக ளேந்திக்
களியரிச் சுருதி யோடு நிற்றலாற் கடன்செய் வேத
வளியரிற் சிறந்த வேந்தற் கம்மலர்க் காந்த ளம்மா.

16 மாணிழைக் கொடிய ஞர்தம் வடிவென வயங்கு கானிற்
சேணினிற் றங்கு மேனுந் தெய்வவான் சிந்தை யோடிப்
பேணியற் கலைதேர் வேத முனிவரன் பெரிய யாக
நீணிலைச் செல்லத் தேனு நெறியடை மீண்ட தன்றே.

17 மையகட் கயல்கள் வேந்தன் மேனியின் வளத்தார் சிந்துந்
துய்யநற் றேனுந் தூளுந் துவன்றிய தொய்யற் றுஞ்சக்
கொய்யலர்க் குவையு மற்றுங் கோல்வளைக் காந்த ளேந்தித்
தையன்முற் றேற்ற வேள்வித் தவவனஞ் சார்ந்த தன்றே.

15வது பாட்டு—வளியர்—வள்ளியர். கோங்கு அல்லி—கோங் கரும்பு. களியரி—தேனுண்டவண்டு. காந்தள்மலரின்மேல் கோங்கரும்பு வீழ்ந்துகிடப்ப, வண்டுகள் சூழ்ந்து பாடுந் தன்மை, கொடைமேற்கொண்ட மன்னன்பால் வேதமந்திரங் களோடு அட்சதையைக் கையிற்கொண்ட அந்தணனை ஒத் தது. வேந்தற்கு வேற்றுமை மயக்கம்.

16வது பாட்டு—சிந்தை ஓடி — சிந்தையால் உணர்ந்து முனி வரன்—சிறந்த முனிவனாகிய வசிட்டன்.

17வது பாட்டு—“மையகட்கயல்கள் வேந்தன்...........துஞ்ச” சுதக்கிணையின் கண்கள் திலீபன் மார்பை நோக்க என்றபடி.

18 புலம்படப் பெரிது போற்றி மும்முறை புரிவ ருது
வலம்படச் சூழ்ந்து பூசை மாட்சியின் வழங்கி மற்றோ
யுலம்படத் திரண்ட தோளான் றன்னய லொல்கி நின்றா
டிலம்படக் கவினுந் துண்டத் தரிவையர் திலக மன்னாள்.

19 தடந்தரு சுரைக ளூறித் தரிப்பில்பாற் றாரை சிந்திக்
குடந்தரு மடிபூ ரிப்ப வல்லைபோங் குளிர்பொற் றேனுக்
கடந்தனி னின்று பூசை கொண்டது நோக்கிக் கன்றாத்
திடந்தன தகத்துக் கொண்டான் றீர்க்கருஞ் சிறுமை தீர்வான்.

20 வான்றருஞ் சுரபி யாக நிலைபுக வரத்தின் மிக்காய்த்
தோன்றிய முனிவன் பாதஞ் சென்னிமீச் சூடித் தோமில்
கோன்றன் பன்னசாலை கூடிநீ ணியதி முற்றி
யான்றன தருகு சார்ந்தா னருக்கனு மத்தம் புக்கான்.

18வது பாட்டு—மற்றோய் உலம்படத் திரண்டதோள்—மற்போருக்குரிய தன்மையுடையதாய், உலத்தை ஒத்த திரண்ட தோள். உலம்—திரண்டகல்.

19வது பாட்டு—கன்றா — வருந்தாத. தீர்க்கரும் சிறுமை — போக்குதற்கரிய (புத்திரப்பேறின்மையாகிய) சிறுமை.

20வது பாட்டு—வான்தரும் சுரபி—பெருமை பொருந்திய காமதேனு. தன்னையடைந்தார்க்குச் சிறப்பினைத்தரும் காமதேனு என்றுமாம். தோமில்கோன்—குற்றமற்ற. திலீபன். தன என்பதில் அ சாரியையாகக்கொள்க.

21 மருள்சுமந் தாலோன் வைக வதனவா ணிலவு போர்ப்பச்
சுருள்சுமந் தொளிருஞ் செவ்விச் சுரும்புசூழ் தொங்கற் கோதை
யிருள்சுமந் தெரிசெஞ் சோதி விளக்கம தேந்தி நெஞ்சிற்
றெருள்சுமந் தங்க ணுற்றாள் சேயரிக் கருங்க ணாளே.

22 அயனகு விளக்கம் வைத்திட் டம்மலர் தூய்நின் றேத்திப்
புயனவி றடக்கை யான்றன் பாங்கரிற் பொலிந்தா ளன்னாள்
கயினிடு நறிய வாசக் கட்டலைக் கமழ்தா தீன்ற
வியனறு மலரஞ் சேக்கைத் துயின்றதவ் வின்பத் தேனு.

23 இயன்றது துயில மாடே யிருநிலத் திறைவ னின்பாற்
றுயின்றன னவனி மாதைத் தோய்ந்தன னென்னத் தோகை
முயன்றுற வூடு மாபோற் றுயின்றன ளயலே மூடப்
பயின்றிடு மெல்லி நீக்கி யுதித்தது பரிதிப் பானு.

21வது பாட்டு—ஆலோன் மருள் சுமந்து வைக—சந்திரன் மயக்கத்தைக் கொண்டுவைக (சுதக்கிணைமுகவொளிக்குத் தோற்று மயங்க என்றபடி) சுருள்சுமந்து — சுருள் பொருந்தி. நெஞ்சில் (புத்திரப்பேறு உண்டாகும் என்னும்)தெளிவைக்கொண்டு.

22வது பாட்டு — கயின் — கையின். கள் தலைக்கமழ்தா தீன்ற மலர் — தேனையுடையதாய், தாதினைச் சொரிகின்ற மலர். இன்பத்தேனு — இன்பமளிக்குந்தேனு. அன்றி, திலீபன் சுதக்கிணை இவர்களின் வந்தனையால் மகிழ்ச்சிகொண்டதேனு என்றுமாம்.

23வது பாட்டு-காமதேனுவின் அயலில் பூமியின்மேல் படுத்துத் துயின்றனன் திலீபன்; பூமிதேவியைத் தழுவினன் என ஊடினள்போல. அவன் மனைவி அவன் அயலே துயின்றனள் என்க.

(35) மருதவன புராணம்,

விசுவாமித்திரச்சருக்கம்.

1 பரவுதெண் டிரைநீர்த் துங்க பத்திரா தீரந் தன்னிற்
சுரர்புகழ்ச் சத்த கோடி சுராலய மென்ன வோரூர்
திருவள ரணைய வூரிற் றிகழுமோ ரந்த ணாளன்
தருமசிந் தனையு மீசன் றன்னடிக் கன்பு மிக்கான்.

2 புலருமுன் னெழுந்து மூழ்கிப் புனிதநீ றணிந்து தும்பை
குலவுமல் லிகைவெண் முல்லை கோங்குமந் தாரை சாதி
நலனுறு நீல மாதி நால்வகை மலரும் வில்வம்
பொலிதுள வாதி யுங்கொண் டீசனைப் பூசிப் பானால்.

3 காதலிற் பூசிப் போர்கள் கலந்திடு மூலர்ந்த போது
கோதுறு சிலந்தி யெச்சங் குறையிதழ் சுருங்கல் வாட
லோதிடு மயிர்ச்சிக் குண்ட லுறுபுழுக் கடிக ளாதி
சோதியா தருச்சிப் பாரேற் குருடராய்த் துலங்கு வார்கள்.

மருதவனம்—திருவிடைமருதூர்.

1வது பாட்டு—சுரர்புகழ்—தேவர்களும் புகழுந் தன்மையுள்ள. ஓரூர்—ஓரூர் உள்ளது.

2வது பாட்டு—மூழ்கி—நீராடி. குலவுமல்லிகை — விளங்கும் மல்லிகை மலர். சாதி — சாதி மல்லிகை மலர். நால்வகை மலர்—கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ.

3வது பாட்டு-சிலந்தியெச்சம்—சிலந்தியினால் அசுத்தம் செய்யப் பட்ட மலர். மயிர்ச் சிக்குண்டல்—மயிர்ச் சிக்குண்ட மலர். சோதியாது — மேற்கூறப்பட்ட குறைகள் இல்லாதவாறு ஆராய்ந்து பாராமல்.

4 பூசனைக் குரிய மற்றைப் பொருள்களு மினிது சோதித்
தாசுள தகற்றல் வேண்டு மனையவன் சோதி யாது
தேசுறு பூசை செய்தான் றெரித்திடு மலர்க டம்மி
லேசுறு புழுவெட் டுண்ட மலருமொன் றிருந்த தோர்நாள்.

5 விளம்புமக் குற்றந் தன்னால் விழிகளின் விடைய மேக
வுளம்பதைத் திரங்கி யேங்கி யுற்றவா றிஃதென் றோரான்
வளந்தரு வசிட்டன் றன்பான் மருவியீங் கெளிய னேற்குக்
களந்தரு குருடு வந்த காரண மென்ன வென்றான்.

6 மாதவ னிமயச் செல்வி மணாளனை யிதயத் தெண்ணி
யோதுவ னந்தணாள வுறுபொருள் சோதி யாமற்
சோதியர்ச் சனைசெய் தாயத் துணரினோர் பழுது போந்த
தாதலி னாத னாகி யரந்தையுற் றிடுகின் றாயால்.

4-வது பாட்டு—பூசைக்குரிய பொருள்கள் எல்லாவற்றையும், பூக்களை ஆராய்வது போலவே ஆராய்ந்து குற்றமுள்ளவற்றை அகற்றல் வேண்டும் என்றபடி. அனையவன்—முதற்பாட்டிற் கூறப்பட்ட அந்தணாளன். தெரிந்திடும் மலர்கள் தம்மில்—ஆராய்ந்து இட்ட மலர்களில்.

5-வது பாட்டு—விழிகளின் விடையம்-விழிகளிலுள்ள கருமணி. களம்—கருமை—இருள்.

6-வது பாட்டு—"மாதவன்......ஓதுவன்"—வசிட்டன் சிவபெருமானைத் தியானித்து அந்தணனுக்குற்ற குற்றத்தை ஆராய்ந்து ஓதுவானாயினான். சோதியர்ச்சனை செய்தாய் — சிவபெருமானுக்கு அருச்சனை செய்தாய். ஆதன் — குருடன். அரந்தை—துன்பம்.

7 வாடன் மீதுநீ விழியொளி மருவுறு மெழில்செய்
மாட மீதுறு கொடியினான் மதிமறுத் துடைக்கு
மீடு தங்கிய விடைமரு தெனும்பதி யெய்தி
யாட கப்புன லாடுறி னையமின் றைய.

8 ஆண்டு றைந்திடு மருதநா யகனிணை யடியைக்
காண்டல் செய்துநீ டன்பொடு கைதொழு தேத்தில்
வேண்டுமி யாவையு முதவிடும் விரைவினே
கென்றான்
பூண்ட காதலன் விடைகொடு போயினன்
மறையோன்.

9 ஏய்ந்து சீரிடை மருதிடை யிலங்கிடை வாளை
பாய்ந்து டுக்களை யலைத்திடு பசும்பொனீர் வாவித்
தோய்ந்தெ ழுந்தனன் விழியொளி தோன்றிய
தாங்கே
சூழ்ந்த காரிருள் நீங்கிடத் தோன்றுமா தவன்போல்.

10 மனங்க ளித்தன னியாவரும் வியந்தனர் மதனை
யனங்க னாக்கிய விழியினா னடிமல ரிறைஞ்சி
யினங்கொ ணாண்மலர் சொரிந்தருச் சனைமுறை
யியற்றிக்
கனங்கு லாஞ்சில வரங்களுங் கரங்கொடு சென்றான்,

7-வது பாட்டு—நீ வாடல் விழிமீது ஒளிமருவுறும் எனக்கூட்டுக. ஒளி—முற்கூறிய விடையம். எழில்செய் மாடம், தன்மீதுறு கொடியினால் மதி மறுத்துடைக்கும் இடை மருது எனக் கொள்க. ஆடகப்புனல்—கனக தீர்த்தம்.

8-வது பாட்டு—மறையோன் பூண்ட காதலனாய்ப் போயினன் எனக்கூட்டுக.

9-வது பாட்டு—இடை மருதிடை சீர் ஏய்ந்து இலங்கு பசும் பொனீர் வாவி எனக்கூட்டுக.

10-வது பாட்டு—மதனை அனங்கனாக்கிய விழியினான்—மன்மதனை உடல் இல்லாதவனாக்கிய விழியையுடைய சிவபெருமான். இனங்கொள் நாண்மலர்—நால்வகையாக உள்ள புதிய மலர்கள். கனங்குலாம்—பெருமை பொருந்திய.

11 அத்த னுத்தனைச் சிலபக லகன்றபின் னகற்றி
நித்த னைப்பணிந் தருச்சனை நிரப்பின திறத்தால்
இத்த லத்துமேற் பிறப்பினி லிசைபெறு விசுவா
மித்தி ரத்தனிக் குரிசிலாய்த் தவத்தினு மிருந்தான்.

12 தவத்தின் மேலவ னாகிய காலையிற் சலச
பவத்தி னானினி தியற்றிடு படைப்பினுக் கவன்முன்
புவிக்கண் மாறுறு விதிதனைப் புரிந்தன னிவையு
நவிக்க ரத்திடை மருதிறை வனைப்பணி நலனே.

13 சுருதி வல்லவ னுமொரு தூயவன் மேவி
மருத வாணனைப் பணிந்துமேன் மாதவத் துயர்ந்த
விரிவி னைப்புகன் றனமினி விளங்குதென் கூடல்
வரகு ணப்பெருந் தென்னவன் மாண்பெடுத்
திசைப்பாம்.

11-வது பாட்டு—அத்தனுத்தனை—அந்த உடலை; (பார்வை யிழந்து பின் பார்வை பெற்ற அவ்வுடலை). மேற்பிறப்பினில்—மறு பிறப்பில். அவ்வந்தணனே மறுபிறப்பில் விசுவாமித்திரனாயினன் என்றபடி.

12-வது பாட்டு—சலசபவத்தினன்—(திருமால் உந்தித்) தாமரையிற் பிறந்த பிரமன். விசுவாமித்திரன் வசிட்டனோடும் தேவர்களோடும் மாறுகொண்ட காலத்தில் யானே படைப்புத் தொழிலைச் செய்வேன் எனத் தொடங்கிச் சில காரியங்களைச் செய்தனன்; அக்கதைக் குறிப்பு ஈண்டுக் கூறப்பட்டது. நவிக்கரத்து—மானைக் கையிலேந்திய.

13-வது பாட்டு—ஓர் அந்தணன் மருதவாணனைப் பணிந்து மறு பிறப்பில் சிறந்த தவமுனிவனாகிய வரலாற்றைக் கூறினோம்; மேல் வரகுணபாண்டியன் மாண்பினைக் கூறுவாம் என்றபடி.

THE
TRICHINOPOLY UNITED PRINTERS, LIMITED,
TRICHINOPOLY.